# கொய்த மலர்கள்

அ. மு. பரமசிவானந்தம்

தமிழ்க்கலைப் பதிப்பகம்
தமிழ்க்கலை இல்லம்
சென்னை-30

# கொய்த மலர்கள்

அ. மு. பரமசிவானந்தம்,
எம். ஏ., எம். லிட்

★

வள்ளியம்மாள் கல்வி அறம்

★

தமிழ்க்கலை இல்லம்
சென்னை - 600030

உரிமைப் பதிப்பு : ஆகஸ்டு 1960
இரண்டாம் பதிப்பு : அக்டோபர் 1975
மூன்றாம் பதிப்பு : பிப்ரவரி 1978

விலை ரூ 4-50

[மத்திய அரசு வழங்கிய சலுகைத்தாளில்
அச்சிடப் பெற்றது]

விற்பனை உரிமை:
**பாரி நிலையம்**
**சென்னை-600001**

---

மெட்ரோபாலிட்டன் பிரிண்டர்ஸ், சென்னை-2

# முன்னுரை

சென்ற சில மாதங்களில் நாட்டில் உலவும் பல இதழ்களுக்கு எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். சில சொற்பொழிவுகளும் இணைக்கப்பெற்றுள்ளன. இஃது ஒருபொருள் பின்னிய பெருநூலன்று. இந்நூலில் பதினேழு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. ஒரு சில பொருள் வகையால் ஒத்திருக்கலாம். ஆனால் ஒவ்வொன்றும் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு தேவை கருதி எழுதி அனுப்பப்பட்டதாகும். கடவுள் நெறியும் இதில் காட்டப் பெறுகின்றது. உள்ள அழகுக்கு எனச் சில கட்டுரைகளும், உடல் அழகுக்கெனச் சில கட்டுரைகளும் மொழிபற்றிய சில கட்டுரைகளும் இதில் இடம் பெறுகின்றன. மக்கள் வாழ்வுக்கு - சமுதாயத் தேவைக்கு - இன்றியமையாத பொருளின் அடிப்படையிலேயே ஒவ்வொரு கட்டுரையும் அமைகின்றது.

இக்கட்டுரைகளின் வழி என்றும் மக்கட் சமுதாயம் மாறுபாடின்றி வாழ வழி கிடைக்குமா என்ற எண்ணத்திலேயே இவற்றைத் தொகுத்து, **'கொய்த மலர்கள்'** என்ற தலைப்பில் இந்நூலை வெளியிடுகின்றேன். பிழை உளதேல் பொறுத்து ஏற்க வேண்டுகிறேன்.

சென்னை-30
15—8—60

பணிவார்ந்த,
**அ. மு. பரமசிவானந்தம்.**

## உள்ளே ...


| | | | |
|---|---|---|---|
| 1. | கைத்தறி ஆடைகள் | ... | 5 |
| 2 | வண்ண ஆடைகள் | ... | 23 |
| 3. | உடையும் தையற்கலையும் | ... | 30 |
| 4. | சங்ககாலச் சைவம் | ... | 36 |
| 5. | பேர் வேண்டேன் | ... | 65 |
| 6. | உயிர்த்துன்பம் உன் துன்பம் | ... | 73 |
| 7. | சமதர்மச் சமுதாயம் | ... | 78 |
| 8. | வெற்றிக்கு வழி | ... | 85 |
| 9. | எல்லைப் போராட்டம் | ... | 92 |
| 10. | எல்லாரும் உவப்பது | ... | 99 |
| 11. | ஒரு சொல் கேளீர் | ... | 102 |
| 12. | வள்ளுவர் காட்டிய காதல் நெறி | ... | 105 |
| 13. | வடமொழி—ஆரியம்—சமஸ்கிருதம் | ... | 124 |
| 14. | உள்ளும் புறமும் | ... | 132 |
| 15. | மாணவர் நல்லவரே! | ... | 140 |
| 16. | கவிஞன் யார்? | ... | 147 |
| 17. | நாடகத் தமிழ் | ... | 154 |

# 1. கைத்தறி ஆடைகள் *

மனிதன் நாகரிகத்தின் முதற்படியில் என்று கால் வைக்கக் கற்றுக் கொண்டானோ, அன்றே அவனுக்கு ஆடை தேவையாக இருந்தது. மனிதன் தோன்றி வளர்ந்த வரலாற்றின் கால எல்லை இன்னும் அம் மனித ஆராய்ச்சிக்கு எட்டாமலேயே சென்று கொண்டிருக்கின்றது. எனினும் அந்த நாகரிக வரலாற்றில் சில மைல் கற்களை இன்றைய மனிதனாலே காண முடிகின்றது. அக் கற்களில் ஒன்றே அவன் ஆடை தேடிக் கொண்ட எல்லையில் நடப்பட்டதாகும்.

மனிதன் விலங்கிலிருந்து தோன்றி, வேறுபட்டு வாழத் தொடங்கிய காலம் எத்தனையோ ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பர் ஆய்வாளர். அந்தத் தோன்றிய காலத்தில் அவன் நிச்சயமாக இன்றைய நிலையில் இருந்திருக்க முடியாது. விலங்கொடு விலங்காக ஆடையற்று நிருவாணமாகத் திரிந்து, கண்டதைத் தின்று காலம் கழித்திருப்பான். விலங்கொடு விலங்காகக் கண்டதைத் தின்ற மனிதனுக்கு மன உணர்வு தோன்றிய நிலையிலேயே அவன் தன்னைச் சுற்றிக் கண்டு உணரத் தொடங்கியிருக்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது விலங்கினும் தான் வேறுபட்டவன் என்றும், அதனினும் மேம்பட்டவன் என்றும் உணர்ந்திருப்பான். அந்த வேற்றுமை உணர்ச்சியின் இடையிலே அவன் எண்ணம் நீண்டிருக்கும். தன் அகத்தில் எழும்பும் எண்ணங்களைப் பிறர் அறியாது மூடி வைக்கும் முறையிலே, தனது புறத்துறுப்புகளில் சிலவற்றையும் மூடி

* 7-2-60இல் கைத்தறி வார விழாவில் ஆற்றிய சொற்பொழிவு.

வைக்க வேண்டிய தேவையை உணர்ந்திருப்பான். ஆம்! அதுதான் நாகரிக வாயிலின் முதற்படி என்று கண்டான். தனித்த மனிதன் சமுதாயமாகச் சேர்ந்து வாழத் தொடங்கிய காலத்தில், 'அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்' என்ற இலக்கணப்படி, அனைவரும் கூடியிருக் கும் இடத்தில் சிலவற்றை மறைத்தல்தான் பண் புடைமையின் அடிப்படையில் அமைந்த நாகரிகம் என்று அவன் உள்ளத்தே உணர்ந்திருப்பான். அந்த உணர்வின் வழியே புறத்துறுப்புக்கள் சிலவற்றையும் பொதிந்து மூடவேண்டிய தேவை ஏற்பட்டது. அந்தத் தேவையே மனிதனை ஆடைவழிப் பற்றி ஈர்த்தது. ஆம்! அந்த ஆடை அணிந்த வரலாறு மனித வரலாற்றிலேயே சிறந்த மைல் கல்லாகும்.

முதல் முதல் ஆடை அணியக் கற்றுக் கொண்ட மனிதன் இன்று நாம் உடுப்பது போன்ற உயரிய ஆடைகளை அணிந்துகொண்டான் என்று கூற முடியுமா? எப்படி முடியும்? எதையோ கிடைத்ததைக் கொண்டு தன் உடலை மூடிக்கொண்டான் எனபது தானே பொருத்த மானதாகும். அதற்குப் பலப்பல மரப்பட்டைகளும் விலங்குகளின் தோல்களும் பயன் பெற்றிருக்கும். மர வுரி என்று பழங்காலத்திய இந்த ஆடையைப் பேரிட்டுக் காட்டுவதை இன்றும் காண முடிகிறதன்றோ! தோலாடை இன்னும் அடியோடு அற்றுவிடவில்லையே! இப்படி மரத்தாலும் தோலாலும் மானம் காத்த மக்களினம் மெல்ல மெல்லப் பிற ஆடைகளையும் பயன்படுத்தத் தொடங்கியது என்னலாம்.

இந்திய நாட்டு எல்லைக்கு—சிறப்பாகத் தமிழ் நாட்டுக்கு எல்லைக்கு—சில நூற்றாண்டுகளுக்கு முன் வந்த மேலை நாட்டவர் ஒருவர் இங்கே ஆடை காய்க்கும் மரங் கள் இருந்தன என்று எழுதிச் சென்றார் எனக் கேள்விப் படுகிறோம். அவர் வியந்து கூறியது பருத்தி ஆடை

களையேயாம். அந்த நாடுகளில் ஆட்டு மயிர்களால் ஆடை செய்வது வழக்கம். இங்கோ மக்கள் பருத்தியைப் பயிரிட்டு, பஞ்சிலிருந்து நூலெடுத்து ஆடை செய்த திறன் அவரை வியப்புக்குள் ஆழ்த்தியிருக்கும். ஆடை பருத்தியாலும், பட்டாலும், மயிரினாலும் செய்யப்படுவதை இன்றும் காண்கிறோம். நாகரிகம் மிக்க இந்த நூற்றாண்டின் இடைக்காலத்தில் பல்வேறு பொருள் களிலிருந்தும் ஆடை செய்யப்படுவதையும் அவை களெல்லாம் இந்த முப்பொருளால் செய்யப்படும் ஆடை களுக்கு நிகராக வாழவில்லை என்பதையும் காண்கிறோம். எனவே இந்த முப்பொருளும் பஞ்சு—மயிர்—பட்டு என்ற மூன்றும் ஆடைகள் ஆக்கச் சிறந்த மூலப் பொருள்கள் என்பது கண்கூடு.

தமிழ் நாட்டில் இந்த மூன்று பொருள்களாலும் மிகப் பழங்காலத்திலிருந்தே ஆடை செய்து உடுத்து வந்தார் கள் என்பதைச் சங்ககால இலக்கியங்கள் நன்றாக எடுத்துக் காட்டுகின்றன.

'பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கை'கள் நகர்தொறும் இருந்ததாக இலக்கிக் காட்டுகின்றன. எனவே கடைச் சங்க காலத்துக்கு முன்பே—இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே—தமிழ் மக்கள் நாகரிக முடையவர் களாக நல்லுடை உடுக்கப் பழகி இருந்தார்கள் என்பது தெளிவு.

இன்றைய வரலாற்றுப் பேராசிரியர்கள் இந்திய நாட்டு வரலாற்று எல்லையைச் சிந்துவெளி நாகரிகத்தி லிருந்து தொடங்குகிறார்கள். அந்த நாகரிகம் இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதென்றும், அக் காலத்தில் ஆரியர் இந்தியாவுக்குள் வரவில்லை என்றும், சிந்துவெளி உட்பட இந்தியா முழுவதும் பரவி இருந்த நாகரிகம் திராவிட நாகரிகமே என்றும் நேர்மையான

ஆராய்ச்சியாளர் அனைவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். அந்த நாகரிகத்தில் வாழ்ந்த சிந்துவெளித் திராவிட மக்கள் மெல்லிய பஞ்சாலாகிய ஆடைகளை உடுத்தியிருந்தார்கள் எனக் காண்கின்றோம். பின்னால் வடமேற்கு வாயில் வழியாக வந்த ஆரியர்கள் இவர்தம் ஆடைகளைக் கண்டு வியந்து நம்முடைய இருக்கு வேதத்தில் இவற்றைப் புகழ்ந்து பாராட்டியுள்ளார்கள் எனவும் அறிகிறோம். எனவே பிற நாடுகளெல்லாம் அறியாத நெடுநாட்களுக்கு முன்பே இந்நாட்டுப் பழம்பெரும் மக்கள் பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும் ஆடைகள் நெய்து அழகுக்காகவும் பண்பாட்டுக்காகவும் உடுத்தி மகிழ்ந்தார்கள் எனக் காண்கிறோம்.

பழங்காலத்தில் ஒவ்வொரு வீட்டிலும் இந்த ஆடை நெய்யும் பழக்கம் இருந்திருக்க வேண்டும். அவரவர் வாழ்வுக்குத் தேவையான பொருள்களை ஒவ்வொருவரும் பயிரிட்டும் உண்டாக்கியும் வைத்துக்கொண்ட வாழ்க்கை நெறி இந்நாட்டுப் பழங்கால மக்களுடையது. பிற்காலத்து ஆரியர் நுழைவுக்குப் பிறகேதான் சமுதாய நலத்திற்கேற்பத் தொழிற்பாகுபாடுகளை உண்டாக்கி அவற்றின் வழி வருணங்களைப் பிரித்தார்கள் என்று வரலாறு கூறுகின்றது. இந்தியாவில் அவர்கள் கால் வைத்தபோது வருணப் பிளவுகள் கிடையா; பின்னரே உண்டாயின. சிற்சில தொழில்கள் தனிப்பட்டவரால் செய்யப்பட்டும் வந்திருக்கலாம். அதையேதான் திருவள்ளுவர்,

**'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு ஒவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்'** எனக்காட்டிச் சென்றார்.

நிற்க, பழங்காலத்தில் குடும்பத்துக்கு வேண்டிய பொருள்களைப் பெரும்பாலும் அவர்களே தேடிக் கொண்டார்கள் எனக் கண்டோம். அந்த முறையில் ஆண்களும் பெண்களும் பொறுப்புக்களைப் பங்கிட்டுக் கொண்டார்கள். ஆடைக்கு வேண்டிய நூலைத் தயார்

செய்யும் பொறுப்பு பெண்களுடையதாகவே இருந்தது. பஞ்சைத் துப்புரவு செய்து முறைப்படி அதை நூலாக்கி வந்தவர்கள் பெண்கள் தாம். ஆம்! நூலிழையைச் செய்த வர்கள் வாலழையர்கள் தாம். 'பருத்திப பெண்டிர்' என்றே சில பெண்கள் குறிக்கப் பெறுகிறார்கள். இதைக் குறிக்க இலக்கணப் புலவர் பவணந்தியார் நல்ல ஒரு வெண்பாவையே பாடி இருக்கிறார். அவர் காட்ட வந்தது புலவன் பாடும் நூல். அந்த நூலையும் இந்த மகளிர் இழைக்கும் நூலையும் ஒப்புமைப்படுத்திப் பாடுகிறார் புலவர். பாட்டு உருப்பெற்று விடுகிறது.

**'பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்**
**செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத**
**கையே வாயாக கதிரே மதியாக**
**மையிலா நூன்முடியு மாறு** என்ற வெண்பாவில்

குற்றமற்ற நூல் முடிக்கும் திறத்தை நன்கு காட்டுகிறார் பவணந்தியார். பெண் கையில் கதிர் கொண்டு பஞ்சினை நூலாக்குகிறார். புலவர் சொல்லைக் கொண்டு மதிகாட்டி வாய்வழி நூலைச் செய்கிறார். இந்தத் திறத்தால் நாம் அறிவது அக்காலப் பெண்கள் நூல் நூற்பதில் வல்லவர் களாக இருந்தார்கள் என்பதே. பெண்கள் சக்கரம் சுற்றி (சர்க்கா) நூல் இழைத்தார்கள் என்ற குறிப்பும் கிடைக் கின்றது. அவர்கள் மிக மெல்லிய இழைகளாகவும் நூல்களை நூற்றார்கள் போலும். இன்றைய கணக் கின்படி 120 எண் நூல்களைக்கூட அவர்கள் நூற்றார்கள் என்பர். அந்த எண் நமக்குத் திட்டமாகத் தெரியா விட்டாலும், 'பாலாவி அன்ன மேலாடை நெய்தனர்' என்ற உண்மையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கியங்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

சங்க இலக்கியங்கள் அக்கால நல்ல ஆடைகளைப் பற்றிச் சிறப்பாகப் பாராட்டுகின்றன. பாலாவி கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலும் இருப்பது

போன்று அவர்கள் அன்று அத்துணை மெல்லிய ஆடைகளை நெய்தார்களாம். இன்னும் பாம்புதோல் உரித்தது போன்ற பல வண்ணக் கண்கவர் ஆடைகளையும் அவர்கள் செய்தார்கள் எனக் காண்கின்றோம்.

'பாலாவியன்ன மேடை நெய்வோர்' என்றும்,
பாம்பு உரித்தன்ன அறுவை நல்கி' என்றும்,

பழம் பெரும் இலக்கியங்கள் பாராட்டுகின்றன.

பிற்காலத்தில், ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரர் 'காம்பு, நேத்திரப்' போன்ற அழகிய கரை வேலைப்பாடமைந்த ஆடைகள் தமிழ் நாட்டில் செல்வரால் விரும்பிப் போற்றப் பட்டமையைக் கூறுகின்றார். இத்தனையும் கையால் நெய்யப்பட்டனவேயன்றி வேறு வகையாக வளர்ந்திருக்க முடியாது எனவே கடைச் சங்க காலத்துக்கு முன் தொடங்கி-மோகன்சோதாரோ ஹாரப்பா காலமாகிய இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டு களுக்கு முன் இருந்து இன்றுவரை, பலப்பல வகையில் பலப்பல முறைகளில் வண்ண ஆடைகளையும் மெல்லிய ஆடைகளையும், பட்டிலும் மயிரிலும் பருத்தியிலும் கைத் தறி வழி நெய்து வந்த நம் நாட்டுச் சமுதாயம் இன்றும் அத் தொழில்துறையைப் போற்றிப் பாராட்டுவது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். என்றாலும், இன்னும் அந்தப் பழங்காலத்து மக்கள் நெய்தது போல மெல்லிய-மிக நுண்ணிய-வண்ண ஆடைகளை இன்றைய மக்கள் நெய் யக் கற்றுக் கொண்டார்கள் என்று எண்ண முடியவில்லை. காரணம் எத்தனையோ உள. ஒன்று இன்றைய கைத் தறித் தொழில் 'மில்லோ'டு மல்லாட வேண்டியுள்ளது. ஆனால் அது தவிர்க்க முடியாத ஒன்று. நாகரிகம் நமக்குத் தேடித்தந்த விலக்கமுடியாத தொல்லைகளுள் அதுவும் ஒன்று.

ஆங்கிலேயர் ஆட்சிக்கு வருமுன் இந்திய நாட்டு டாக்கா மஸ்லீன்' மிகச் சிறந்ததாகப் போற்றப்பட்டு

மேலை நாட்டு மக்களால் விரும்பப்பட்டு வாங்கப்பெற்ற தெனவும், பிறகு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அந்தத் தொழில் பழிதீர்த்த பான்மையால் நலிவுற்றதெனவும் கேள்விப்படுகிறோம். எனவே, மிகப் பழங்காலந் தொட்டு நேற்றுவரை மெல்லிய இழைகள் இழைத்துச் சிறந்த ஆடைகளை நம் நாட்டு மக்கள் நெய்தார்கள் என்பதை யாரே மறுக்கவல்லார்!

பல்வேறு சூழல்களுக்கு இடையே கைத்தறித் தொழிலும் நாட்டில் ஓரளவு வாழ்ந்து வளர்ந்து வருகிறது. பல இலட்சக் கணக்கான மக்கள் இந்தத் தொழிலையே நம்பி வாழ்ந்து வருகின்றனர். அரசாங்கமும் பல நெருக்கடியும் சூழலும் ஈர்க்க அவற்றின் இடையிலும் கைத்தறி வளர ஓரளவு உதவி செய்கின்றது. என்றாலும் இன்று செய்வதிலும் இன்னும் அதிகமாகச் செய்யலாம். அரசாங்கத்துக்கு மனம் இருக்கிறது; என்றாலும் சிலருடைய தயவையும் அது இன்னும் நாடவேண்டிய நிலையில் இருக்கின்ற காரணத்தால் அளவுக்கு மேல் கைத்தறிக்கு அதனால் உதவி செய்ய இயலவில்லை என்பது கண்கூடு.

இந்தியாவில் உழவுக்கு அடுத்தபடியாக-ஏன்?-உழவரோடு இயைந்ததாக அன்று தொட்டு வளர்ந்து வந்த ஒரே தொழில் இந்த நெசவுத் தொழிலேயாகும். மனிதனுக்கு உணவு இல்லாவிட்டாலும் கவலைப்பட வேண்டியதில்லை- அந்தப் பட்டினி நிலையைப் பல நாள் வெளிக்காட்டிக் கொள்ளாது மூடிவைத்துவிடலாம். ஆனால் உடையின்றி வெளியே செல்ல முடியுமா? மானமாக வாழ முடியுமா? அதனால்தானே 'ஆடையில்லா மனிதன் அரை மனிதன்' என்று தமிழர் சொல்லி வைத்தனர். எனவேதான், மக்களுக்குத் தேவையான உணவினை விளைக்கும் உழவுக்கும் மேலாக இவ்வுடையினைச் செய்யும் தொழிலைப் போற்றி வந்தார்கள். அந்தக்

காலத்துச் சிறந்த குடிசைத் தொழிலாக விளங்கியது நெசவேயாகும். பாவு இட்டு, வேட்டியும் துண்டும் புடவையும் பிறவும் நெய்து மக்களின் மானம் காக்க அளித்த அந்த நெய்தற் றொழில் இன்னும் நன்றாகப் பாதுகாக்கப் பெற வேண்டும்.

ஓய்ந்த நேரத்தில் உழவரும் பிறரும் நூற்று ஆடை நெய்து வந்த காலம் ஒன்றிருந்திருக்கும். எல்லா வீடுகளிலும் பெண்கள் அந்த அன்புப் பணியினை மேற்கொண்டிருந்திருப்பர். கால வெள்ளத்துக்கு இடையிலே அந்த நூற்று நெய்யும் தொழிலை ஒரு தனிப்பட்ட சமூகத்தாரே மேற்கொள்ள நேரிட்டது. பழங்கால நாட்டுக் குடிசைத் தொழிலாக வீடுதொறும் விளங்கிவந்த இந்த நெசவுத் தொழில் இன்று ஒரு தனிப்பட்ட சமூகத்தார் என்று சொல்லப்படும் வகையில் ஓரினத்தார் கையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்களும் அந்தப் புனிதத் தொழிலைப் பல்வேறு சிக்கல்களுக்கும் மாறுபாடுகளுக்கும் இடையில் வளர்த்துக் கொண்டுதான் வருகிறார்கள். அவர் தம் திறமும் செயலும் சிறக்க என வாழ்த்துகிறேன்.

இந்திய அரசாங்கம் இன்று கைதொழில் வளர்ச்சி அடையப் பலவகையில் முயற்சி செய்கின்றதைக் காண்கிறோம். அம் முயர்சியின் வழி எத்தனையோ புள்ளி விவரங்கள் நமக்குக் கிடைக்கின்றன. அவற்றின் துணைகொண்டு இன்றைய கைத்தறி வளர்ச்சிபற்றி ஒரு சிறிது காண்போம். இந்த நாட்டுக் கைத்தறியையும் அத் தொழில் வளத்தையும் புதுமுறையில் அமைத்து வளர்ப்பதற்கான முயற்சி இந்திய அரசாங்கத்தாராலே 1851 லேயே தொடங்கப் பெற்றது. எனவே இன்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே அரசாங்கம் இத்துறையில் கவனம் செலுத்த விரும்பிற்று என்பதைக் காண மகிழ்ச்சி பிறக்கின்றது. இன்று இத்துறைக்கு வேண்டிய நூல் அத்தனையும் ‘மில்’ லிலே தான் தயார் செய்யப்படுகின்றது.

அன்று தொட்டு இன்று வரை அரசாங்கம் இத்துறை வளர எத்தனையோ வகையில் உதவி வருகின்றது. என்றாலும் பல்வேறு காரணங்களாலே இது வளர்ச்சி அடையவில்லை என்பதை நாம் நேரிலேயே காண முடிகின்றது.

இந்திய அரசாங்க விற்பனைத் திட்டப் இத்துறையை முழுக்க முழுக்க வளர்க்க வேண்டிய அளவுக்குச் செம்மையாக்கப் பெறவில்லை என்னலாம். அத்துடன் நாட்டில் பெருகிவரும் 'மில்'களின் போட்டியே பெரிதாக உள்ளது. மற்றும் நாகரிகம் என்ற பெயராலே என்னென்ன வகையிலேயோ மக்கள் உடை உடுக்க விரும்ப, அந்த விருப்பத்தையெல்லாம் கைத்தறியால் பூர்த்தி செய்ய முடியாத நிலையும் ஒன்று. ஆம்! புறத்துறுப்புக்களை வெளிக்காட்டலாகாது என்ற பண்பாட்டு முறைக்கு முதல் முதல் அமைந்த ஆடையானது—மனிதனைப் பிறவற்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டத் தோன்றிய ஆடையானது—அவனது சமுதாய வாழ்வின் ஒரு அங்கமாக அமைந்த ஆடையானது—இன்று அவனை அநாகரீகமாக, பிறவற்றினும் கேடாக, வழுக்கிவிழும் வகையில் எங்கோ அழைத்துச் செல்லுகின்றது. தம் உடம்பைப் பிறர் காணலாகாது என்ற பண்பாட்டின் அடிப்படையில் அமைந்த ஆடை, தம்மைப் பிறர் எந்தக் கோணத்தில் கண்டாலும் காமுறத்தக்க வகையில் அமைந்து, மனிதனைப் பண்பற்ற அழுக்குச் சேற்றுள் வழுக்கிவிழச் செய்கிறது. அதற்கு இன்று என்னென்னவோ பெயர்களைச் சொல்லுகிறார்கள். இதுதான் இன்றைய நாகரிகத்தின் கோலம் போலும். ஆம்! இந்தப் பண்புகெட்ட வழிக்கு மனிதனைத் தள்ள விரும்பாத கைத்தறி அவன் விருப்பத்தை நிறைவேற்ற முடியவில்லைதான். எனவே அவனும் அவளும் வேறு 'மில்' உறவை நாடுகிறார்கள், அதற்காகக் கைத்தறி தன்மான

மிழந்து நிலை தவறலாகாது என நான் முறையிட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த இடையீடுகளோடு வெளி நாடுகளில் நம் வாணிபத்தை நன்கு நடத்த முடியாத போட்டிகளும் பிறவும் குறுக்கிடுகின்றன. இன்று ஜப்பான், சீனு போன்ற வெளி நாடுகள் கைத்தறி ஆடைகளைத் தயார் செய்து உலக அரங்கில் போட்டி இடத் தொடங்கி விட்டன. உள் நாட்டில்தான் 'மில்ல'ரோடு போராட வேண்டிய நிலை யென்றால், வெளி நாட்டிலும் இப்படியா என எண்ண வேண்டியுள்ளது. மற்றும் வெளிநாடுகளில் பல்வேறு கட்டுப்பாடுகள் நாள்தோறும் அதிகமாகிக் கொண்டே வருகின்றன. இந்திய நாட்டின் ஏற்றுமதியை வளர்த்து, இறக்குமதியைக் குறைக்க இந்த அரசாங்கம் செய்யும் திட்டங்களை நாமறிவோம். இது போன்றே உலகில் பிற நாடுகளும் தத்தம் இறக்குமதிக் கொள்கைகளை வரையறுக்கின்றன. அதனால் இக் கைத்தறி வாணிபம் வெளி நாட்டில் சிறக்க வளரவில்லை. மேலும் நான் மேலே கூறிய படி பிறநாட்டு நாகரிக வாழ்வுக்கு ஏற்ற ஆடைகள் இல்லாமையும் ஒரு குறையாகக் கருதப்படுகிறது. மற்றும் அண்மையில் விசைத்தறிகள் தோன்றிக் கைத்தறிக்குப் போட்டியாக அமைந்துள்ளமையும் அறிந்ததே. அனைத்திலுக்கும் மேலாக வியாபார முறையில் ஒழுக்கமில்லாமையை இங்கே நான் குறிக்க விருப்புகிறேன். ஒரு நாட்டுக்கு மாதிரிக்கு ஒரு ரகத்தை அனுப்பி, பின் தேவையை அனுப்பும்போது மாற்றினால் யார்தாம் அந்த வியாபாரத்தைத் தொடர்ந்து மேற்கொள்வர்? இந்த வகையில் நம் நாட்டுக்கு அண்மையில் பலதுறைகளில் கெட்ட பெயர் உண்டாகியிருப்பதை நாடு அறியும். இத்தனைக்கும் இடையிலே கைத்தறித் தொழில் எப்படியோ நசியாது வளர்ந்து கொண்டே தான் வருகிறது என்பர் கணக்கெடுக்கும் அரசாங்க அலுவலாளர்கள்.

மனிதனுடைய வாழ்வில் ஆடை இன்றியமையாதது எனக் கண்டோம். இந்தியாவில் மனிதனது ஆடையை அரசாங்கம் கணக்கிட்டிருக்கிறது. ஒருவனுடைய வாழ்க்கைச் செலவு நூறு எனக் கொண்டால் உணவுக்கு மூன்றில் இரண்டு பாகமும் (66½%) உடைக்கு 9·7 பாகமும் செலவாகிறது என்பர். இந்தியா முழுதுக்கும் சராசரி ஆண்டுக்கு ஒருவன் 21 ரூபாய்க்கு ஆடை வாங்குவதாகக் கணக்கிட்டுள்ளனர். தென் இந்தியாவில் ரூ. 19-50 க்குத் தான் ஒருவர் ஆடைக்காக ஆண்டொன்றுக்கு செலவு செய்கிறார். 1958ம் ஆண்டின் கணக்குப்படி, ஒருவர் 16·7 கஜம் துணி வாங்கி இருக்கிறார் எனக் கணக்கிட்டிருக்கிறார்கள். இது நாளடைவில் வளர்ச்சி அடையும் என எதிர்நோக்குகின்றனர். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தனி மனிதனுக்குச் சராசரி ஆண்டுக்கு 18·5 கஜம் துணி தேவையாகும் எனக் கணக்கிட்டிருக்கிறார்கள். இந்தக் கணக்கின் அடிப்படையில் அரசாங்கத்தார் ஆலைகளும், கைத்தறிகளும். விசைத்தறிகளும் இவ்வளவு இவ்வளவு கஜம் தான் தயாரிக்க வேண்டும் என வரையறுத்தனர். அதன்படி 50 000 லட்சம் கஜம் ஆலைகளும், 15,000 லட்சம் கஜம் கைத்தறிகளும், 2000 லட்சம் கஜம் விசைத்தறிகளும் ஆடைகள் தயார் செய்ய வேண்டும் இந்த வளர்ச்சியின்படி ஆலைகள் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 1961ல் 53500 லட்சம் கஜம் துணி தயாரிக்க வேண்டும். ஆனால் ஆலைகள் முதலாண்டின் இறுதியிலேயே 1957 இல் 53060 லட்சம் கஜம் துணி தயார் செய்து அளவை மீறத்தொடங்கின. அதற்கென ஆலைகள் காட்டும் கணக்கு தனிமனிதனுக்கு, 23 கஜம் தேவைப்படும் என்பதாகும். ஆயினும் அரசாங்கக் கணக்காகிய 18·5 கஜ எல்லையிலேயே மக்கள் எட்டாது 16·7 கஜ அளவில் தான் நிற்கின்றனர். ஒருவேளை 1961ல் 17·5 கஜ அளவிற்கு

அவர்கள் முன்னேறலாம்: இந்தக் கணக்கில் ஆலைகள் உற்பத்தியைப் பெருக்க, அதனோடு போட்டியிட நினைத்தோ ஏனோ கைத்தறியும் 1958ல் தனது அளவாகிய 15,000 லட்சம் கஜ எல்லையைத்தாண்டி 18,000 லட்சம் கஜம் செய்தது. அதனால்தான் வாணிபம் மந்தப்பட்டு நட்டமும் உண்டாக நேரிட்டது. நம் நாட்டிலிருந்து வெளிநாட்டுக்கு செய்யும் ஏற்றுமதியும் நூற்றுக்கு 13 8 ஆகும். ஆகவே உள்நாட்டுத் தேவையே பெருகாதபோது அளவுக்கு மீறி ஆடைகளை ஆலைகளும் கைத்தறிகளும் போட்டியிட்டுத் தயாரித்தால் வியாபாரம் மந்தமாகத் தானே போகும். மற்றும் வெளிநாட்டின் தேவை அறிந்து ஆடைகளைத் தயாரிக்கவும் முடியவில்லை. நம் நாட்டி லிருந்து ஆடைகளை-சிறப்பாகக் கைத்தறி ஆடைகளைப் பெருவாரியாக வாங்கும் நாடுகள் அமெரிக்காவும் மேற்கு ஜர்மனியுமேயாம்: அவற்றின் தேவைக்கு ஏற்ப ஆடை களைத் தயாரிப்பின் வியாபார மந்தம் நீங்கலாம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டநிலை இதுவாக, மூன்றாவது ஐந்தாண்டு பற்றியும் இதற்குள் கணக்கிட்டு விட்டார்கள். ஆயினும் அது சரியென்றோ முடிந்த முடிபு என்றோ கொள்ள இயலாது. தனி மனிதனின் தேவை 20·3 கஜமாக ஆகலாம் எனக் கணக்கிடுகின்றார்கள் என்றாலும் 17·5 கஜத்துக்குமேல் செல்வது கடினமே. ஒருசாரர் கணக்குப்படி 20·3 கஜ வீதம் 96,000 லட்சம் கஜம் தேவையெனவும், ஆலைகள் 63,000 லட்சம் கஜமும், கைத்தறி 25 000 லட்சம் கஜம், விசைத்தறி 5000 லட்சம் கஜமும், அம்பர் 3000 லட்சம் கஜமும் செய்யலாம் எனவும் கொள்ளலாம். எனினும் ஆய்ந்து பார்ப்பின் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் இந்தியாவில் சுமார் 43 கோடி மக்கள் வாழ்வார்கள் என்றும், தனி ஒருவருக்கு 17·5 கஜம் துணி தேவை

யாகும் என்றும் கணக்கிட்டு அதற்கேற்பவே ஆலைகளுக்கும் கைத்தறிக்கும் அளவு அமைப்பது தக்கதாகும்.

இந்தக் கைத்தறிகளை நம்பி வாழும் மக்களைப்பற்றியும் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தியாவில் எண்பது லட்சம் நெசவாளர்களும், அவர்களுக்குத் துணையாக ஒன்றரைக்கோடி மக்களும் வாழ்கின்றனர் எனக் கணக்கிட்டிருக்கின்றனர். இவர்களே நாட்டின் தேவையில் நான்கில் ஒரு பகுதியான ஆடைகளை நெய்து தருகிறார்கள், இவர்களே ஆண்டில் குறைந்து இருநூறு நாட்களாவது தறியில் அமர்ந்து வேலை செய்ய வேண்டும் ஒரு நாளைக்கு அவரவர் திறனுக்கு ஏற்ப ஆறு அல்லது எட்டு மணி நேரமாவது வேலை செய்தாக வேண்டும். இப்படி நெசவாளர் தொடர்ந்து உழைத்து தமக்கு வேண்டிய ஊதியத்தைத் தேடிக்கொண்டு, மற்றவர் மானத்தையும் காத்து வருகின்றார்கள்.

இந்த நெசவாளிகளில் பெரும்பாலோர் தென்னாட்டிலே-அதிலும் தமிழ் நாட்டிலேதான் வாழ்கின்றார்கள். இந்தியாவில் உள்ள கைத்தறிகளைக் கணக்கெடுத்தபடி இங்கே நாடு முழுவதிலும் 21 லட்சம் தறிகள் உள்ளனவாம். அவற்றுள் பாதிக்கு மேல் - 12½ லட்சம் தென் இந்தியாவில் உள்ளன, தமிழ்நாட்டில்மட்டும் 5½ லட்சம் உள்ளன. அதில் 1½ லட்சம் சேலம் மாவட்டத்தில் மட்டும் உள்ளன. ஆந்திராவில் 4½ லட்சம் தறிகளும், கேரளத்தில் 80 ஆயிரம் தறிகளும், மைசூரில் 35 ஆயிரம் தறிகளும் உள்ளன. எனவே தென்னாடு—அதிலும் சிறப்பாகத் தமிழ்நாடு கைத்தறியில் கருத்திருத்த வேண்டும் என்பதை அறிய வேண்டும்

இனி இந்தக் கைத்தறித் தொழிலை இந்திய அரசாங்கமும் நம் சென்னை அரசாங்கமும் எவ்வெவ்வாறு வளர்த்தன என்பதை ஒரு சிறிது காணலாம். 1851லேயே தற்கால முறையில் இத்துறையை வளர்க்க முயற்சி எடுத்தது

என்று மேலே கண்டோம். அந்த நாள் தொடங்கி மெல்ல மெல்ல அரசாங்கம் இத்துறையில் ஓரளவாவது கருத்திருத்தித்தான் இருக்க வேண்டும். எனினும் 1930க்கு முன் அரசாங்கம் செய்த உதவிகளைப் பற்றித் திட்டமாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை. 1930ல் இத்தொழில் வளர்ப்பதற்காக ஐந்து லட்ச ரூபாய் கொடுத்து உதவிற்று. 1943ல் இதன் வளர்ச்சியையும் நிலையையும் பிறவற்றையும் ஆராய்ந்து அறிய ஓர் உட்குழுவை (Committee) அமைத்தது. அடுத்து 1948ல் குடிசைத் தொழிலுக்கெனவே ஒரு தனிச் சபையை (Board) அமைத்து, இத்தொழில் பற்றி ஆராய்ந்தது. 1949ல் கைத்தறிக்கெனவே தனி உட்குழு அமைக்கப் பெற்றது. இதற்கிடையில் சென்னையில் கைத்தறிக் கூட்டுறவாளர் சங்கம் 1935ல் தொடங்கப் பெற்றது. அதே அடிப்படையில் 1950ல் அகில இந்தியக் கைத்தறி அவை (All India Handloom Board) இந்திய அரசாங்கத்தால் அமைக்கப்பெற்றது. அடுத்து 1950 மே மாதத்தில் கைத்தறி பல்வேறு இன்னல்களுக்கு உள்ளான காலத்தில், சில ஆடைகளைத் தனியாகக் கைத்தறிக்கே ஒதுக்க வேண்டுமெனத் திட்டமிட்டு அவ்வாறு தொழிற் படவும் வழி செய்தது. 'லுங்கி' போன்ற ஆடைகள் கைத்தறிகளுக்கே ஒதுக்கப்பட்டன. பின்னர்க் கரையிட்ட புடவை, வேட்டி முதலியவற்றையும் கைத்தறிக்கே ஒதுக்குவதாகத் திட்டமிட்டது. இப்படி ஒரு சில வகையில் அரசாங்கம் கைத்தறி வளரப் பெரு முயற்சி செய்தது; என்றாலும்...

இத்தனை முயற்சிகளுக்கிடையிலும் கைத்தறி வளர்ச்சி அடையவில்லை. 1953ல் சென்னை அரசாங்கம் தன் எல்லையில் வாழும் சுமார் அரைகோடி நெசவாளிகளுக்கு உதவி காண விரும்பி, அதுபற்றி மத்திய அரசாங்கத்துக்கு விண்ணப்பித்துக் கொண்டது. அதற்காக ஓர் குழுவும் அவ்வாண்டு அமைக்கப்பட்டது. போட்டியிட்ட ஆலையி

விருந்தே கைத்தறியை வாழவைக்க நினைத்தனர் அரசாங்கத்தார். எனவே ஆலைகளில் தயாராகும் துணிகளில் கஜத்துக்கு மூன்று பை வீதம் எடுத்து, அதைக் கைத்தறி வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும் என முடிவு செய்தனர். அதன்படி ஓரளவு கைத்தறித் துணிக்கு உதவி வந்ததோடு, வாங்குவோருக்குக் குறைந்த விலைக்குக் கைத்தறி ஆடைகள் கிடைக்கும் வகையிலும் அரசாங்கம் அந்த உதவியை நன்கு பயன்படுத்தியது. இப்படி அரசாங்க உதவி பெற்று, ஓரளவு இக் கைத்தறித்துறை வாழ்ந்து வருகிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கைத்தறிக் குழு இந்திய அரசாங்கத்தை 100 கோடி ரூபாய் கேட்டது முழுதும் பெறவில்லை என்றாலும் ஓரளவு பெற்று இந்தத்திட்டத்தில் அந்தக் குழு கைத்தறி வளர ஆவன செய்து வருகிறது

இதற்கிடையில் இங்கு நான் முக்கியமாகக் குறிக்க வேண்டியது ஒன்று உண்டு. அதுதான் கூட்டுறவு முறையில் இக்கைத்தறியை வளர்த்த சிறப்பாகும், இக்கைத்தறி வளர்க்க அவ்வப்போது பல குழுக்கள் அமைக்கப் பெற்றன. அவற்றுள் கனுங்கோ (Kanungo) குழுவும் கார்வே (Karve) குழுவும் முக்கியமானவை. அவற்றுள் பின்னது 1953-ல் அமைக்கப்பட்டது. அது கைத்தறியைக் கூட்டுறவு மூலமே வளர்க்க முடியும் என்று திட்டமாக நம்பி அரசாங்கத்துக்கும் தெரிவித்தது. சென்னை மாநிலத்தில் அதற்கு இருபதாண்டுகளுக்கு முன்பே தொடங்கிய இக்கூட்டுறவுக் கைத்தறி இயக்கம் நன்கு தொழிற்பட்டு வந்தது. ஆயினும் நாட்டுப் பொது நிலை அதையும் தாக்கிற்று என்னலாம். என்றாலும் அதனால் தளராது நிலைத்துப் பணியாற்றியதின் மூலம், இன்று இச்சென்னை மாநிலக் கூட்டுறவு நெசவாளர் சங்கம் சிறந்த தொண்டாற்றுகின்றது எனலாம்.

இச்சென்னை மாநிலக் கூட்டுறவு நெசவாளர் சங்கம் நாட்டுக்குச் செய்யும் தொண்டு பெரிது. 1935-ல்

தொடங்கப் பெற்ற இது இன்று இவ்வளவு சிறக்க வளர்ந்துள்ளதைக் காண ஒவ்வொரு தமிழனும்-ஏன்? இந்தியனும்கூட மகிழத்தான் வேண்டும். 202 இலட்சம் தறிகளில் 981 கூட்டுறவுக் கழகங்களின் மூலம் இலட்சக் கணக்கான மக்கள் இச்சங்கத்தின் வழி நாட்டுக்குப் பணி யாற்றுகின்றனர். இது தனக்குத் தேவையான நூல்களை ஆலைகளில் இருந்து பெறுகின்றது. எனினும் தனது முயற்சியாலே கூட்டுறவு நூற்புஆலை ஒன்றைத் திருநெல் வேலியில் அமைத்துக்கொண்டது. அதில் பதினைந்து இலட்சத்துக்குமேல் பொருள் செலவிடப் பட்டிருக்கிறது. அத்துடன் நூலைத் தூய்மை செய்யவும் குறிடபிடவும் தக்க தொழிற்சாலைகளையும் ஆங்காங்கே அமைத்துள்ளது. இது செயற்கைப்பட்டு நூல் ஆலையை அமைத்து, அதன் வழியில் பல தறிகளைத் தொழிற்படுத்தியும் உள்ளது. மாதிரி நெசவுச் சாலைகளை அமைத்து அவற்றின் வழி அடிப்படைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழிகாட்டிப் பல வகையில் இத்துறையை இக்கூட்டுறவுச் சங்கம் வளர்த்து வருகின்றது. இத்தனையும் இருந்தால் போதுமா? உற்பத்தி யாகும் பொருள்களை விற்பனை யாக்குவதன்றோ வாணிப வளர்ச்சிக்கு இன்றியமையாதது. ஆம்! அத்துறையில் இது பெரிதும் கருத்திருத்தியிருக்கிறது. சென்னை மாநிலத்தில் மட்டும் இது 301 கடைகள் கொண்டுள்ளது பிற மாநிலக் கைத்தறிச் சங்கங்களுக்கும் விற்பனை செய் கின்றன. இவற்றுடன் வெளிநாடுகளிலும் பல கடைகளை வைத்துள்ளது. இத்தனைசகும் இடையில் தமிழ்நாட்டில் கைத்தறிபற்றி வாழும் மக்கள் 'ஏதோ வாழ்ந்தோம்' என்றுதான் வாழ்க்கையை நடத்துகிறார்கள். ஆகவே அவர்தம் வாழ்க்கையை முன்னேற்றப் பற்பல வகைகளில் பொது மக்களும் அரசாங்கமும் தயங்காது உடனே ஆவன செய்யத்தான் வேண்டும். மக்கள் அனைவரும் கைத்தறிகளையே வாங்க முன்வர வேண்டும். நாகரிகம்

என்று 'அநாகரிக' வெறி பிடித்தவர்களுக்கு உள்ளும் புறமும் காட்டும் வகையில் உடையைத் தயார் செய்யவில்லை என்றாலும் கைத்தறி, நாகரிக மக்கள் வாழ்வுக்குத் தேவையான பலப்பல வண்ண உடைகளைத் தயாரிக்கின்றது என்பதை இதோ உங்கள்முன் இருக்கும் கண்காட்சியின் மூலமே நீங்கள் நன்கு அறிவீர்கள். எனவே இனி அனைவரும் கைத்தறித் துணிகளை வாங்க வேண்டும் என உறுதி கொள்ளுங்கள்.

அரசாங்கமும் இன்னும் எத்தனையோ வகையில் உதவி செய்ய வழி இருக்கிறது. இத்துறையில் பல நாட்கள் உழைத்து அனுபவம் பெற்ற அறிஞர்கள் என்னென்ன செய்ய வேண்டும் எனக் கூறியுள்ளார்கள். நானும் இங்கே சில சொல்லி என் உரையை முடித்துக்கொள்ளக் கருதுகிறேன். இதோ ஒருசில நான் குறிப்பிட விரும்புவன;

1. ஆலைகளிலிருந்து இன்னும் குறைந்த விலைக்குத் தறிகளுக்கு நூல்கள் கிடைக்குமாறு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

2. இன்றைய 'பாவு' அமைக்கும் முறையில் மாற்றம் காண வழி தேட வேண்டும். பாவு தயார் செய்ய மனித நேரம் அதிகம் வீணாகின்றது. பலர் ஒரு பாவு அமைக்கத் தேவைப்படுகின்றனர். சில வேளைகளில் பலர் இரண்டு நாட்கள் கூட இருக்க வேண்டியுள்ளது. எனவே அரசாங்கம் இதைக் குறைக்கும் வழியையும் ஆராய்ந்தோ தக்கவர்களை ஏற்படுத்தியோ, பரிசு கொடுக்க முன்வந்தோ புதுப்புது முறையில் 'பாவு' தயாரிக்க வழி காண வேண்டும்.

3. நூல் நுழைகோல் (reed) அமைப்பு முறையில் கைத்தறி பெரும் மாற்றம் பெறும் வகையில் வழிகாண வேண்டும்.

4. வெறும் கைத்தறி நெசவு செய்வதைக்காட்டிலும் கால்வழி மிதித்துச் செய்யும் தறிகளை வளர்க்கும் வழி களைக் கண்டு, விரைந்து நாடு முழுவதும் அத்துறையில் திருத்தம் காண வேண்டும். (இதில் வேலை செய்தால் விரைவில் சோர்வு உண்டாகாது. 8 மணிக்குமேல் வேலை செய்யலாம், நாளைக்கு 18 கெஜத்துக்கு மேலும் நெய்யலாம்.)

5. வெளிநாட்டிலும் நம் நாட்டிலும் மனித ஆசை யின் அடிப்படையில், நியாயமான கோரிக்கைகளை நிறை வேற்றும் வகையில் நல்ல ஆடைகளைத் தயாரிக்கக் கைத் தறிக்கு உதவ வேண்டும். அதே வேளையில மிருக உணர்ச்சி வழிபட்டு அநாகரிகமான முறையில் ஆடைகளைத் தயாரிப்பவர் யாவராயினும் அவர்களைத் தடையிட்டு நிறுத்த வேண்டும்.

6. மக்கள் வாழும் தட்பவெப்ப நிலைக்கேற்ப உடைகள் தேவையானமையின் அவற்றிற்கேற்ற வகையில் ஆடைகளைத் தயாரிக்கக் கைத்தறிகளை ஊக்க வேண்டும்.

7. தேவைக்கு நிறைவு செய்யும் வகையில் கைத்தறி கள் தொழிற்பட உதவ வேண்டும்.

இப்படி இன்னும் எத்தனையோ சொல்லிக்கொண்டே போகலாம். எனக்கு முன்னும் இதே கருத்தை எத்தனையோ பேர் சொல்லியும் சென்றிருப்பர். என்றாலும் இவை யெல்லாம் என்று தொழிற்படுகிறதோ அன்றுதான் நாடு நாடாகும். இந்தக் கைத்தறிக் கூட்டுறவாளர் சங்கம் அரசாங்கத்தின் முழு உதவியையும் மக்களின் முழு ஆதரவையும் பெற்று நாள்தோறும் சிறக்கவேண்டுமெனவும். இத்துறையில் வாழும் மக்கள் அனைவரும் துன்பமற்று வாழ்வின் தேவைகளைப் பெற்றுச் சிறக்க வேண்டுமெனவும் வாழ்த்தி என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன். கைத்தறி வாரம் சிறக்க! அதன் வழி நாட்டு வளம் செழிக்க!

## 2. வண்ண ஆடைகள்*

மனிதன், விலங்கு பறவை முதலியவற்றிலிருந்து வேறுபடுகின்றான். பிறவற்றிற்கு இல்லாத ஒரு தனி உணர்வு-பகுத்தறிவு-நல்லதையும் கெட்டதையும் பாகுபடுத்திக் காணும் நல் அறிவு—அவனிடம் இருக்கிறது என்பர். ஆறும் அறிவினைப் பெற்றதுதான் அவனைப் பிறவற்றிலிருந்து பெரியவனாக்கியது உண்மையே! எனினும் இன்று மனிதன் அந்த அறிவினை இழந்து, விலங்கினும் கேடான வாழ்வுவாழத் தொடங்கிவிட்டான் என்று சமயத் தலைவர்களும், அரசியல் அறிஞர்களும், பிறரும் நாள் தோறும் பேசிக்கொண்டே இருக்கின்றனர். அவனுடைய அக நலம்—உள்ளுணர்வு—நிலை கெட்டு விலங்குணர்ச்சியைப் பெறுகின்றது என்பர். என்றாலும் மனிதனைப் பிறவற்றினின்றும் வேறுபடுத்திக் காட்டும் சிறந்த ஒன்று ஆடையே யாகும். ஆடை, தான் அணியப்பெற்ற மனிதனை உயர்வுடையவனாக உலகுக்குக் காட்டுகின்றது. உள்ளம் நிலைகெட எண்ணும் போது, அவ்வுள்ளமே 'இத்தகைய உடையொடு உலவும் நாம் நிலை கெடலாமா?' என்ற உணர்வை ஊட்டத்தான் செய்கிறது. எனவே மனிதனை மனிதனாக வாழவைக்கும் முயற்சியில் ஆடைக்குப் பெரும்பங்கு உண்டு. அதனாலேயே 'ஆடையில்லா மனிதன் அரை மனிதன்' என்ற பழமொழி நாட்டில் பிறந்தது.

ஆடை மனிதனுக்கு நெடுநாட்களாகவே உரிய ஒரு பொருள். அவன் தன் அறிவுபெற்ற காலத்திலேயே

---

* சேலம் வண்ணக் களஞ்சியத்தார் அவையின் வெள்ளி மலரில் வந்தது. (பிப்ரவரி '60)

அது தேவைப்பட்டது. விலங்கொடு விலங்காகத் திரிந்து கண்டதைத் தின்று வாழ்ந்த அந்தப் பழம்பெருங் காலத்திலேயே அவனுக்குத் தன் உடலை மறைக்க வேண்டும் என்ற உணர்வு தோன்றிற்று. மனித உணர்வின் முதற்படியிலேயே இவ்வாடைபற்றி உணர்வு பிறந்தது. ஆனால், அக்காலத்தில் மரவுரியும், விலங்குகளின் தோல்களுமே ஆடைகளாக அமைந்தன. ஆயினும் காலம் செல்லச் செல்ல அவன் பாட்டினும், மயிரினும், பருத்தி நூலினும் பலப்பல வகையான ஆடைகளைச் செய்யக் கற்றுக் கொண்டான், இன்று அத்துறையில் அவன் மிக அதிகமாக முன்னேறிவிட்டான் என்றே சொல்ல வேண்டும்.

தமிழ்நாட்டில் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆடை செய்யும் வழக்கமும், அதற்குப் பல்வேறு வகைப் பட்ட வண்ணங்கள் இட்டு வளம்படுத்தும் வழக்கமும் இருந்தன என நாம் காண்கின்றோம்: நாகரிக வாழ்வின் உச்சியில் வாழ்ந்த தமிழ்மக்கள், ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நல்ல நல்ல வண்ண ஆடைகள் உடுத்திச் சிறந்தனர் என்பதை நாம் இலக்கியங்கள் வழிக் காண முடிகின்றது. சங்க காலத்தில் ஆடவரும் மகளிரும் அழகழகாக ஆடைகள் புனைந்தும், விழா ஆற்றியும் சிறந்தார்கள் என்பதைக் காண்கின்றோம். அவ்வாடைகள் கண்கவர் வண்ணங்களால் அழகுபடுத்தப்பட்டதையும் அறிகிறோம். ஆடைகள் மிக மெல்லிய இழைகளை உடையனவாக இருந்தன.

'இழைமருங்கு அறியா நுழைநூற் கலிங்கம்
எள்ளறு சிறப்பின் வெள்ளரைக் கொளீஇ'

[மலைபடு 361—62]

என்றும்,

'ஆவி யன்ன அவிர் நூற் கலிங்கம்'

[பெரும்பாண் 469]

என்றும்,

'மாசில், காம்பு சொலித்தன்ன அறுவை உடீஇ;
[சிறுபாண் 239]

என்றும், அக்காலத்து மக்கள் உடுத்திய ஆடைகளைப் பற்றிப் பத்துப்பாட்டு அழகாக எடுத்துக் காட்டுகின்றது. இவற்றின் வழி நாம் காணின் ஆடைகள் எத்துணை மெல்லிய இழைகளால் நெய்யப் பெற்றன வென்பதை அறிய முடியும். பால் ஆவியைப் போன்ற மிக மெல்லிய ஆடைகளை அவர்கள் நெய்து அணிந்து இருந்தார்கள். இக்காலத்தில் அகத்துள்ளதை வெளிக் காட்டும் ஆடைகள் அதிக வழக்கத்தில் உள்ளதைக் காண்கின்றோம். 'ஆவியன்ன அவிர்நூற் கலிங்கம்' அத்தகையதாக இருந்திருக்கலாம். மிக நுண்ணிய இழைகளால் நெய்யப்பட்டு ஒளியும் விடும் வகையில் நன்கு சிறந்திருந்த ஆடை அது. அது தனித்து மகிழும் காதலர் போன்றவர் அணியும் நலம்பெற்றது போலும். 'இழை மருங்கு அறியாக் கலிங்கமும்' அத்தகையதே போலும். ஆடையில் பின்னப்பட்ட இழைகள் பிரித்தறிய முடியாதபடி அவ்வளவு நுண்மையினவாக இருந்தன என அறிகிறோம். எனவே, அக்காலத்து ஆடைகள் மிக மெல்லிய இழைகளால் செம்மையாக நெய்யப்பட்டன எனக் கொள்ளல் பொருந்தும். கலிங்கம் என்பது ஆடைக்குப் பெயர். அத்தகைய ஆடை கலிங்க நாட்டிலிருந்து வந்ததாக இருக்கலாம்.

இனி, அவ்வாடைகளை அழகு செய்யும் முறையால் பலவகைப்பட்ட வண்ண நிறங்களை இட்டமையையும் காணலாம்.

'மாசில் காம்பு சொலித்தன்ன அறுவை'

என்ற அடியில் 'காம்பு' என்பது கரைக்குப் பெயர். ஆடைகள் பல வண்ணங்களால் அழகுபடக் கரையிட்டுச் சிறந்தன என அறிய முடிகிறது. அக்கரை குற்றமற்றுக்

கெடாத வகையில் விளங்கியதையே 'மாசு இல்' என்ற அடைமொழியால் சிறப்பிக்கின்றனர். 'காம்பு துகிலவை' என்று பெரியாழ்வாரும் பின்னூட்களில் நன்கு கூறி யுள்ளமை அறிகிறோம். ஆடைக்கு இருமருங்கும் கரை யிட்டார்கள் என்பதை '**இரு கோட்டு அறுவையர்**' (நெடு 35) என்ற நக்கீரர்தம் அடியால் அறிகிறோம். எனவே மக்கள் ஆடைகளுக்குப் பல வண்ணங்களினாலே இரண்டு பக்கங் களிலும் கரையிட்டார்கள் என்பது நன்கு தெரிகிறது.

ஆடையின் இருமருங்கும் இட்ட கரைகளைப்பற்றிப் பின்வந்த சுந்தரர் கூறிய அடிகள் ஈண்டு நினைவிற்கு வருகின்றன. ஒன்பதாம் நூற்றாண்டில் நாகைப்பட்டினம் சிறந்த துறைமுகப்பட்டினமாக விளங்கிற்று. ஆடைகள் பல்வேறு வண்ணக் கரைகளோடு ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்டன. அந்த நகரில் அவற்றின் அழகுகளை யெல்லாம் கண்ட சுந்தரருக்கு அவை தேவை என்ற உணர்வு உண்டாயிற்று. உடனே ஆண்டவனை நோக்கிப் பாடினார். பல்வேறு பொருள்களைக் கேட்டுக் கொண்டே வந்த சுந்தரர்,

**' காம்பினொடு நேத்திரங்கள் பணித்தருளல் வேண்டும்**
**கடல் நாகைக் காரோணம் மேவி இருந்தீரே'**

என்று கேட்டார். இருவகை ஆடைகள் அவர் உள்ளம் கவர்ந்தன. ஒன்று காம்பு. மற்றொன்று நேத்திரம். காம்பு என்பதுபற்றி மேலே சங்க இலக்கியத்திலும் கண்டோம். 'காம்பு' என்பது, கரும்பின் கணுப்போன்று நீலமும், பச்சையும், பிற வண்ணங்களும் கலந்து அமைத்த கரையாக வேண்டும். 'நேத்திரம்' என்பது இன்றைய 'மயில் கண்' போன்றது. எனவே இவ்வாறு பல வண்ணங்கள் கொண்டு கணுக்கணுவாகவும், கண் கண்ணாகவும் அமைத்த கரைகளை உடைய ஆடைகளை அக்காலத்து மக்கள் விரும்பி உடுத்தார்கள் என்பது தெளிவு. மற்றும் உருத்திராட்சக் கரை என்று சொல்லப்

பெறுகின்ற கொட்டைக் கரையிட்ட பட்டாடைகளும் இருந்தன என்பதை,

**‘கொட்டைக் கரைய பட்டுடை நல்கி’**

[பொருந. 155]

என்றும் சங்க காலத்து வாழ்ந்த முடத்தாமக்கண்ணியார் என்ற பெண்பாற் புலவர் பாடியுள்ளார். இவ்வாறு பல வண்ணங்கள் வழி ஆடைகள் அழகு செய்யப்பட்டன.

நிற்க, முல்லைப்பாட்டில் வரும் குறிப்பு மற்றொரு வகை ஒப்பனையையும் நினைவூட்டுகின்றது.

**மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை**
**மெய்ப்பை புக்க..............யவனர்.**

[முல்லை. 59–61]

என்ற அடிகள், காவல் மாக்கள் அங்கி என்னும் மெய்ப்பை அணிந்திருந்தார்கள் எனக் காட்டுகின்றது. அதில் மத்திகை வளைய இருந்ததாம். மத்திகை என்ப தற்குப் பூமாலை என்று பொருள் தருகிறது பிங்கல நிகண்டு. எனவே இக்காலத்துப் பூ வேலை போன்று (Embroidery) அழகிய வளைந்த வண்ண மலர் வேலைகள் கொண்ட மேல் அங்கியை அவர்கள் அணிந்து கொண் டார்கள் என்பது பொருந்தும். இன்று அரசர்களுக் கும் அமைச்சர்களுக்கும் முன்னோடிகளாக வருவோர் அத்தகைய ஆடைகளை அணிந்து தம் பின்னால் வருபவரை அறிமுகப்படுத்துவதைக் காண்கிறோமல்லவோ!

அத்தகைய அழகிய ஆடைகளை, வெறும் வண்ண ஒளியுடன் கண்ணுக்கு விருந்தாக அமைவனவாக மட்டும் வைத்திருக்க விரும்பவில்லை அக்கால மகளிர். அத்தகு அழகிய வண்ண ஆடைகளுக்கு மகளிர் மணம் ஊட்டி னார்கள் எனவும் அறிகிறோம். மதுரை மாநகரில் மகளிர் அந்த வண்ண உடைகளுக்கு - மெல்லிய நூலிழைகளால் ஆகிய ஆடைகளுக்கு-மணம் ஊட்டினார்கள் என்பதை மாங்குடி மருதனார்,

'மென்நூற் கலிங்கம் கமழ் புகை மடுப்ப
பெண்மகிழ் வுற்ற பிணைநோக்கு மகளிர்'

[மதுரை. 554—55]

என்கிறார். அந்த மணநிலையை இன்று சில மணங்களை (செண்டு) ஆடைக்கு ஊட்டுவதன்மூலம் நம்மால் அறிய முடிகிறது.

முழு வண்ணங்களை ஆடைகளுக்கு ஊட்டுவதோடு பல்வேறு வகைக் கரைகளை ஆடைகளுக்கு அமைப்ப தோடு—ஆடையினிடையில் பலப்பல பூ வேலைகளையும் (Printing) செய்துள்ள வேலைப்பாடும் சங்க காலத்தில் இருந்தது எனக் காண்கின்றோம். நற்றிணைப் பாடல் ஒன்று, பல்வகைப்பட்ட புள்ளிகளை உடைய ஓர் ஆடை யைக் குறிக்கிறது. அந்த வண்ண ஆடையின் சிறப்பை,

'புகாப் புகர் கொண்ட புன்பூங் கலிங்கம்' [நற் 90]

என்று காட்டுகிறது அது. எனவே முழு வண்ணம் தீட்டுவதோடு, ஆடைகளில் வண்ணப்புள்ளி அமைத்து அழகுபடுத்தும் சிறப்பும் அக்காலத்தில் நன்கு சிறந்து இருந்தது.

இனி, இவ்வாடைகளைத் தயார் செய்யும்போதும் அழுக்கினைப் போக்கித் தூய்மையாக்கும் போதும் கஞ்சி யிடும் வழக்கம் உண்டு என்பதை,

'காடி கொண்டு கழுவுறு கலிங்கத்துத்
தோடமை தூமடி'

[நெடு. 134—35]

என்று நெடுநல் வாடை காட்டுகின்றது. அதையே குறுந்தொகை,

'நலத்தகை புலத்தி பசை தோய்த்து எடுத்த
தலைப்புடைப் போக்கித் தண்கலத் திட்ட
நீரில் பிரியாப் பழூஉத்திரி'

[குறுந். 330]

எனக் காட்டுகிறது. எனவே ஆடையையும் நூலையும்

அழுக்குப் போக்கிக் கஞ்சியிட்டு உலர்த்திச் செம்மைப் படுத்தும் வழக்கம் மிகப்பழங்காலத்திலேயே இருந்தது என்பதும் தெளிவுறும்.

இவ்வாறு, வண்ணமும் மணமும் கொண்ட தூய ஆடையை அணிந்த ஆடவரும், பெண்டிரும் மிகப்பழங் கால முதலே தமிழகத்தில் சிறக்க வாழ்ந்தார்கள் என்பது தெளிவு. இந்த வண்ண வேலைப்பாடுகள் நாள் தோறும் வளர்ந்து கொண்டே வருகின்றன. இன்று நாட்டில் வண்ணமியற்றியும், இட்டும் ஆடைகளுக்கு அழ கூட்டும் திறன் பலவகையில் சிறக்கப் போற்றப் படுகின்றது. அதற்கெனச் சாயச்சாலைகளும், வண்ண அச்சுச் சாலைகளும் நாட்டில் பலப்பலவாக வளர்ந்துள்ளன. சேலத்தே அத்தகைய வண்ணக்களஞ்சியத் தொழிற் சாலைகள் பல. அவற்றின் உரிமையாளர் கழக வெள்ளி விழாவில் இம்மலர் பூக்கிறது. மலர் பல்வேறு வண்ணங் களுடன் மணம் வீசும் என்பது உறுதி. ‘அவர் தம் வண்ணப்பணி வளமுற்றுச் சிறக்க’ என்ற வாழ்த்தோடு இக்கட்டுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

# 3. உடையும் தையற்கலையும்

என்று மனிதன் திருந்திய வாழ்வு பெறத் தொடங்கினானோ அன்றே அவன் நாணத் தொடங்கினான். 'நாண்' மனிதனுக்கு உரிய உயரிய பண்புகளுள் ஒன்று. நாணத்தை 'வெட்கம்' என்று பொருள் கொண்டு காட்டுவர். வெறும் வெட்கப்படுவது மட்டும் நாணாகாது. மற்றும் 'நாண்' பெண்களுக்கு உரிய நற்குணத்தில் ஒன்று என்பர், இருக்கலாம்; ஆனால் ஆண்களுக்கு நாணம் இல்லையா! ஏன் இல்லை? 'அறம்நாணத் தக்கது தான் நாணாயின், பிறர் நாணத்தக்க துடைத்து' என வள்ளுவர் ஆடவர் மேலேற்றியே நாணத்தைக் காட்டுகின்றார். நாணுடைமை என்றே ஓர் அதிகாரமும் திருக்குறளில் உள்ளது. நாணுடைமையாவது 'நீதியல்லாதது கண்டால் நாணுதல்' எனப் பரிமேலழகர் உரை கூறுவர்.

இந்நாணம் உடலில் புறநிலை பற்றியும் அகநிலை பற்றியும் நிகழ்வது. அகநிலையைப்பற்றியே வள்ளுவர் விளக்கிக் காட்டுகின்றார். அந்த அகநிலை ஒருசிலரிடமே அமைந்துள்ளதாகும். புலநிலையாகிய உடலை மறைத்தலே புறம் பற்றிய நாணாகும். இது எல்லார்க்கும் இன்றியமையாது வேண்டப்படுவது என்பதை 'ஊண் உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல' என வள்ளுவரே காட்டுகின்றார். உடை எல்லோருக்கும் இன்றியமையாது வேண்டப்பெறுவதாகும். மனிதன் திருந்திய வாழ்வு பெறத் தொடங்கிய அந்த நாளிலேயே இவ்வுணர்வைப் பெற்றான். என்றாலும் அன்று அவனுக்குப் 'பட்டினும், மயிரினும் பருத்தி நூலினும்' பலவகை ஆடை செய்து தருவார் இலர். எனவே

தையற்கலை பொங்கல் மலரில் வந்தது (சனவரி'60)

அவன் மரப்பட்டைகளையும் விலங்கின் தோல்களையுமே தன் புற உறுப்புக்களை மறைக்கும் ஆடைகளாகக் கொண்டான். அத்தகைய புறநாண்வழி உறுப்புக்களை மறைத்து வாழாத மனிதனை நிறை மனிதனாக அன்றைய மக்கட் சமூகமே மதிக்கவில்லை. அதனாலேயே 'ஆடையில்லா மனிதன் அரை மனிதன்' என்ற பழமொழி நாட்டில் எழுந்தது. எனவே மனிதன் அக நலமெல்லாம் ஒருங்கே பெற்ற போதிலும், புற அழகாகிய ஆடை புனையும் அமைவு இன்றேல் அவன் நிறை மனிதனாக மாட்டான். எனவே மனிதன் மனிதனாக வாழத் தொடங்கிய அந்த நாளிலேயே ஆடையும் தோன்றிவிட்டது.

விலங்குகளின் தோல்களையும் மரப்பட்டைகளையும் ஆடைகளாகப் பயன்படுத்திய மனிதன், மெல்ல மெல்ல, அறிவு வளர வளர, பிறவகைகளிலும் தனது ஆடை வகைகளை ஆக்கிக்கொண்டான். பருத்தி ஆடையே அவற்றுளெல்லாம் சிறக்க இடம் பெற்றது. பட்டாலும் மயிராகிய கம்பளத்தாலும் கூட அவன் ஆடை செய்யத் தெரிந்திருந்தான். இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் இம்மூவகைப் பொருள்களிலும் ஆடை செய்தனர் என்பதை,

• நூலினும் மயிரினும் நுழைநூற் பட்டினும்
பால்வகை தெரியாப் பன்னூறு அடுக்கத்து
நறுமடி செறிந்த அறுவை வீதியும்

(சிலம்பு - 14, 204-07)

என இளங்கோவடிகள் ஆடை விற்கும் கடைகளை மதுரைத்திருநகர்மேல் ஏற்றிக் கூறுகின்றார்.

மிகப் பழங்காலத்திலிருந்தே தமிழ்நாடு நல்ல நாகரிகத்தில் திளைத்திருந்தது. எனவே இதில் வாழ்ந்த மக்கள் பல்வேறு வகைகளில் ஆடை அணிகலன்கள் செய்து தம்மை அழகுபடுத்திக் கொண்டார்கள் என அறிகிறோம். இவ்வாறு ஆடை செய்து தம் புற அழகினைப் புனைந்து

வாய்மையால் அக அழகையும் வழுவாது காத்து வந்தார்கள் தமிழ்மக்கள், நெய்த ஆடையைப் பல்வேறு பெயர்களில் அழைத்தார்கள். வேட்டி, துண்டு, மடி, கலிங்கம், அறுவை போன்ற பல பெயர்களைக் காண்கிறோம். எல்லாப் பெயர்களையும் காரணம் காட்டியே கொண்டார்கள்.

இவ்வாறு பழங்காலத்தில் ஆடைகளைச் செய்து உடலில் அப்படியே சுற்றிக் கொண்டிருந்தார்கள் என்று எண்ணுவோமாயின் நாம் தவறி விட்டவராவோம். ஆடவரும் அழகாகப் பல்வேறு வகையில் தையல் இட்ட உடைகளை உடுத்தியிருந்தனர்.

தையல் என்ற சொல் பெண்களைக் குறிக்கும்; தையல் தொழிலையும் குறிக்கும். ஒரு வேளை அக்காலத்தில் இத் தையல் தொழிலைப் பெரும்பாலும் பெண்கள்தாம் செய்து வந்தார்களோ என்றும், அதனாலேயே அத்தொழிலுக்கு அவர் பெயரே அமைந்துவிட்டதோ என்றும் நினைக்க வேண்டியுள்ளது.

இலக்கணம் கூறவந்த பவணந்தியார் நூல் ஆக்கும் பணி பெண்களுடையதே என்னுமாறு இரு பொருள்தர ஒரு வெண்பாவைத் தருகிறார்.

'பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத
கையே வாயாக கதிரே மதியாக
மையிலா நூல்முடியு மாறு' என்ற பாயிரப்பாட்டே அது.

எனவே நூல் நூற்றும், நெய்தும், தையல் வேலை செய்தும் பெண்கள் அக்காலத்தில் சிறந்தார்கள் எனக் கொள்ளலாம், சங்க காலத்திலேயே பெண்களும் ஆண்களும் பலப்பல வகையான ஆடைகளைத் தைத்து அணிந்தார்கள் எனக் காண முடிகிறது. அவற்றுள் ஒன்றை மட்டும் இங்குக் கண்டு அமைவோம்.

ஆடவரும் பெண்டிரும் இன்று அழகாகப் பலப்பல வகையில் உடைகளை ஆக்கிக் கொள்ளுகின்றனர். தையற் கலை நல்ல வகையில் வளர்ச்சி அடைந்துள்ளது. அரச காரியங்களில் தொழிற்படும் காவல் துறையாளர் போன்ற அலுவலர்களுக்கு அரசாங்கமே பலவகைகளில் ஆடைகள் செய்து தருகின்றது. ஆளும் தலைவர் ஒருவரை அறிய வேண்டுமாயின் அவருடன் வரும் 'சேவகனை'க் கண்டே அறிந்து கொள்ள முடியும். சில நாட்களுக்கு முன் ஆங்கிலேயர் ஆட்சியில் அத்தகைய 'சேவகர்'களுக்கு ஒரு பேருடையே வழங்கிக் காண்பார் மருளும் வகையில் அவர் தம் தோற்றம் அமைந்திருந்ததை அறிவோம். இந்த நிலை அன்றும் இருந்தது. யவன மக்கள் அன்று பெரும்பாலும் அரசர்தம் அணுக்கக் காவலர்களாக இருந்தனர். அவர்தம் ஆடையை விளக்கிக் காட்டுகின்றார் ஆசிரியர் நப்பூதனார். முல்லைப் பாட்டில் அத்தகைய யவனக் காவலர் காட்சி தருகின்றனர். அவர்தம் தோற்றத்தை,

**'மத்திகை வளைஇய மறிந்து வீங்கு செறிவுடை**
**மெய்ப்பை புக்க வெருவரு தோற்றத்து**
**வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்'**

(முல்லை. 59-61)

என அவர் நன்கு எடுத்துக் காட்டுகின்றார். இதனால் அக்காவலர் நல்லதொரு மேல் உடை (Shirt-சொக்காய்) அணிந்திருந்தார்கள் என்பது தெரிகின்றது. அதை 'மெய்ப்பை' என்கிறார் அவர். உடலை உள்ளே மூடி வைப்பதனாலே அது மெய்ப்பையாக அமைந்த சிறப்பே, நமக்கு அக்காலத்திருந்த 'தையற்கலை'த் திறனை நன்கு காட்டுகிறது.

இந்த முல்லைப் பாட்டு அடியில் வரும் 'மத்திகை' என்பதற்குக் 'குதிரைச் சமட்டி' எனப் பொருள் குறிக்கிறது பல்கலைக் கழக அகராதி. பாசறையில் இருப்பதால் அக் காவலர் குதிரைச் சமட்டியை வைத்திருந்தார்கள்

என்பது பொருந்தும் என்றாலும், அதை இடுப்பில் செருகி வைத்திருப்பார்கள் எனக் கொள்வது பொருந்ாது. அன்றி இக்காலத்துக் குதிரை வண்டி ஓட்டுபவர்களைப் போலச் செருகி வைத்துக் கொண்டிருந்தார்கள் என்று கொள்ளினும் கொள்ளலாம். அக் காவலன் மெய்ப்பை யிட்டு, அதன் மேல் செறிந்த சுற்று அல்லது கட்டிட்டிருக்க, அதில் இம்மத்திகை செருகப்பட்டிருக்கிறது என்பது பொருள். இப்பொருள் ஒருவாறு கொள்ளத்தக்கது தான் என்றாலும், அதனினும் சிறந்த பொருள் கொள்ள வும் இவ்வடி இடம் தருகின்றது.

மத்திகை என்பதற்குப் பூமாலை என்ற பொருளும் உண்டு பூமாலை போன்ற அழகிய வேலைப்பாடு அமைந்த வளைவு எனக் கொள்ளல் பொருந்தும். இன்றும் பூவேலை கள் (Embroidery) சிறக்க ஆடைகள் செய்யப்படுவதைக் காண்கிறோம், அதனினும் நான் முன்குறித்த அரசாங்கக் காவல்காரர்களின் கச்சையும் பட்டையும் அழகிய வகை யில் அமைந்திருந்தனவன்றோ! எனவே அன்றைய மன்னர்தம் காவலர் மெய்ப்பையாகிய சொக்காய் (Shirt) அணிந்திருந்தார்கள். அவர் இடையில் பூவேலை செய்த கச்சு யாக்கப்பெற்றிருந்தது எனக் கொள்ளல் பொருந்தும்.

இனி, அந்த மெய்ப்பை எவ்வாறு இருந்தது என்பதை நம்மால் கூற முடியாவிட்டாலும், அதன் அமைப்பு உடலை நன்கு மூடிக் கிடந்தது என்பதும், அதன் இடையில் அழகிய பூ வேலைப்பாடு அமைந்த கச்சு (Belt) இருந்தது என்பதும் தெரிகிறது. இவ்வாறே ஆடவரும் மகளிரும் பலப்பல வகையான உடைகளை அணிந்திருந்தனர். பெண்களின் உடைகளையும் அவர் தம் அழகுபடுத்தும் முறைகளையும் பழங்கால இலக்கியங்கள் மிக அழகாகக் காட்டுகின்றன. ஆகவே, அக்காலத்தில் தையல் பொறிகள் எவ்வாறு இருந் தன என்பது நம்மால் அறியக் கூடாததாயினும், அழகிய

தையல் வேலை நாட்டில் நடைபெற்றது என்பதைத் திட்டமாக அறிய முடிகின்றது.

எனவே, தமிழ் நாட்டுப் பழங்காலத் தொழில்களுள் ஒன்றாகிய தையல் தொழில் இன்று மிகச் சிறந்த வகையில் ஓங்கி வளர்ந்து வளருவதைக் காண மகிழ வேண்டியுள்ளது. அத்துறையில் அனைவரையும் ஊக்கும் - உணர்வூட்டும்-தையற்கலை இதழ் பொங்கல் நாளில் பூக்கிறது. தையற்கலை சிறக்க என நாமும் வாழ்த்துவோம்! தமிழர் தையற்கலை வளம்காட்டும் நல்வகை உடை அணிந்து, பொங்கும் இன்பத்தைப் பொங்கல் நாளில் பெறுவார்களாக!

# 4. சங்க காலச் சைவம்

## சங்க காலம்:

தமிழ் நாட்டு வரலாறும் காலம் கடந்தது; சைவ சமய வரலாறும் காலம் கடந்தது. இரண்டையும் இணைத்துக் காலந்தோறும் சைவம் வளர்ந்த வரலாற்றை விளக்கும் பேச்சு வரிசையில் நாம் தற்போது சங்க காலத்தில் நிற்கிறோம். சங்க காலம் என்பது திட்டமாக வரையறுக்க இயலாவிடினும் பெரும்பாலரான அறிஞர்கள், கிருத்து பிறப்பதற்குப் பின்னும் முன்னுமாக ஒருசில நூற்றாண்டுகளை அக்கால எல்லையுள் நிறுத்துவர். தமிழ் நாட்டில் மூன்று சங்கங்கள் இருந்தன என அறிகிறோம். அவற்றுள் முதற்சங்கம் தென் மதுரையிலும், இடைச்சங்கம் கபாடபுரத்திலும் இருந்தனவாம. அந்த இரு இடங்களும் கடலால் கொள்ளப்பட்டன. கடைச் சங்கமே தற்காலத்திய மதுரையில் இருந்தது எனக் கொள்வர், நாம் இப்போது சங்க காலம் எனக்கொள்வது அக் கடைச்சங்க காலத்தையே யாகும். அது இன்றைக்கு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்குமுன், ஏறக்குறைய நான்கு அல்லது ஐந்து நூற்றாண்டுகளில் புலவர்கள் பரவி விரவித் தமிழ் வளர்த்த ஒரு காலத்தையே குறிப்பதாகும். எனவே, நாம் சங்க காலம் எனக் கொள்வது இன்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒன்றாகும். அத்துடன் சங்கம் மருவிய காலம் எனப்பெறும் சிலப்பதிகாரம் மணிமேகலை போன்ற காப்பியங்கள் தோன்றிய காலத்தையும் இதன் எல்லையிலே தான் கொள்ளல் வேண்டும்.

* சைவசித்தாந்த சமாச ஆண்டு விழாவில் (25—12—59) ஆற்றிய சொற்பொழிவு.

இக்காலத்துக்கும் அடுத்துத் தெளிவாக காணும் பல்லவர் காலத்துக்கும் இடையே தமிழக வரலாற்றிலேயே ஓர் இருண்டகாலம் வருகிறது. அந்த இருண்ட காலத் தொடக்கம் கி. பி. மூன்றும் நூற்றாண்டு என்பர். நமது கால எல்லை கி. மு. மூன்றும் நூற்றாண்டு தொடங்கிக் கி. பி. மூன்றும் நூற்றாண்டின் தொடக்கம்வரை அமைகின்றது எனக்கொள்வது பொருந்தும் என நினைக்கிறேன்.

## சைவம் என்பது யாது?

இனி, **சைவம்** என்பது யாது எனக் காண வேண்டும். அறிஞர் பலர் அதுபற்றிக் கண்டும் காட்டியும் உள்ளனர். சிவசம்பந்தமுடையது சைவம். சிவம் யாது? எத்தகையது? சைவ சித்தாந்த சமரச அன்பர்களுக்கு அதுபற்றிய விளக்கம் தேவையில்லை. சிவனை இடையறாது எண்ணி எண்ணி உள்ளத்து உணர்வால் போற்றி வழிபடும் புண்ணிய வினையே வாழ்வின் பயன் எனப் பல ஆண்டு களாகப் பல அரும்பெரும் புலவர்கள் காட்டிவரும் சிவநெறிச் சிறப்பினை என்னால் காட்டமுடியும் கொல்? இயலாது! எனினும், கொண்ட பொருளுக்கு ஏற்ப ஓரிரண்டு காட்டி அமைகின்றேன்.

'சிவம்' என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளன. நன்மை என்பது ஒரு பொருள். முத்தி என்ற பொருளும் உண்டு, செம்மை என்றும் சொல் லுவர். 'சிவம் என்னும் நாமம் தனக்கே உரிய செம்மேனி அம்மான்' என்ற சிவனைப்பற்றிய அடியும் எண்ணத்தக்கது. எனவே, செம்மை என்பது எதுவோ—அனைத்துக்கும் அப்பாலாய் நின்று அனைத்தையும் ஆக்குவது எதுவோ— உலக உயிர்களுக்கு நன்மை தருவது எதுவோ—எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பது எதுவோ அதுவே **சிவம்**

எனப்படும். அச்சிவசம்பந்தமுடையதே சைவநெறி. இது பற்றி விளக்கிப் பேசின் வாழ்வின் எல்லை போதாது. எனவே, 'நாடெங்கும் நலம்பெற்று வாழ வழி காட்டுவதே சிவநெறி என்ற சைவம்' என்னும் அளவோடு அமை கின்றேன்.

## சத்தியும் சிவனும்

இச்சிவநெறி பற்றிய விளக்கங்கள் பல. இந்நெறிக்கு முதல்வன் **சிவன்.** அவனைப் பிரியாதிருப்பவள் **சத்தி.** சத்தியும் சிவமும் கலந்து அன்றுமுதல் ஆற்றும் அலகிலா விளையாடல்களைப் பாடுவனவே சைவ சமய நூல்கள் அனைத்தும். அணுவுக்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய் இருக்கும் ஆண்டவனை வழிபட்ட அடியவர்கள், அவனைப் பலப்பல வகைகளில் பலப்பல தோற்றங்களில் கண்டு வழி பட்டார்கள். அதனாலேயே உலகில் பல்வேறு சமயங்களும் சைவ சமயத்துக்குள்ளேயே பல்வேறு வழிபடு முறைகளும், பல்வேறு கடவுளர் அமைப்புக்களும் தோன்றலாயின. மணிவாசகர்.

> **' தென்னா டுடைய சிவனே போற்றி**
> **எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி'**

என்று இதனாலேயே கடவுள் தன்மையை எடுத்துக் காட்டினார்.

## கடவுள் ஒருவனே

இச் சிவன் உருவமாகவும் அருவமாகவும் அருவுருவ மாகவும் இருந்து ஐந்தொழில் புரிந்து உயிர்களின் வாழ்வை வளம்பெறச் செய்யும் நிலையில் பலப்பல வேடங் களில் விளையாடி வினையாற்றுகின்றான். அவ்வப்போது அவனுடைய தோற்றத்தில் எத்தனையோ மாறுதல்கள் காணுகின்றனர் அவன் அடியவர்கள். அவ்வவற்றைப்பற்றி அவனுக்குப் புதுப்புது பெயர்கள் சூட்டுகின்றனர். நீல

கண்டன், ஆலமர்செல்வன், பிறைசூடி, நீறணிந்தோன், மழுவேந்தி, பிஞ்ஞகன், பரசுபாணி, முருகன், வேலன் என்ற பல பெயர்கள் அவ்விறைவன் தோற்ற நிலைகளுக்கு ஒப்ப அமைகின்றன எனினும் **ஆண்டவன் ஒருவனே.**

**'ஒருநாமம் ஓருருவம் ஒன்று மிலார்க்கு ஆயிரம்**
**திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ'**

என்று மாணிக்கவாசகர் உளமுருகிப் பாடுவது இதுபற்றியே யாகும்.

### கால எல்லை

இச் சிவன் அல்லது இறைவன் 'என்று தோன்றினன்' என்று சொல்ல முடியாது. அவன் காலமும் கணக்கும் நீத்த காரணன்; கால காலன்; அவனைக் கால எல்லையில் கட்டுப்படுத்த முடியாது. எனினும், நம் சமரசம் அவன் வாழ்வைக் கால எல்லைக்குள் கட்டுப்படுத்த விரும்பு கிறது தான் காலம் கடந்தவனாயினும், 'வேண்டுவார் வேண்டுவதே ஈதல்' அவன் தொழிலாதலின், அவனும் அதற்குக் கட்டுப்பட்டுவிட்டான். ஆம்! நான் அவனைச் சங்ககால எல்லையில் கட்டுப்படுத்தி, அக்காலத்தில் அவன் எவ்வெவ்வாறு தமிழ்நாட்டில் களிநடம் புரிந்தான் என்பதைக் காட்டல் வேண்டும். சங்க காலத்தில் சைவம் வாழ்ந்த வகையைக் காட்டுவதே என் பணி. அறுதியிட்ட கால எல்லை ஆண்டவனுக்கு இன்றேனும் நமக்கு உண்டு. எனவே, என் கால எல்லையில் நின்று உற்ற பணியினைத் தொடர்கின்றேன்.

### சங்ககாலச் சமயங்கள்

சங்க காலத்திலே சைவமே தமிழ்நாட்டில் தலை சிறந்த சமயமாக இருந்தது. அதை அடுத்து, வைணவமும் சிறந்திருந்தது. பௌத்தமும் சமணமும் தமிழ்நாட்டில்

அத்துணை விரிவடையவில்லை. சங்க காலத்து இறுதியிலும் அதை ஒட்டிய காலத்திலுமே பௌத்தமும் அதை அடுத்துச் சமணமும் தமிழ் நாட்டில் கால்கொள்ளத் தொடங்கின. எனவே, சங்ககாலத் தமிழ்நாட்டின் சமயம் சைவம் என்று திட்டமாகக் கூறலாம். சிவனைப் பற்றிய பலவகையான கதைகளும் தோற்ற விளக்கங்களும் அக்காலத்தில் தமிழ் நாட்டில் நிறைந்திருந்தன. சங்க காலத்தில் சில சமயங்கள் வாழ்ந்தன என்றாலும், அவற்றுள் மாறுபாடு இல்லை. ஒற்றுமை அவற்றின் அடிப்படையில் சிறந்தது. எனவே, எந்தச் சமயத்தைச் சார்ந்து நின்ற போதிலும் அக்காலத்தில் அவர்கள் ஒற்றுமையாகவே வாழ்ந்தார்கள்.

## திருமுருகாற்றுப்படையும் பரிபாடலும்

சங்க காலத்தில் சிவன் 'பிறவா யாக்கைப் பெரியோனாகி' முதலிடத்தில் வைத்துப் போற்றப்படுகிறான். அவனுடைய பல்வேறு சிறப்பியல்புகள் சங்க இலக்கியங்களில் நன்கு பேசப்படுகின்றன. ஆம்; சங்க காலத்தை அறிவதற்கு அக்கால இலக்கியங்களை அன்றி வேறு சான்றுகள் நமக்குக் கிடையா. எனவே அச் சான்றுகளைக் கொண்டே நாம் சங்ககாலச் சைவத்தைக் காண முடிகின்றது. அக்காலத்தில் பிற்காலத்தே இறைவனை முன்னிறுத்திப் பாடியதாக உள்ள தோத்திரப் பாடல்களைப் போன்ற பாடல்கள் இல்லை. திருமுருகாற்றுப் படையும், பரிபாடலும், முருகன், திருமால் ஆகிய இருவரைக் குறித்த பாடல்களாக, அவ்வாறு இறைவனை முன்னிறுத்திப் பாடும் வகையில் அமைகின்றன. அவற்றுள் முருகன் புகழும் திருமால் சிறப்பும் நன்கு விளக்கப் பெறுகின்றன. முருகன் தமிழ்நாட்டு ஆறுபடை வீடுகளில் தங்கியதோடன்றிக் குன்றுதோ

ருடுங் குமரனுய் 'அஞ்சல்' என்று அண்டி வருபவரை ஆதரிக்கும் வள்ளலாய்க் காட்சி தருகின்ருன். பரி பாடலில் அவன் முன்னின்று அடியவர் வேண்டும் வரம் வையத்தை வாழவைக்கும் வரமாக அமைந்துள்ளது. பரிபாடலில் திருமால் ஆதிமூலமாக அனைத்தையும் தோற்றிப் படைத்துத் துடைக்கும் செல்வனுகப் போற்றப் படுகின்ருன். இவ்விரு பெருங்கடவுளரையும் முன் னிறுத்தி அடியவர் வேண்டி விடுத்த விண்ணப்பங்கள் பல, நாம் ஈண்டு அவற்றையெல்லாம் ஆராய வேண்டா. திரு முருகாற்றுப்படை சைவ இலக்கியத் தொடர் வரிசை யிலே பதினேருந் திருமுறையிலேயும் இடம் பெற்றுள் ளது. எனவே, சைவ உலகம் அதை ஓதி உணர்ந்து உற்றதொரு பயன் கண்டுள்ளது. எனவே, இன்று இத் தகைய முன்னிறுத்திப்பாடும் இலக்கியங்களை விடுத்துப் பிற சங்க இலக்கியங்கள் வழி அக்காலச் சிவவழி பாட்டைக் காண விழைகின்றேன்.

## பிள்ளையார்

இன்று சைவசமயத்தைப் பற்றிப் போற்றுகின்ற அடியவர்கள் சிவன், அம்மை முருகன், பிள்ளையார் ஆகிய வர்களையே முக்கியமாகப் போற்றுவர். எனினும், பிள்ளை யாரைப் பற்றிச் சங்க இலக்கியங்களில் எங்கும் குறிப்பே காணப்பெறவில்லை. ஏழாம் நூற்ருண்டில் பரஞ்சோதி யாரின் வாதாபியின் படை எடுப்புக்குப் பின்பே அவர் வழிப் பிள்ளையார் வணக்கம் தமிழ் நாட்டில் நுழைந்தது என்பது ஆராய்ச்சியின் துணிபு. இலக்கியங்களிலும் முதன் முதல் ஞானசம்பந்தர் தேவாரமாகிய 'பிடியதன் உரு உமைகொள்' என்ற பாட்டிலே தான் பிள்ளையாரைப் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது.

## முருகன்

சங்க இலக்கியங்களில் பிள்ளையார் பேசப்படவில்லை யாயினும் முருகன் யாண்டும் நீக்கமற நிறைந்து காணப் படுகின்றான். திணைநிலத் தெய்வங்களுள் ஒருவனாக-குறிஞ்சிக் கொற்றவனாக நின்று மிகப் பழங்காலத்திலேயே அவன் காட்சி வழங்குகின்றான். மஞ்சு சூழ் மலையின் இயற்கை எழில்—அழகு—அவன் காட்சியாக விளங்கு கின்றது. மலைதோறும் மகிழ்ந்துறையும் நம் வள்ளி மணாளன் அன்றே 'நம் செந்தில் மேய வள்ளி மணாளனாக' அலைவாய்க் கடற்கரையில் காட்சி தருகின்றான். எனவே, நிலத்தெய்வமாக நிற்பதோடு அன்பர் மனநிறை தெய்வ மாகவும் அவன் காட்சி தருகின்றான்- மணவாழ்வில் புகும் பெண்டிர் தாம் விரும்பும் கணவரைப் பெற அவனைப் போற்றி வணங்கியதைக் காண்கின்றோம்.

முருகன் அலைகடல் நடுவுள் பேருருக் கொண்டு நின்ற சூரனைக் கொன்றவன் என்பதையும், அவனைப் பெற்றவள் ஒப்பற்ற அன்னையாகிய சத்தி என்பதையும், உருத்திரங் கண்ணனார் தம் பெருபாணாற்றுப் படையால் அழகு படக் காட்டுகின்றார். அந்த அன்னையைச் சூழ்ந்து பூதகணங்கள் ஆடிப்பாடி அவள் புகழ் போற்றுவதையும், அதைப் போன்றே நமது காஞ்சியில் வாழ்ந்த மன்னன் இளந் திரையனைப் பாடின் பரிசு பெறலாம் எனவும் காட்டு கின்றார் அவர்.

'வெண்திரைப் பரப்பின் கருஞ்சூர் கொன்ற
பைம்பூண் சேய் பயந்த மாமோட்டு
துணங்கைஅம் செல்விக்கு அணங்கு நொடித்தாங்கு
தண்டா ஈகைநின் பெரும்பெயர் ஏத்தி
வந்தேன் பெரும்'

(பெரும். 458-61) என்பது அவர் வாக்கு.

இம் முருகன் சூரனைக் கொன்ற வரலாற்றைப் பதிற்றுப்பத்து,

'சூருடை முழுமுதல் தடிந்த பேரிசை
கடுஞ்சின விறல்வேள்

(பதிற். 11) எனக் காட்டுகின்றது. இம் முருகன் கரிய மணமிக்க கடம்ப மலர் அணிந்திருந்த சிறப்பை,

கார் நறுங் கடம்பின் பாசிலைத் தெரியல்
சூர்நவை முருகன்'—(புற. 38) எனப் புறநானூறு எடுத்துக் காட்டுகின்றது.

இம் முருகனைப் போற்றும் வழியறிந்து வழிபாடியற்றும் முறையே முருகாற்றுப் படையாகப் பின் உருப் பெற்றது என்ற உண்மையை, அகநானூற்றில்,

'உருவச் செந்தினை குருதியோடு தூஉய்
முருகாற்றுப் படுத்த உருகெழு நடுநாள்' (அகம். 20)

என்று வெறிபாடிய காமக் கண்ணியார் அழகுபடக் காட்டுகின்றார். இம்முருகனது வென்றிச் சிறப்பைப் பாடியதால்தான் போலும் அவர் 'வெறிபாடிய' என்ற அடையால் பாராட்டப்பெற்றார். எனவே, முருகன் சங்க காலத்தே கொற்றவையின் மைந்தனாக-வெற்றி விளக்கும் விறலோனாக விளங்கினான் என்பது நன்கு போதரும்.

## சிவனும் திருமாலும்

திருமால் வைணவ சமயத்து முதற்பெருந் தெய்வமாகப் போற்றப்படினும் சிவத்தொடு இணைத்தே சைவர்கள் வழிபடுகிறார்கள். 'அரியலால் தேவி இல்லை' எனப் பிற்காலத்தே அப்பர் பாடினார். திருமலையில் உள்ள இறைவனைப் பாடிய ஆழ்வார் 'திரண்டருவி பாயும் திருமலை மேல் எந்தைக்கு இரண்டுருவம் ஒன்றாய் இயைந்து' இருந்ததென நலம் தோன்ற நன்கு காட்டுகின்றார். சைவர் கோயில்களில் திருமால் உருவமும் நிலைத்த இடம் பெற்றிருப்பதை இன்றும் காண்கிறோம். சங்க காலத்

திலும் சிவனையும் திருமாலையும் சேர்த்துப் பிணைத்துப் பார்த்த பேரறிஞர்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.

மாலைக் காலம் மகிழ்ச்சிக் குரியது. செவ்வானம் கோடிட்டு, கதிரவன் மறைந்த காட்சியை அழகுபடக் காட்டுகிறது. அதே வேளையில் கடல் தன் கரிய அலைகளை வீசுகின்றது, குமரி முனையிலோ அன்றி மேலைக் கடற் கரையிலோ அமர்ந்து மாலையின் இன்பத் தோற்றத்தில் தன்னைப் பறிகொடுத்த புலவர் நன்கு துய்த்து நிற்கின்றார். அப்போது அவர் உள்ளத்துச் சிவனும் திருமாலும் வந்து தோன்றுகின்றனர். செக்கர் வானம் சிவனுடைய தோற் றத்தை நினைப்பூட்டுகிறது. கரிய கடல் நீலமேக நெடும் பொற்குன்றமாகிய திருமாலை நினைப்பூட்டுகிறது. இருவரும் இணைந்து நிற்கும் காட்சியும் அவருக்குத் தெரிகின்றது இருவரும் அருந்திறல் பெற்ற கடவுளர். இருவரும் இணைந்தே உலகினைப் புரக்கின்றனர். இத்தனையும் எண்ணிப் பார்க்கின்றார் மதுரைக் கண்ணத்தனார் என்ற பெரும் புலவர். அவர் வாய் பாடுகின்றது:

**'வெருவரு கடுந்திறல் இருபெருந் தெய்வத்து**
**உருவுடன் இயைந்த தோற்றம் போல**
**அந்தி வானமொடு கடலணி கொளாஅ**
**வந்த மாலை'** (அகம். 360) என்றது அவர் வாய்.

இவ்வாறு இருபெருந் தெய்வத்தையும் இணைத்து ஒன்றிய சமய உண்மையைக் கைக்கொண்டனர் சங்க காலச் சைவர். இங்கு இரு பெருந் தெய்வ நிலையைச் சத்தியும் சிவனும் இணைந்தநிலை என்று கொள்ளவும் இடமுண்டு. உமையும் கரியநிறம் உடைமையின் கரிய உருவைத் திருமாலாகவே கொண்டு ஆழ்வார் காட்டியபடி 'இரண்டுருவம் ஒன்றாய் இயைந்து' நின்ற காட்சியைக் கொள்வதே சிறப்புடையதாகும். இவ்வாறு சிவனும் மாலும் இயைந்த நெறி சங்க காலச் சமய நெறி.

இத்திருமால் கிடக்கும் நிலைகண்டு மேலே செல்வோம். அண்மையில் உள்ள காஞ்சியில் திருவெஃகாவில் திருமால் பள்ளி கொண்டுள்ளார், அதைக் காண்கிறார் புலவர். இயற்கையோடு கடவுள் வாழ்வு பின்னப் பெறுவது புலப்படுகிறது. பாம்புப் பாயலில் திருமால் கண் வளரும் காட்சி, புலவருக்குக் கரிய மலையையும் அதன் மேல் துயிலும் யானையையும் நினைப்பூட்டுகிறது. மலைமீது காந்தள் நிறைந்துள்ளது. அந்த இயற்கை எழிலோடு திருவெஃகாவின் திருமால் காட்சியைப் பிணைக்கின்றார் புலவர். இதோ அவர் அடிகள்:

**காந்தளஞ் சிலம்பில் களிறு படித்தாங்கு**
**பாம்பணைப் பள்ளியுள் அமர்ந்தோன்'** (பெரும். 371-73)

இவ்வாறு பல இடங்களில் திருமால் போற்றப்படுகின்றார். நாம் இந்த அளவோடு அவர் பற்றிய குறிப்பை நிறுத்தி மேலே செல்வோம்.

## சத்தி வணக்கம்

உமை அம்மையார் சங்க இலக்கியங்களிலே சிவனோடு சார்த்தியே பேசப்படுகின்றார். அன்றித் தனியாகக் காணும்போது காடுறை தெய்வமாக-துர்க்கையாகக் காட்டப் பெறுகின்றார். 'கானமர் செல்வி அருளின்' (அகம். 345) என அக் கொற்றவையின் அருள் நலம் பாராட்டப் பெறுகின்றது. 'ஒருகுழை ஒருவன்' (கலி. 26) எனவும், 'ஈர்ஞ்சடை அந்தணன் உமை அமர்ந் துயர்மலை இருந்தனன்' (கலி, 35) எனவும் அம்மை இறைவனோடு சேர்த்தே பேசப்பெறுவதையும் காணமுடிகின்றது. சிவ வழிபாடே அன்றிச் சத்தியாகிய அம்மை வழிபாடும் அச்சங்க காலத்தில் இருந்தது என்பதும், அவ்வழிபாடு தனித்த முறையிலும் சிவனோடு சேர்த்தும் ஆற்றப் பெற்றது என்பதும் நன்கு தெரி

கிறது. இச்சத்தி வழிபாடு சங்ககாலத்தை அடுத்து எழுந்த சிலப்பதிகாரத்தில் நன்கு போற்றப் பெறுகிறது. 'கானமர் செல்வி அருளின்' என்ற அகநானூற்றுக்கு விளக்கமாக வேட்டுவ வரியே அமைந்துள்ளது.

' சங்கமும் சக்கரமும் தரமரைக் கையேந்தி
செங்கண் அரிமான் சினவிடைமேல் நின்ருயால்
கங்கைமுடிக் கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை உருவாகி மறை ஏத்தவே நிற்பாய் '

என்று அச்சத்தியாகிய கொற்றவையை முன்னிறுத்திப் பாடி, வேட்டுவராடும் கூத்துட்படும் நிலையை இளங்கோ வடிகள்,

" ஆய்பொன் அரிச்சில்ம்பும் சூடகமும் மேகலையும்
ஆர்ப்ப ஆர்ப்ப
மாயஞ் செய் வாளவுணர் வீழ நங்கை மரக்கால்மேல்
வாளமலை ஆடும் போலும்!
மாயஞ் செய் வாளவுணர் வீழ நங்கை மரக்கால்
மேல் வாளமலை ஆடுமாயின்
காயா மலர் மேனி ஏத்தி வானோர் கைபெய்
மலர்மாரி காட்டும் போலும்!"

என விளக்கிக் காட்டியுள்ளார். இவ்வாறு போற்றப் படும் அம்மையின் மகனே முருகன் என்பதைத்தான் நக்கீரர் 'மால்வரை மலைமகள் மகனே' (256-57) என்றும், 'வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ' (259) என்றும் 'இழையணி சிறப்பிற் பழையோள் குழவி (259) என்றும் பாராட்டுகின்ருர். அவர் வாக்கின் வழி உமையம்மையார் இமவான் மகளாகிய வரலாறும் கொற்றவையாகிச் சிறந்த பெருமையும், பிறவும் நன்கு விளங்குகின்றனவன்ருே!

### சங்க நூல்களின் சிவன்

இனிச் சிவபெருமான் பற்றிச் சங்க காலத்தில் வந்த இடங்களைக் காணலாம். சிவபெருமானுக்கு உகந்த

நாள் திருவாதிரை. இம்மார்கழித் திங்களில் வரும் ஆதிரை நிறைமதி கூடிய நன்னாள் சிவனாரின் திருநாளாகக் கொண்டாடப் பெறுகின்றது. 'அத்தன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்' எனப் பாடுகின்றார் அப்பர். அந்த நாள் சிவனுடைய நாள் என்பதை,

'அரும்பெறல் ஆதிரையான் (கலி 160—20) என்று கலித்தொகை காட்டுகின்றது. இதே கலி சிவனைக் 'கொன்றை அலங்கல்அம் தெரியலான்' எனவும், 'பிறங்கு நீர்ச் சடைக் கரந்தான்' எனவும், 'ஏற்று ஊர்தியான்' எனவும். 'புதுத் திங்கட் கண்ணியான்' எனவும் பாராட்டு கின்றது. இவ்வாறு சிவபிரானுக்கு இன்று நாம் அமைக் கின்ற அத்தனைச் சிறப்புக்களும் சங்க காலத்திலேயே அமைந்திருந்தன என்பதை வெளிப்படையாகக் கண்டு அறியலாம். இன்னும், அச்சிவனார் பற்றிய பல வரலாறு களும் சங்ககால இலக்கியங்களில் நன்கு பேசப்பெறு கின்றன.

## இராவணன் கயிலையைப் பெயர்த்தமை

இராவணனைப் பற்றிய வரலாறு நாடு அறிந்த ஒன்று. நாற்புறமும் சுற்றி வெற்றிமாலை சூடிவந்த இராவணன் இமயமலைப்பக்கம் வர, அது தடுத்து நிற்க, அதை அப்படியே பெயர்க்க நினைத்தான். மலை ஆட, உமை அஞ்சி நிற்க, இறைவன் தன் விரலால் அழுத்த இராவணன் அம்மலையின் கீழ் நெடுநாள் உழந்தான். பின் நாரதர் காட்ட அருள் நிலை பெற்றுச் சாமவேதம் பாடிப் பிழைத்தான். இக்கதை நாடறிந்த ஒன்று இதையும் மற்றொன்றையும் சேர்த்துக் கலித்தொகைப் பாட்டு ஒன்று அழகுற நமக்குக் காட்டு கின்றது.

**' இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்**
**உமையமர்ந் துயர்மலை இருந்தன னாக**

ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையின் கீழ்ப்புகுந்து அம்மலை
எடுக்கல் செல்லாது உழைப்பவன் போல''
(கலி. 38, 1-5)

என்று இராவணன் வரலாறு மட்டுமன்றிச் சிவன் மேருவை வில்லாக வளைத்த வரலாறும் அப்பாட்டில் குறிப்பிடப் பெறுகின்றது,

முப்புர எரிப்பு

மேருவை வளைத்த வரலாறு ஈண்டுக் குறிப்பாகக் காட்டப் பெறினும், மற்றொரு சங்கப் பாடலில் நன்கு விளக்கமாக எடுத்துக் காட்டப் பெறுகின்றது. திரிபுரங்களை வென்ற வரலாறே மலையை வில்லாக வளைந்தது. பெரும்பாம்பே நாணாக நின்றது. அவ்வில்லிடை நாணேற்றி அம்பு காட்டி மூன்று புரங்களையும் எரித்தான் சிவபெருமான் என்பதை,

ஓங்குமலைப் பெருவில் பாம்புநாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற்று அண்ணல் காமர் சென்னி
பிறை நுதல் விளங்கும் ஒருகண் போல ' (புறம். 56)

என மதுரை மருதன் இளநாகனார் நன்கு காட்டுகின்றார், இதில் மூவெயில் உடற்றிய வரலாறு மட்டுமன்றிச் சிவனைக் கறைமிடற்று அண்ணலாகவும், பிறை அணிந்தவனாகவும், நுதல் வழி நாட்டத்து இறையோனாகவும் காணும் வரலாறுகளும் அமைந்துள்ளன.

மற்றும், இச்சிவன் மூவெயிலை உடற்றிய காரணத்தையும், அவனுடைய கணிச்சிப்படையையும் கலித்தொகை காட்டுகிறது:

''மடங்கல்போல் சினைஇய மாயஞ்செய் அவுணரைக்
கடத்தடு முன்பொடு முக்கண்ணான் மூவெயிலும்

உடன்றக்கால் முகம்போல ஒண்கதிர் தெறுதலின்
சீரருங் கணிச்சியோன் சினவலின் அவ்வெயில்
வரைபிளந்த (கலி-2)

என்ற பாலைக் கலியில் அவனது மூவெயில் வென்ற முக்கண் சிறப்பும் பிறவும் பேசப்படுகின்றன.

## சடை முதலியன

சிவனது தாழ்ந்த பிறை அணிந்த சடை, முக்கண், கறைமிடறு இவற்றைச் சங்க நூற்பாக்களின் அடிகள் நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

''மிக்கொளிர் தாழ்சடை மேவரும் பிறைநுதல்
முக்கணான் உருவே போல்'' (கலி-204)

என்ற கலித்தொகையும்.

''ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணியிடற் றோனும்'' (புறம்-55)

என்ற புறப்பாடலும்,

''பணியி யரத்தை நின்குடையே; முனிவர்
முக்கட்செல்வர் நகர்வலம் செயற்கே'' (புறம்-6)

என்ற காரிகிழார் பாடலும்,

''பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீல மணிமிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும் நீயே'' (புறம்-32)

என்ற ஔவையின் பாடலும்,

''மிக்கொலி தாழ்சடை மேவரு பிறைநுதல்
முக்கணான்'' (கலி-114)

''பெரும்பெயர்க் கணிச்சியோன் மணிமிடறு'' (கலி-205)

என்ற கலித்தொகை அடிகளும், சிவனுடைய உடலிலமைந்த பல்வேறு தோற்றப்பொலிவுகளை நன்கு விளக்கிக் காட்டுகின்றன அன்றோ! இவையே அன்றிச் சிவனைப் பற்றிய வேறு சில குறிப்புக்களும் சங்க கால இலக்கியங்

களில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று அவன் 'ஆலமர் செல்வனாக' அமர்ந்த சிறப்பாகும்.

## ஆல முற்றம்

கல்லாலின் புடை அமர்ந்து வல்லார்க்கு அறமுரைத்த பெருந்திறல் பிற்காலச் சமய இலக்கியங்களிலெல்லாம் நன்கு பேசப்படுகின்றது. சங்க இலக்கியங்களும் சிவனுக்கு உரிய பல்வேறு சிறப்புக்களோடு இவ் வால முற்றத்தையும் குறிப்பிடுகின்றன. **ஆலமுற்றம்** சிவனுக்கே உரியதென்பதை,

> **" ஞாலம் நாறும் நலங்கெழு நல்லிசை**
> **நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்**
> **ஆலமுற்றம் கவின் பெறத் தைஇய**
> **பொய்கை சூழ்ந்த பொலன்மனை மகளிர்"** (அகம் 181)

என அகநானூறு அழகுற நன்கு எடுத்து விளக்கிக் காட்டுகின்றது. இதையே,

> **" ஆலமர் கடவுள் அன்னநின் செல்வம்**
> **வேல்கெழு குரிசில் கண்டேன் ஆதலின்"** (புற. 198)

என்று வடம வண்ணக்கன் பேரிசாத்தனாரும்,

> **" நீலநாகம் நல்கிய கலிங்கம்**
> **ஆலமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த**
> **.........ஆயும்"** (சிறுபாண். 96-99) என்று

நல்லூர் நத்தனாரும் பாடியிருப்பதைக் காணலாம்,

## சூலம்-கொடி முதலியன

இவ்வாறு ஆலமர் செல்வனாய்-அறமுரைத்த அண்ணலாய்-அம்மையப்பராய் விளங்கிய சிவன் சூலம் பிடித்த சுடர்ப்படை உடையவனாகவும் உள்ளான் எனபதை,

"சூலம் பிடித்த சுடர்ப்படைக் காலக் கடவுள்"

என்று பதிற்றுப்பத்து அடி காட்டுகின்றது. இச் சிவ பெருமான் உமையோர் பாகத்தன் ஆகி உள்ளமையின் ஒரு

குழை அணிந்தவன் எனக் காட்டப்பெறுகின்றான் அத்துடன் அவனுக்கு ஏறு வாகனமாக இருப்பதோடு கொடியாகவும் இருக்கின்றது. இரண்டையும் பிணித்த பெருங் கடுங்கோ,

"ஒரு குழை ஒருவன் போல்" எனவும்,
"ஆனேற்றுக் கொடியோன் போல்" எனவும்,

தமது பாலைக் கலியுள் (26) பொருள் பொதிந்து காட்டு கின்றார். இன்னும் கடவுள் வாழ்த்துப் பாடல்களுள் இவ்வுண்மைகள் பேசப் பெறுகின்றன, அவை காலத்தால் பிந்தியன என்பவாகலின் அவற்றை விட்டு மேலே செல் வோம்.

இச் சிவ பெருமான் சடையுள் கங்கையைக் கரந்த வரலாறும் சங்க இலக்கியத்தில் காணமுடியும். அக் கங்கை இமயத்து உச்சியிலிருந்து-இமையவர் வாழும் அப் பெருமலை உச்சியிலிருந்து-கிழக்கிறங்கி, வான் கிழித்து ஓடிவரும் பேராறு என்பதையும் அன்றே காட்டியுள்ளனர் புலவர்.

"பிறங்கு நீர் சடைக் கரந்தான்" (கலி 150) என்று இவன் கங்கையைக் கரந்த வரலாறு கூறப்பெற்றுள்ளது. அக் கங்கை இழிதரும் சிறப்பினை,

"இமையவர் உறையும் சிமையச் செவ்வரை
வெண்திரை கிழித்து விளங்குசுடர் நெடுங்கோட்டுப்
பொன்கொழித்து இழிதரும் போக்கருங் கங்கைப் பெருநீர்"
(பெரும் பாண். 429-31)

என்று பத்துப்பாட்டு அடிகள் காட்டுகின்றன.

## சிவனே தலைவன்

இவ்வாறு வேண்டுவார்க்கு வேண்டிய வகையிலே வடிவு காட்டி, ஆலமர் செல்வனாய்—கறைமிடற் றண்ணலாய்-முக்கண் முதல்வனாய்-பிறை சூடிய பெம்மானாய் விளங்கி, அணுவுக்கு அணுவாய் நின்ற அதே சிவன், அப்

பாலுக் கப்பாலாய் நின்று பஞ்ச பூதங்களையும் தோற்று வித்து இயக்கும் ஒப்பிலி அப்பனுகவும் விளங்குகின்ருன். அடியவர்கள் பொருட்டு அவரவர் விரும்பிய வண்ணம் காட்சி வழங்கும் அதே ஆண்டவன், 'கல்லாதார் மனத் தணுகாக் கடவுளாக' நிற்பதோடு, கற்றவரும் எளிமையில் காணமுடியாது அப்பாலுக்கப்பால் நிற்கின்ருன் என்பதை எச்சமய நூலாரும் உற்று உணர்ந்து ஓதி வைத்துள் ளார்கள். மற்றும் அம்முழுமுதற்பொருள் உலகம் அனைத்தும் தோன்றுதற்கு முதற் காரணமாய ஐம்பெரும் பூதங்களை ஆக்கி அவற்றுடன் தானும் கலந்து அலகிலா விளையாடலைப் புரிகின்ருன் எனவும் காட்டுவர். இவற்றையெல்லாம் தொகுத்து,

> "நீரும் நிலனும் தீயும் வளியும்
> மாக விசும்பொடு ஐந்துடன் இயன்றிய
> மழுவாள் நெடியோன் தலைவனுக" (மதுரை. 453-55)

என்று மாங்குடி மருதனுர் மழுவைத் தாங்கிய சிவ னுடைய முடிவிலாற்றலுடைமையை நன்கு காட்டுவது அறியற் பாலதாகும்.

இவ்வாறு யாண்டும் நீக்கமற நிறைந்து நிற்கும் கடவுளை—உள்குவார் உள்ளத்து உள்கும் வடிவாய்த் தோன்றி வரமளிக்கும் ஆண்டவனை-அடியவர்கள் ஒருங்கு கூடிப் பலவிடங்களில் தொழுது வந்தனர். கடவுள் வழி பாட்டிற்கெனத் தனித்த இடங்கள் அமைக்கப் பெற்றி ருந்தன. அவைகள் இயற்கைச் சூழல்களோடு அமைந்து இருந்தன. மக்கள் அவ்விடத்தே காலமறிந்து சென்று ஆடிப் பாடிப் பரவிப் போற்றிப் புகழ்ந்து வாழ்த்தி வரம் பெற்ருர்கள்.

> பெறற்கரும் தொல்சீர்த் துறக்கம் ஏய்க்கும்
> பொய்யா மரபில் பூமலி பெருந்துறை
> செவ்விகொள் பவரோடு அசைஇ—அவ்வயின்

**அருந்திறல் கடவுள் வாழ்த்தி, சிறிது நும்**
**கருங்கோட்டுக்கு இன்னியம் இயக்கினிர் கழிமின்''**
(பெரும். 388-92)

என்று உருத்திரங் கண்ணனார் நன்கு எடுத்துக் காட்டுகின்றார். அவருடைய பெயரே அவர் சிவனிடம் நீங்காத ஈடுபாடு உடையவர் எனக் காட்டுகிறது. எனவே அவருடைய பாடல்களில் சிவனைப் பற்றிய குறிப்புக்களையும் காண முடிகின்றது. இவ்வாறு கடவுள் தங்கும் இடங்களுக்கு அக்கடவுள் பெயரையே இடும் வழக்கமும் உண்டு. மலைவளம் பாடிய பெருங்குன்றூர்க் கிழார் இவ்வாறு ஒரு காடு இருந்ததைக் **'கடவுள் பெயரிய கானம்'** (பதிற் 9) என்றே காட்டைக் காட்டுகின்றார். இவ்வாறு எல்லையற்ற ஆண்டவனைக் கற்றார் மட்டுமன்றிக் கல்லாரும் கண்டு உணர்ந்து போற்ற வேண்டி எல்லையிட்ட இடத்திலே அமைத்து வழிபட அன்றைய தமிழ் மக்கள் தொடங்கி விட்டனர் என அறிகின்றோம். இனி அவர்கள் வழிபட்ட முறைகளுள் ஒன்றிரண்டு கண்டு மேலே செல்லலாம்.

## வழிபாட்டு முறைகள்

கடவுளுக்குப் பலியிட்டுப் பணிகின்ற வழக்கம் இருந்தது என அறிகிறோம். முருகனுக்கு மறி அறுத்தார்கள் எனத் திருமுருகாற்றுப்படையே குறிக்கின்றது. இவ்வாறு பலியிட்டுப் பரவிய வணக்கத்தையும், அவர்கள் அவ்வாறு பலியிட்டு ஆற்றிய வழிபாடு அச்சத்தின் பாற்பட்டது என்பதையும்,

**' கணங்கெழு கடவுட்கு உயிர்ப்பலி தூவிப்**
**பரவினம் வருகம் சென்மோ தோழி '** (நற். 358)

என்ற நற்றிணை அடிகள் நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

நன் மகப்பேறு எய்தற்குக் கடவுளை வணங்குவர் என்பதையும் அவ் வணக்கத்தின் வழிப் பேறுபெற்றுச் சிறந்தார்கள் என்பதையும்,

'குன்றக் குறவன் கடவுட் பேணி
இரந்தனன் பெற்ற எல்வளைக் குறுமகள்'

என்ற ஐங்குறுநூற்று (257) அடிகள் எடுத்துக் காட்டுகின்றன. தலைவி தம் குலத்தெய்வத்துக்குச் சிறக்க ஆற்றும் வழிபாட்டு முறையை அதே நூல் நன்கு காட்டுகின்றது:

"குன்றக் குறவன் காதன் மடமகள்
மன்ற வேங்கை மலர்சில கொண்டு
மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தி
தேம்பலிச் செய்த ஈர்நறுங் கையின்" (ஐங். 259)

என்று, அவர்கள் மலர் தூவி வழிபட்டதை இவ்வடிகள் காட்டுகின்றன.

அகப்பொருள் துறைப் பாடல்கள் சங்க காலத்தில் சிறந்து நின்றன; பெரும்பாலன அகப் பாடல்களே. அவற்றுள் **காதல் ஒழுக்கமே சிறந்ததாகப்** பேசப் பெறுகின்றது. அக் காதல் ஒழுக்கத்துக்கு இடையில்தாம் மேலே நாம் கண்ட கடவுள் உண்மை பற்றிய பல காட்சிகள் காட்டப் பெறுகின்றன. அகமும், ஐங்குறுநூறும், கலியும். நற்றிணையும் முழுக்கமுழுக்க அகத்தைப் பற்றிப் பாடுவன: அவற்றுளெலாம் கடவுள் குறிப்பும் கர்ட்டப் பெறுவ தறிந்தோம். குறுந்தொகை என்ற அகநூலில் காணும் கடவுள் வழிபாட்டு வகையில் ஒன்றிரண்டு கண்டு மேலே செல்வோம்.

கடவுள் தவறு செய்பவரைத் தண்டிப்பார் என்ற அச்சம் நாட்டில் நன்கு நிலவி வந்தது. ஒரு தலைவன் தன் தலைவியை விரைந்து வந்து மணப்பதாகக் கூறினான். பின் ஏதோ காலம் தாழ்க்கிறது. அதற்குள் தலைவி

அஞ்சுகிறாள். தெய்வத்தின் மேல் சூள் கூறிச் சென்ற தலைவன் குறித்த நாளில் வரவில்லை என்றால் அத் தெய்வம் ஏது செய்யுமோ என்ற அச்சம் உண்டாயிற்று. ஆகவே, அத் தெய்வத்தை அவளே வேண்டுகிறாள். தலைவன் பிரிவை எண்ணித் தளர்ந்து வாடிய அவள் அத் தெய்வ அச்சத்தை எண்ணினாள். உடனே, தளர்வு காணின் தெய்வம் தலைவனைத் தண்டிக்கும் என்று உணர்கிறாள். தன் தளர்வு நீங்கியது போலவும், தலைவன் தவறவில்லை என்பது போலவும் காட்டிக்கொள்ளுகின்றாள். அதனால், தெய்வம் தலைவனைத் தண்டிக்காது எனவும் எண்ணு கிறாள். இக் கருத்தைக் கபிலர்,

" மன்ற மராஅத்த பேஎம்முதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉம் என்ப; யாவதும்
கொடியர் அல்லர்எம் குன்றுகெழு நாடர்
பசைஇப் பசந்தன்று நுதலே
ஞெகிழ ஞெகிழ்ந்தன்று தடமென் றோளே " (குறுந். 87)

என்று தலைவியின் வழிபாட்டைத் தோழி தலைவற்குக் காட்டி, அவனிடம் தலைவி கொண்ட அன்பினை நன்கு தெளியப்படுத்துகின்ற முறையில் விளக்குகின்றார் அவர்.

இனி, இவ்வாறு கணவனைக் கண்டெடுத்த தலைவி யின் மாறுபாடு கண்ட தாயர் அவளை மலைவாழ் தெய்வம் தீண்டிற்று எனக் கருதி வெறியாட நினைக்கின்றனர். அச் செயலை வெறுக்கும் தோழி தலைமகற்கு உணர்த்தும் வகையில் தலைமகனையும் உடன்படுத்திக் குறுந்தொகை 263 ஆம் பாடலைப் பாடுகிறார் பெருஞ்சாத்தனார். அவர் வாக்கைக் கீழே தருகிறேன்:

" மறிக்குரல் அறுத்து தினைப்பிரப்பு இரீஇ
செல் ஆற்றுக் கவலைப் பல்இயங் கறங்க
தோற்றம் அல்லது நோய்க்கு மருந்தாகா
வேற்றுப் பெருந்தெய்வம் பலவுடன் வாழ்த்தி
' பேஎய்க் கொளீஇயள் இவள் ' எனப் படுதல்
நோதக் கன்றே " (குறுந். 263)

இதன் வழி அக்காலத் தெய்வ வழிபாட்டு முறையும் நன்கு விளங்குகின்றது. மற்றும் பெண்கள் தம் கண வரைப் போற்றும் முறையும் தெரிகிறது. மேலே குறுந் தொகை 87இல் தலைவி தலைவனுக்குத் தொல்லை வரா திருக்கத் தெய்வத்தைப் பரவுவதாகக் கண்டோமாயினும், சங்ககாலப் பெண்கள் 'தங்கள் நாயகரில் தெய்வம் தவம் பிறிது இலை என்று எண்ணியே, வாழ்ந்தார்கள் என்பது தெளிவு. 'காடுறை சிறு தெய்வம் ஒருவேளை சீற்றத் தால் தம் கணவருக்குவ தீங்கிழைக்குமோ' எனக் கருதிய தலைவி, தன்னிலையை அத் தெய்வத்திற்கு உணர்த்திய தாகக் கபிலர் காட்டுகின்றாரே ஒழிய, அத்தெய்வத்தை வணங்கியதாகக் கூறவில்லை. சங்க காலத்திலே சிவனும் பிற கடவுளரும் சிறந்த தெய்வங்களாகப் போற்றப் பெற்றாலும்கூட, அக் காலப் பெண்கள் அக் கடவுளரை வணங்கியதாகக் காண முடியாது.

**' தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை '**

என்ற வள்ளுவர் வாய்மொழிப்படியே தமது வாழ்வை அமைத்துக் கொண்டனர். இச் சிறந்த கற்பொழுக்க நெறியை சங்ககாலத்தை ஒட்டிவந்த இருபெருங் காப்பியங் களும் நன்கு காட்டுகின்றன.

கணவன் தன்னைவிட்டுப் பிரிந்த கண்ணகிக்கு, அவள் தோழி தேவந்தி, கணவனை அடையப் புகாரில் உள்ள காமவேள் கோட்டம் தொழ வேண்டும் எனவும், பல தீர்த்தங்களில் மூழ்க வேண்டும் எனவும் காட்டுகின்றாள். ஆனால் கற்பிற் சிறந்த கண்ணகி தன் கணவனைத் தவிரப் பிற தெய்வங்களை வழிபடாக் கட்டுப்பாட்டில் நின்றவளாத லின்-கணவன் தன்னை கைவிட்ட போதிலும், அவனே தன் தெய்வம் எனக் கொண்டவளாதலின்-தேவந்தி சொல்லிய அத்தனை வழிபாடுகளையும் 'பீடன்று' என்

ஒரே சொல்லால் ஒதுக்கிச் சிறந்தாள். அதனாலேயே அவள் பல கடவுளர் போற்றும் கற்புடைத் தெய்வமாகப் போற்றப்பட்டாள்.

மணிமேகலையில் தன் கணவனுக்கு உற்றதைக் கேட்ட கற்புக் கடம் பூண்ட ஆதிரை நல்லாள் பிற தெய்வங்களை வணங்காது தீப்பாயவே துணிந்தாள். அவள் கற்புநிலை—கணவன் இறவாமையின்-அவளைக் காத்தது. மற்றும் சாத்தனார்,

> "தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதொழுவாள்
> பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்
> பொய்யில் புலவன் பொருள் உரை தேறாய்"
>
> (மணி. 22, 59 61)

என்று பத்தினிப் பெண்டிர் பிற தெய்வங்களைத் தொழுவார்களாயின் தம் நிலையில் தாழ்வார் என்பதைப் பார்ப்பனப் பெண் மருதியின் கதை வாயிலாக நன்கு விளக்குகிறார். எனவே, சங்க காலத்தில் சைவ மங்கையராயினும் பிறராயினும் கணவனை அன்றிப் பிற தெய்வங்களை வணங்கிய வகையினைக் காட்ட இயலாது.

## காப்பியங்களில் முதலிடம்

மேற்க, இந்த இருபெருங் காப்பியங்கள் உண்டான காலத்தில் நாட்டில் சமணமும் பௌத்தமும் கால் கொள்ளத் தொடங்கி வளரவும் பெற்றன என்றாலும், சைவ சமயமே மேலோங்கி இருந்ததென்பதும், சிவனே அனைவருக்கும் முதற் கடவுளாகப் போற்றப் பட்டனன் என்பதும் நன்கு விளங்கும், சமண சமய இளங்கோ வடிகள் புகாரில் உள்ள கோயில்களை வரிசை படுத்திக் காட்டும்போது, சிவனை முதலிலும் அறுமுகனை அடுத்தும் வைத்துப் பிற தெய்வங்களைப் பின் வைத்துப் பேசுகிறார். அவர் சிவனைப் 'பிறவா யாக்கைப் பெரியோன்' என்கிறார். அவர் கருவிலிருந்து பிறவாத காரணத்தால்,

'பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்' என

(சிலம்பு. 3, 169-172)

அவர் காட்டுகின்றார். மற்றும் பின் செங்குட்டுவனைக் கூறும் போது, அவன் சிவன் அருளால் பிறந்தவன் என்றும், வடக்கு நோக்கிச் செல்லும்போது சிவனை முன் வழி பட்டுப் பின் திருமாலை வணங்கிச் சென்றான் என்றும் காட்டு கின்றார். எனவே, சங்கம் மருவிய சிலப்பதிகார காலத்திலும் அரசரும் பிறரும் தமிழ்நாட்டில் சிவனையே முதல்தெய்வ மாகப் போற்றி வழிபட்டார்கள் என அறிகிறோம்.

மணிமேகலை ஆசிரியர் புகார் நகரிலுள்ள பல்வேறு தெய்வங்களைக் காட்டுகின்றார். வள்ளுவன் விழா அறை காதையின் அந்நகர மக்கள் செய்யும் விழா சிறப்புக்களைக் காட்டும்போதும், அவரவர் தெய்வங்களைக் காட்டும் போதும்,

'நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலா
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈறா'

(மணிமே. 1, 54-55)

எனக் காட்டிச் சிவனுக்கே ஏற்றம் தந்து போற்றுகின்றார். எனவே, தமிழ்நாட்டில் சங்க காலத்திலும், அதை ஒட்டிய காப்பிய காலத்திலும், சைவமே சிறந்த சமயமாகி நின்றது என்பதும், பல தெய்வங்கள் நாட்டில் இருந்தாலும் சிவனே முழுமுதல் தெய்வமாகப் போற்றப்பட்டான் என்பதும் வெளிப்படை.

## பழக்க வழக்கங்கள்

சங்க காலத்தில் இறைவனைப் போற்றுவதற்கு மரபு நெறி-பழக்க வழக்க முறைகள்-இருந்தன எனக் காண்

இன்றேம். அவை எத்தகையன என்பது விளக்கமாகக் காணப் பெறுவிடினும், மேலே கண்ட குறுந்தொகைப் பாடல்களாலும், திருமுருகாற்றுப்படை போன்ற பிற வற்றாலும் ஓரளவு நன்கு தெரிகின்றது. அவையெல்லாம் ஈண்டு விரிப்பில் பெருகும். எனினும், இறைவழிபாடு மரபுவழி கெடாது நடைபெற்று வந்தது என்ற உண்மையை.

'தொன்றெழுகு மரபில் தம் இயல்பு வழாஅது
அருந்திறல் கடவுள் பழிச்சிய பின்றை'

(மலைபடு. 537-38)

என்ற பெருங்கௌசிகனரது அடிகள் நமக்கு அறிவுறுத்து கின்றன. மற்றும், அக்காலத்தில் வழிபடுமுறையில் கல் நட்டு, பீலி சூட்டி, துடி எழுப்பி, கள்ளும் பலியும் கொடுக்கும் சாதாரண வழக்கம் உண்டு என்பதை,

'வல்லாண் பதுக்கைக் கடவுட் பேண்மார்
நடுகற் பீலி சூட்டித் துடிப்படுத்து
தோப்பிக் கள்ளொடு துரூஉப் பலிகொடுக்கும்

(அகம். 35)

அவிர்சடை முனிவர் அங்கி வேட்கும்
ஆவுதி நறும்புகை'

(பட்டின. 53-56)

என்ற அடிகள் நமக்கு நன்கு எடுத்து உணர்த்துகின்றன அன்றே.

இம்மை வாழ்வு மட்டுமன்றித் துறக்க வாழ்வும் உண்டு என்பதை அன்றைய தமிழ்மக்கள் நன்கு அறிந் திருந்தனர். துறக்க வாழ்வு அல்லது தேவ உலக வாழ்வு சிறந்த ஒன்று அல்ல என்பதைச் சாத்தனார் மணிமேகலை யில் நன்கு காட்டுகிறார். என்றாலும், உலகில் அறமாற்றிச் சிறப்பார் அத் துறக்க வாழ்வு பெறுவார் என்பதும், அது இன்ப உலகம் என்பதும். அது பெறுதற்கரிது என்பதும் அவர்கள் கொண்ட கொள்கை என்பதை.

'பெறற்கரும் தொல்சீர்த் துறக்கம் ஏய்க்கும்
பொய்யா மரபில் பூமலி பெருந்துறை'

(பெரும். 388:89)

என்ற அடிகள் நமக்குக் காட்டுகின்றன. எனவே, சங்க காலச் சைவநெறியில் இன்று காணும் அத்தனை உண்மைகளும் அடங்கி இருந்தன என்பது தேற்றம்.

இன்னும் சிவனைப் பற்றியும் அவன் ஆடல், இடம் முதலியன பற்றியும் பலப்பல பாடல்கள் சிறக்கப் பாராட்டுகின்றன. அவன் சுடுகாட்டில் ஆடுவது பற்றியும், கொடு கொட்டி ஆடுதல் பற்றியும், புலித் தோலாடை பற்றியும், இவை போன்ற எத்துணையோ உண்மைகள் பற்றியும் பலப்பல வகைகளில் சங்க இலக்கியங்கள் குறிக்கின்றன. முருகனைப் பற்றியும், அவனது இரு மனைவியரைப் பற்றியும், அவன் படைவீடுகள் பற்றியும், பிறவரலாறுகள் பற்றியும் கூறும் பாடல்கள் பலப்பல. தெய்வத்திற்குக் கல் உருக் கொடுத்தல் பற்றியும், தெய்வத்திற்குக் கையுறை கொடுத்தல் பற்றியும், நிலம் தானம் செய்தல் பற்றியும், உயிர்ப் பலியும் பூப் பலியும் செய்தல் பற்றியும், மஞ்சள் இட்டுப் பூ அணிதல் பற்றியும், தெய்வத்தைச் சுட்டிச் சபதம் செய்தல் பற்றியும், வணங்கி வஞ்சினம் உரைத்தல் பற்றியும், தெய்வத்தை வேண்டிக் குழந்தை பெறுதல் பற்றியும், தெய்வ வழிபாட்டு முறை பற்றியும், இவைபோன்ற பிற பற்றியும் பலப்பல சங்கப் பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. அவற்றையெல்லாம் அறிந்தோர் வாய்ப்பு உள்ள வேளையில் கற்று, கண்டு, நலன் பெற்றுச் சிறக்க எனக்கூறி மேலே செல்கின்றேன்.

சங்க காலத்தில் இறைவனைக் குறிக்க வருகின்ற சொற்கள் மிகச் சிலவே. இறைவன் என்ற சொல் கடவுளைக் குறிக்க அக் காலத்தில் பயன்படினும், அது

பெரும்பாலும் நாடாளும் மன்னனைக் குறித்த சொல்லாகவே கொள்ளப்பட்டது. வள்ளுவர் 'இறை மாட்சி' என்ற அதிகாரமும், 'மக்கட்கு இறை என்று வைக்கப் படும்' என்ற அவர் வாய்ச் சொல்லும் இக்கருத்தை வெளிப்படையாகக் காட்டும். 'இறைவன் பொருள் சேர் புகழ்' என்று அவரே கூறுவதனால் ஒருசில இடங்களில் இறைவன் தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியாகிறது. எனினும், வேறு சில சொற்கள் அவ்விறையைக் குறிக்க விருக்கின்றன. அவை கண்டு அமைவோம்.

சங்க காலத்தில் இறைவனைக் குறிக்கப் பெரும் பாலும் தெய்வம், கடவுள் என்ற சொற்களே பயன் பட்டன. இயவுள் என்ற சொல்லும் வருகிறது.

'பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள் (திருமுரு. 274) என்று நக்கீரர் குறிக்கின்றார். இயவுள் என்பதற்குத் 'தெய்வம் என்ற பொருள் உள்ளதாகப் பிங்கல நிகண்டால் அறிகிறோம். அவன் மெய்சேர் புகழ் உடையவன் ஆனமையின்-தலைவன் ஆயினமையின்-இப் பெயரால் அழைக்கப் பெறுகின்றான் போலும்! திவாகரம் 'இயவுள்' என்பதற்குப் 'புகழாளன்' என்று பொருள் தருகின்றது. 'இயவுள் யானை' என்ற அகநானூற்று (29) அடி தலைமை என்ற பொருளைத் தருகின்றது. எனவே, மெய்ப்புகழுடைய இறைவன்-தலைமை உடைய இறைவன்-இயவுள் என அழைக்கப் பெறுகின்றார். இயவுள் என்பதற்கு அனைத்தினும் உள்ளுக்கு உள்ளாய் இருந்து இயக்குபவன் எனவும் பொருள் கொள்வார். 'கடவுள்' என்ற சொல்' எப்படி அனைத்தையும் கடந்த தன்மையை விளக்குகின்றதோ-அதேபோன்று 'இயவுள்' என்பது அனைத்தினும் இயங்கும் தன்மையை விளக்குகின்றது, அவன் அப்பாலுக்கு அப்பாலாய் இருப்ப தோடு அணுவுக்கு அணுவாகவும் இருக்கின்றமையின்.

எனவே, கடவுள், இயவுள் என்ற இரண்டு சொற்களும் அவனது இரண்டு எல்லைக்கோடுகளை விளக்க வருகின்றன வாக அமைகின்றன.

தெய்வம் என்ற சொல் சங்க காலத்தில் நன்கு வழக்கத்தில் உள்ளது. இச் சொல் தொல்காப்பியர் காலத்திலிருந்தே வழக்கத்தில் உள்ளது. இச் சொல் தெவ்வம் என்ற சொல்லிலிருந்து வந்திருக்கலாம் எனக் கொள்ள இடமுண்டு. தெவ் என்ற சொல்லுக்குக் கடவுள், கொலை என்ற இரண்டு பொருள்கள் உள்ளன. உயிர்களில் உள்ள 'தான் என்ற முனைப்பைக் கொன்று இறைவன் அவற்றைத் தன் அடிக்கிழ் கொள்ளுகின்ற மையின் 'தெய்வம்' என்ற சொல்லுக்கு அப்படியே நேர் முகப்பொருள் கொள்ளுதல் பொருந்தும். எனினும் 'தெவ்வு' என்ற சொல்லின் அடியாகவே தெய்வம் பிறந்தது எனக் கொள்ளின் பொருள் சிறப்பதாகும் என நான் கருதுகின்றேன். 'தெவ்வு' என்ற சொல்லுக் குத் தொல்காப்பியர் 'கொளற் பொருட்டே' (தொல்-உரி 49) எனப் பொருள் கூறுகின்றார். எனவே மக்கள் தம்மால் கொள்ள முடியாத உயர்பொருள்களைக் கொள்வதற்காகவும் தமது வாழ்வு செம்மை கொள்வதற் காவும், 'வேண்டுவார் வேண்டுதே ஈயும்' முழு முதற் பொருளை வேண்டிக்கொண்டார்கள் எனவும், அதனு லேயே 'தெவ்வம்' என்ற பெயராகி, 'தெய்வம்' எனத் தெளிந்த நிலையில் பின்பு சிறக்கப் பெற்றது எனக் கொள் ளல் பொருத்தமானதாகும். அறிஞர் இத்துறையில் இன்னும் நன்கு ஆய்ந்து கருத்திருத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளுகிறேன். நிற்க,

## முடிவுரை

இவ்வாறு சிறந்த பெயரால் போற்றப்படும் தெய்வ நெறி சங்க காலத்திய நெறி என்பதும், அத்தெய்வ வரிசையில் சிவனே முதல் இடம் பெற்றுப் போற்றப் பட்டான் என்பதும், அதனால் சங்க காலத்தில் சைவமே தலைசிறந்து ஓங்கிய மெய்ச்சமயமாகி விளங்கியது என்பதும், தென்னாடுடைய சிவன் பின் எந்நாட்டவருக் கும் இறையாகத் தொடங்கிய காலம் அதுதான் என் பதும், சங்ககாலத் தமிழ் மக்கள் வாழ்வாங்கு வாழ்ந்து மெய்ம்மைநெறிச் சைவமாம் சமயம் சார்ந்து தழைத்தனர் என்பதும் அறியக் கிடக்கின்றன.

சங்க காலத்தில் இவ்வாறு இறைவனைப் போற்றிய அடியார்கள் வெறும் புறத் தோற்றத்தால் மட்டும் வழி பாடு ஆற்றாது, அக நிலையிலேயே ஆண்டவனைக் கண்டு, அறமாற்றி, ஆன்றவிடந்தடங்கிய கொள்கைச் சான்றோர் களாக வாழ்ந்தார்கள் என்பதை நன்கு உணர வேண்டும். அதனாலேயே அக்காலத்தை ஒட்டி எழுந்த குறளில், வள்ளுவர்,

> " **மழித்தலும் நீண்டலும் வேண்டா உலகம்**
> **பழித்தது ஒழித்து விடின்** "

என்றும்,

> " **மனத்துக்கண் மாசாக மாண்டார் நீராடி**
> **மறைந் தொழுகும் மாந்தர் பலர்** "

என்றும், இன்னும் பலவகையிலும் எடுத்துக் காட்டு கின்றார். 'அன்பின் வழியது உயிர் நிலை' என காட்டி, அதன் வழி அன்பே **இறைவன்** என விளக்கி, மக்கள் அன்புகொண்டு வாழ்வதே **மெய்ச் சமய நெறி** என்பதை வள்ளுவரும் பிறரும் தெள்ளத்தெளிய விளக்குகின்றனர்.

எனவே, சங்க காலத்தில் சிவனை வழிபட்ட மெய்ச் சைவ மக்கள் உள்ளும் புறமும் ஒத்தவராய்—தனக்கென

வாழாப் பிறர்க்குரியாளராய்—தாமின் புறுவது உலகின் புறக் காணும் தக்கோராய்—மனம் மொழி மெய் என்ற மூவிடத்தும் ஒன்றிய தூய்மை உடையவராய்—எல்லாரும் இன்புற்றிருக்க நினைக்கும் பண்பாளராய்—அவனன்றி ஓரணுவும் அசையாது என்ற திண்ணிய நம்பிக்கை கொண்டு அதனால் தன் முனைப்பு என்பது அற்ற சீலராய்—முயற்சியும் ஆக்கப்பணியும் மேற் கொண்டு தம் செயலின் வெற்றி பெறினும் செம்மாக் காது ஆருயிர் முறைவழிப்படும் என்ற உண்மை உணர்ந்த செம்மை நலம் சான்ற தக்கோராய் வாழ்ந்து வந்தார்கள் என்பது ஈண்டு நாம் நினைக்க வேண்டுவதாகும். இவற்றுக்கெல்லாம் எடுத்துக் காட்டுக்கள் பலப்பல காட்டிக்கொண்டே செல்லலாம். இவை அனைத்தும் நன்மக்கள் உணர்வாதலின், அவர் காட்டும் மெய்நெறி வழி உலகும் சிறக்கும் என்ற நம்பிக்கையோடு அவற்றை ஈண்டு நான் காட்டாது அமைகின்றேன். சைவம்-சங்க கால மெய்ச் சைவம்—உள்ளும் புறமும் ஒத்த சைவம்—உலகம் அனைத்தையும் ஓம்பும் சைவம்—ஓரறிவுயிரும் ஒத்தது என உணரும் சைவம்—தரணியில் சிறக்க என வாழ்த்துகிறேன். அச் சைவநெறி தழைத்தோங்க இச் சமாசமும் ஆவன செய்யும் என்ற நம்பிக்கையோடு என் பேச்சையும் முடித்துக் கொள்ளுகிறேன்.

## 5. பேர் வேண்டேன்*

உலகில் பண்டுதொட்டுக் கோடிக்கணக்கான உயிர்கள் தோன்றி வாழ்ந்து மறைகின்றன. மனிதர் எண்ணற்றவராகி வந்து வந்து செல்கின்றனர். அவர் அத்தனை பேரையும் இன்று உலகம் எண்ணுவதில்லை. எங்கோ ஒரு சிலரைத்தான் உலகம் போற்றுகின்றது. 'தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளராக' இருந்த ஒரு சிலரையே உலகம் மதிக்கிறது; போற்றிப் புகழ்கிறது. அவ்வாறு புகழப் பெற்றவரோ அப் புகழ்ச்சியைத் தமக்கு வேண்டா எனவே ஒதுக்கி விடுகின்றனர். அதற்குக் காரணம் அப் புகழும் பிறர் பொறாமைப்படக் காரணமாகின்றது என்பதை நன்கு அவர்கள் அறிவதேயாம். அவ்வுண்மையை நன்கு அறிந்த சங்க காலப் புலவர் கணியன் பூங்குன்றனர்,

> **'பெரியோரை வியத்தலும் இலமே**
> **சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே'**

என்று விளக்கி, அதற்குரிய காரணத்தையும், ஆருயிர் நீர்வழிப்படும் புணைபோல் தன் முறைப்படும் திறத்தால் எனக் காட்டிச் சென்றார். இவ்வுண்மை எக்காலத்திலும் ஒத்து நடைபெறுவதாகும்.

இந்த இருபதாம் நூற்றாண்டின் நாகரிகத்திடையிலும் இவ்வுண்மையைக் காணமுடிகிறது. சிலர் உடல் வருந்திப் பொருள் செலவிட்டுச் செம்மைப் பணி ஆற்றுவதால் புகழ் பெறுகின்றனர். சிலர் அறிவு நலம் காட்டி அரும் புகழ் பெறுகின்றனர். சிலர் தம் ஆணைவழி அன்பு

* அவளிவணல்லூர் சட்டநாதர் குடமுழுக்கு விழா மலர் (பிப். 60)

காட்டி அழியாப் புகழ் பெறுகின்றனர். இவர்களைக் கண்டு அவ்வாறு பெற இயலாதவர்கள்-முடியாதவர்கள்-வாய்ப்பிருந்தும் வழியறிந்தும் மனம் இல்லாதவர்கள் பொறாமைப்படுகிறார்கள். அதனால் பல கொடுமைகள் விளைகின்றன. உண்மை உழைப்பாளி—உடலாலாயினும் சரி, அறிவாலாயினும் சரி—ஒரு சிலருடைய பொறாமைக் கண்களுக்கு இலக்காகிறான். அதனால், அவர்கள் அவன் புகழுக்கு இழுக்குத் தேட நினைக்கிறார்கள். எனவேதான் பூங்குன்றனார் இவ்வாறு புகழவே வேண்டாம் என விலக்கிவிட்டார். மணிவாசகனார் தம் வாழ் நாளிலேயே இத்தகைய துன்பத்தை அனுபவித்து விட்டவராதல் வேண்டும். எனவேதான் அவர் **'பேர் வேண்டேன்'** என வெளிப்படையாகவே கூறிவிட்டார்.

**' உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்**
**கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும் '**

என்று அவர் தம் திருப்புலம்பலில் காட்டுகிறார். ஆம்! புலம்பல்தான். உலக நிகழ்ச்சியைத் தம்மேல் ஏற்றிப் புலம்புகிறார். உற்றார் ஊரார் என்பவர் செய்யும் கொடுமைகளையும், பேரால்—புகழால்—விளையும் தீமைகளையும் அவர் உள்ளம் எண்ணியிருக்கும். அவற்றுக்கெல்லாம் காரணம் 'கற்றவரே' என்பதும் அவர் உணர்ந்த ஒன்றாக இருக்கும். இன்றும் கற்றவரால்தானே நாடும் உலகமும் நலிவுறுகின்றன எனக் காண்கின்றோம். இவற்றை எல்லாம் எண்ணித்தான் மணிமொழியார் இவ்வாறு கூறியுள்ளார். அவர் வாழ்வில் இவ்வாறு கூற நேர்ந்த காரணம் என்ன என்று காண்போம்.

மணிவாசகர் 'வாதவூர'ராக இருந்த நாள் அது. அப்போது பாண்டியன் அரிமருத்தனன் ஆட்சி செய்து வந்தான். அவர் அமைச்சர் குலத்தில் பிறந்தவராதலின்

அமைச்சராகவே ஆக்கப்பெற்ருர். அவர் அமைச்சராக வந்தபோது மற்ற அமைச்சர்கள் அவரைச் சாதாரண மாக எண்ணி இருப்பர். ஆனுல் அவரோ,

'அண்ணலரி மருத்தனுக்கு அடல்வாத வூரமைச்சர்
கண்ணுமிகு கவசமுமபோல் காரியஞ் செய்து ஒழுகுவார்.
(திருவிளை. வாதவூரருக்கு உபதேசம் செய்த படலம், 9)

ஆனர். மற்றும் இவர்,

'கற்றறிந்தோர் ஆதலினுற் காவலற்குக் கண்போன்ற
முற்றுணர்ந்த அமைச்சரினும் முதல் அமைச்ச ராய்த்
திகழ்வார்'

ஆனர். இந்த நிலை மற்றவர் உள்ளத்திலே பொருமைக் கனலை மூட்டிவிட்டது. வாதவூரர் இல்லையானுல் அரசன் வாழ்வு இல்லை என்னும் நிலை உண்டாகவே, பிற அமைச் சர்கள் பொருமைப் பட்டனர். எனவே இவரைத் தாழ்த்த வழிகளை யெல்லாம் ஆராய்ந்து இருப்பர்.

வாதவூரர் தம் கடமைகளைத் தவருது செய்து அரசனுக்கு உகந்தவரானவர் போலவே அன்பு நெறியால் ஆண்டவனுக்கும் உகந்தவரானுர்; அதில் சற்று வேக மாகவே சென்ருர் என்று கூறலாம், அரசனுக்குக் கண் ணும் கவசமுமாக இருந்து அவன் வாழ்வில் கருத்திருத்தித் தன் வாழ்வையே மறந்தார். அதே வேளையில் அரசனுடைய பொருளுக்கும் தன் பொருளுக்கும் வேறுபாடு காணவில்லை அவர்; அனைத்தும் ஆண்டவன் பணிக்கு உரியவை என நினைத்திருப்பார். அரசனும் ஆண்டவனிடம் மெய்யன் புடையவன் என்பதை அறிவார். அரசனும் தன் கடன் வழுவா நிலையில், கடவுட் பணியைப் போற்றும் அவரை மற்றவர் அனைவரினும் சிறந்தவராகவே கொண்டான். எனவே, அவரையே அழைத்துக் குதிரை வாங்கிவரப் பெரும் பொருள் கொடுத்து அனுப்பினுன்.

திருப்பெருந்துறையில் குதிரை வாங்கச் சென்றவர் தாம் வாதவூரர். எனினும், அங்கே இறைவனால் ஆட் கொள்ளப் பெற்றார். அதற்கிடையிலும் தன் கடமையை மறக்கவில்லை. அப்போது நல்ல குதிரைகள் இல்லை போலும். காலந்தாழ்த்துக் கடல்வழி வரும் குதிரைகளைப் பெறக் காத்திருந்திருப்பார். அதற்குள் அவர் கடவுளன்பு கோயில் கட்டத் தூண்டியது. கொண்டு வந்த பணத்தை அதற்குச் செலவிட்டார். அரசனும் சமயப்பற்று உடையவன் ஆதலின் அதற்கு இசைவான் எனவும், பிறகு வேறு பொருள் கொண்டு குதிரை வாங்கலாம் எனவும் அவர் உள்ளம் எண்ணிவிட்டது போலும். எனவே செயல் தொடங்கப் பெற்றது. கடைசியில் குதிரை வாங்கவில்லையே என அரசன் ஆள் அனுப்பிய போது தான் தன் நிலை உணர்ந்தார். ஆயினும் அவர் அரசனிடம் கொண்ட பொருளைக் கோயிற் பணிக்குச் செலவிட்டதைக் கூறியிருந்தால் அவன் மகிழ்ந்து குதிரை வாங்க வேறு பொருள் கொடுத்திருக்கக் கூடும். வாதவூரர் அவ்வாறு செய்யாது, இறையருளால் 'ஆவணி மூலத்'தன்று குதிரை வரும் என உணர்ந்து அவ்வாறே அரசனிடமும் சொல்லிவிட்டார். அரசன் அனைத்தும் அறிவான். பணம் பணிக்குச் செலவாயிற்று எனவும் தெரியும். எனினும் 'ஆவணி மூல' எல்லை அமைத்த வாதவூரரை அவன் ஒன்றும் செய்யவில்லை. காரணம், அவனுக்கு அச்செயல் உடன்பாடு என்பதுதான். அனைத்தும் அறிந்து அவன் இருந்த நிலையை,

> 'புரைசைமா வயப்புரவி தேர்ப்பொருநர் போய்ப் பொறி வண்டு
> இரைசெய்தார் முடிவேந்தன்முன் இறைஞ்சினர் உள்ளது
> உரைசெய்தார் அதுகேட்டு ஒன்றும் உரைத்திலன் இருந்தான்
> நிரைசெய்தார் பரிவரவினை நோக்கிய நிருபன்' (61)

எனப் பரஞ்சோதியார் காட்டினார். திருப்பெருந்துறையில் அமைச்சர் வாதவூரர் செய்கை அனைத்தையும் காவலர் மூலங் கேட்டறிந்த அரசன் வாளா இருந்தனன் என்றால் பொருள் என்ன? உடனே ஆள் அனுப்பி அவரைத் தகைந்திருக்கலாம். செய்யவில்லை; அது தக்கதென அவன் இருந்தான்.

அரசன் வாளா இருந்தபோது வாதவூரர் மேல் பொறாமையுற்றார் பலர். அவரோடு உடன் இருந்த அமைச்சரும் அவருடைய சுற்றத்தாரும் வாளா இருக்கவில்லை; பலவாறு பழித்துரைத்தார்கள் என்பதைப் பரஞ்சோதியார் பலவிடங்களில் காட்டுகின்றார். அவர் உள்ளப் புகைச்சலுக்கு அதுவே சான்றாகும். அதுவும் வாதவூரருக்குப் பரிந்து பேசுவது போலவே அமைகின்றன அவர்தம் சொற்கள் :

'தழுவிய கிளைஞர் நட்டோர் சார்ந்துளோர் தக்க சான்றோர்
குழுவினைக் காக்கவேண்டும் குறிப்பிலீர் போலும் நீவிர் (28)

என அவர்கள் அவர் சுற்றம் தழுவவேண்டிய கடமையை உணர்த்துவது போன்று தமது உள்ளத்தைக் காட்டிவிட்டனர். இன்னும் சில பாடல்களிலே பரஞ்சோதியார் அவர் தம் பொறாமை உள்ளத்தைக் காட்டுகின்றார். எனினும், வாதவூரர் அதற்கெல்லாம் கவலையுறாது இறைவனிடம் நீங்காத சிந்தை வைத்து நிலைத்திருந்தார்.

பின்னர், நரி பரியாயதும் பரி நரியாயதும் நடைபெற்ற நிகழ்ச்சிகள். இவற்றைக் கண்ட பின் பாண்டியன் ஒருவேளை சீற்றம் கொண்டிருப்பான். அச்சீற்றத்தை வாதவூரர் புகழ்கண்டு பொருமிய உள்ளங்கள் வளர்த்திருக்கும்; அதன் எல்லையில் பாண்டியன் வாய்,

கண்ணுமிகு கவசமும் போல் காரியம் செய்து ஒழுகியதும்
காலம் பார்த்துஎம்
எண்ணரிய நிதியீட்டம் கவர்வதற்கோ நின்
அமைச்சின் இயற்கை நன்றால் (பரி, நரி 43)

எனப் பேசும் அளவுக்குச் செல்லவைத்தது. நாட்டு மக்களும் பாண்டிய மன்னனும் ஒருசேர வாதவூரரைப் புகழ்வதைப் பொறுக்காத ஒரு சிலர் தம் செயலால் மாணிக்கவாசகருக்கு அல்லல் பல இழைத்தனர். எனினும், கடைசியில் இறைவனால் தெளியப் பெற்ற பாண்டியன்.

**தொல்லை நீர் உலகமாண்டு சுடுதுயர் நரகத்தாழ**
**வல்லைஎன் அறிவுக்கேற்ற வண்ணமே செய்தேன்; நீர்என்**
**எல்லைத்தீர் தவப்பேருய்வந்து இகபர ஏதுவாகி**
**அல்லல்வெம் பிறவி நோய்க்கு அருமருந்தானீர் ஐயா**

**(மண்சுமந்த. 68)**

என்று அவர் அடி வணங்கிப் போற்றினானெனினும், மாணிக்கவாசகர் மறுபடியும் அவனிடம் அமைச்சராக இருக்க விரும்பவில்லை, முன் இறையன்பு பூண்ட பிறகும் அரசன் தன்னைப்போல அன்புடையவன் என்றும், தனக் கென வாழாத தன்மையில் தான் ஆற்றும் செயல்கள் அவன் இயைந்தனவே என்றும் எண்ணிச் செயலாற்றினார். பின் தன் புகழ் கண்டு பொன்றிய உள்ளத்தார் வாய் மொழிக் கேட்டு முறைபிறழ்ந்து நின்றவனோடு கூடா திருக்க நினைத்து அவனைவிட்டே பிரிந்துவிட்டார். அத் துடன் அங்கு இருந்தால் மேலும் மேலும் உள்ளத்தால் பொய்த்தொழுகும் பொறாமையாளர்தம் புழுக்கம் அதிக மாகும் என எண்ணி, அவ்விடத்தைவிட்டுப் புறப்பட் டார். அதற்குப் பிறகும் ஓரிடத்திலும் நிலைத்து நின்று தன்னைப் பிறர் புகழும் வரையில் தங்குதல் தீது என உணர்ந்தார். ஆம்! அந்த உணர்ச்சியில் எழுந்த அடி களேதாம் நாம் முதலில் கண்டவை. 'ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்' என்று எண்ணி, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று கருதி ஊர்தோறும் இறைவனை நாடிப் புறப்பட்டார். அவர் தம் 'பேர் வேண்டேன்'

என்ற பெருமொழி உண்மைத் தொண்டாற்றுவார் ஒவ்வொருவரும் உள்ளத்தே கொள்ள வேண்டிய ஒரு நல் அருமொழியாகும்.

உலகு இன்று எங்கோ சென்று கொண்டிருக்கிறது. இந்த உலகில் வாழ்வாங்கு வாழ்பவர் மிகச்சிலர், அவருள்ளும் 'தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளராய்' உள்ளவர் மிகமிகச் சிலர். அவர்தம் உளத்தூய்மையும், அறிவுப் பணியும் அன்புத் தொண்டும் அவரை எப்படியோ உலகுக்கு அறிமுகம் செய்துவிடுகின்றன, அதனால் அவ்வாறு பெறாத மற்றவர் பொறாமை கொள்ள நேரிடுகிறது இந்த நிலை உண்மையில் வேண்டப்படாதது. சிலர் தமக்குப் புகழ் வேண்டும் வேண்டும் என முயன்று ஓடினும் அது எட்டாமல் ஓடுகிறது. சிலர் வேண்டேன் என ஒதுங்கினும் தாவிப் பிடிக்கிறது, ஆம்! 'புகழ் வேண்டா' மாணிக்கவாசகர்தம் புகழ் இன்றும் வாழ்கிறது. அதைத் தகைக்க நினைத்த பிற அமைச்சர், அன்றி அரசன் புகழோ அன்றைக்கே அற்றுவிட்டது. எனவே புகழ் வேண்டாமென்றாலும் வந்தடைவதைத் தடுக்க முடியாது, என்றாலும் இன்றைய உலகில் புகழ் வேண்டாது ஒதுங்கி நின்று செய்யும் பணியைப் பெயர் இல்லாது செய்தல்தான் சிறந்த அறிவுடைமையாகும். அவ்வாறு செய்பவர்கள் என்றென்றும் வாழ்பவராவார்கள். அன்றி அப்போதே புகழ்தேட நினைப்பவர்கள் ஒருவேளை அவர்தம் ஆயுட்காலம் வரையில் புகழோடு வாழலாம். ஆனால் உலகமுள்ளளவும் வாழ இயலாதே. இதையேதான் எல்லாச்சமயங்களும் சொல்லுகின்றன. 'உன் வலது கை செய்வது இடதுகைக்குத் தெரியாதிருக்கட்டும்' என இயேசு இது குறித்துச் சொன்னார். உலகில் மனிதனாகப் பிறந்து விட்டோம்: அதனால் நமக்குரிய கடமை இது என எண்ணிக் கடமைக்காகச் செயலாற்றுவதே

சிறந்த மனிதப் பண்பு. அன்றிப் புகழுக்காக ஆற்றுவது அவ்வாறு ஆகாது. இதையேதான் மாணிக்கவாசகர் உலக மக்களுக்கெல்லாம் உய்யுநெறி காட்டி உணர வைத்தார். மாணிக்கவாசகர் சுருக்கமாகப் **'பேர் வேண்டேன்'** எனச் சொல்லிவிட்டார். உலகம் அவர் சொல் வழிச்செயலாற்றின், இங்கே நாட்டிலே—உலகிலே—பொய்யும் பொறாமையும் கொலையும் கொடுமையும் பிற எல்லா வெந்தொழில்களும் பட்டு அழியும். உலகம் செயலாற்றுவது என்றோ!

## 6. உயிர்த்துன்பம் உன் துன்பம்*

ஓரறிவுயிரிடத்தும் இரக்கம் காட்டுபவர் தமிழர்கள். தொல்காப்பியர் காலந்தொடங்கி இன்றுவரை புல்லும் மரமும் பிறவும் உயிருள்ள பொருள்களே என்ற உண்மையை உணர்ந்து, 'எவ்வுயிரும் இறை யுயிரே' என்ற ஏற்றத்தில் அறம் பெருக்கி வாழ்ந்தவர்கள் தமிழர்கள். அண்மையில்தான் வங்க அறிஞர் வசு அவர்கள் மரம் செடிகளுக்கு உயிர் உண்டு என்று கண்டுபிடித்தார் என அவரைப் பாராட்டும் உலகம், பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அவ்வுண்மையை உணர்ந்து போற்றிய தமிழரைக் காண மறுப்பது ஏனோ?

"வையகம் வாழத் தான் வாழ்தலே சிறந்தது" என்ற கொள்கை உடையவன் தமிழன். அந்த அடிப்படைக் கொள்கையில் நின்றே அன்று தொட்டு இன்று வரை அவன் வாழ்வு சிறந்து வருகின்றது. 'நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை' என்ற பழமொழியும், 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே—அல்லாமல் வேறொன் றறியேன்' என்ற வேண்டுகோளும், இந்தக் கொள்கையின் அடிப்படையில் தோன்றியனவே. உலகில் தோன்றிய ஒவ்வொரு உயிரும்—ஆம்—புல் தொடங்கி மனிதன் வரை—உலக வாழ்வை வளம் பெறச் செய்வனவேயாம். உயிர் அளவில் அவற்றுக்குள் வேறுபாடு இல்லையன்றோ! உலகத்தில் தோன்றி வாழும் உயிர்களுள்—அவை எந்த அளவு அறிவைப்பெற்றதாக இருந்தபோதிலும், அவற்றில்—

* 'சோதி மலரில் வந்தது' (பிப்ரவரி 60)

வேறுபாடு காணாது ஒத்து நோக்க வேண்டுவது மனிதப் பண்பாகும். விலங்கு முதலிய அறிவு குறைந்த உயிரினங்களுக்கெல்லாம் ஒருவேளை இந்த ஒற்றுமை தெரியாதிருக்கலாம். ஆனால், எல்லாம் அறிந்தவனாகத் தன்னை எண்ணிக் கொள்ளும்-பகுத்தறிவு பெற்றுப் பாரினை ஆளப் பிறந்தவனாகத் தன்னை மதித்துக்கொள்ளும்-மனிதனுக்கு இந்த உயிர் ஒற்றுமை கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். ஆம்! இந்த உண்மையைத்தான் பொய்யில் புலவர் திருவள்ளுவனார்,

> "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான்"

என்று விளக்கிப் போந்தார். இந்த ஒற்றுமையின் நல்ல அடிப்படையில்தான் உலகில் சமரச ஞானம் முகிழ்க்கும். உண்மைச் சமரச ஞானமே உலகை என்றென்றும் வாழ வைக்கும் என்ற உண்மையை உணர்ந்தவர்களே மனிதர்கள்! மற்றல்லாதார் யாரோ?

இன்றைய மனிதன் இந்த உண்மையிலிருந்து வெகுதூரம் விலகிச் சென்று விட்டான். பறவையையும், செடியையும், பாம்பையும், கொடியையும் ஒத்து நோக்கி உயிரினத்தினைப் பிணைத்துப் பாராட்ட வேண்டிய 'ஆறறிவு பெற்ற மனிதன்' மனித இனத்துக்குள்ளேயே வேறுபாடு கற்பித்துக் கொண்டு, மாறுபட்ட நெறியில் செல்லத் தொடங்கி நெடுநாள் கழிந்துவிட்டது. முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும் கொடுத்து உயிரினத்தை ஒற்றுமைப்படுத்திய தமிழ்ச் சமுதாயத்தே இன்று எத்தனை வேறுபாடுகள் தலைவிரித்தாடக் காண்கின்றோம். முல்லையையும் மயிலையும் மறந்த மனிதன் தன் இனத்தவனையே மறந்துவிட்டான். மனித இனத்துக்குள்ளேயே கணக்கற்ற வேறுபாடுகளைக் கற்பித்துக் கொண்டான். அவன் சாதியாலும், சமயத்தாலும், நீதியாலும்,

நிறத்தாலும், பட்டத்தாலும், பதவியாலும், குலத்தாலும் கோத்திரத்தாலும், கட்சியாலும், வெறியாலும் இன்னும் எத்தனை எத்தனையோ வகையாலும், மனித இனத்தைத் துண்டு துண்டாக வெட்டிக் கொண்டே இருக்கின்றான்.

மனிதனின் உடல் உறுப்புக்கள் தம்முள் மாறுபட்டு ஒன்றை ஒன்று தாக்கிக்கொள்வது போன்ற கொடு நிலைக்குத்தான் மனித சமுதாயம் இன்று சென்று கொண்டிருக்கின்றது. 'உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டாம்' என்று அறிஞர்கள் வருந்தி அறிவுரை கூறும் நிலையில் - உடன் பிறந்தவர் வாழ்வைக் கண்டு பொங்கிப் பொருமிக் கேடுசூழும் அளவுக்கு அம்மனிதன் முன்னேறி விட்டான்! 'காகம் உறவு கலந்து உண்ணக் கண்டீர்' என்று அவனினும் குறைந்த அறிவுடைய பிற உயிர்களைக் காட்டி அவை வாழ்வது போன்றாயினும் 'கூடி வாழ்' என்று அறிவுரை கூறும் நிலைக்கு மனித சமுதாயம் இழிநிலை அடைந்து விட்டது. சமயத்தால், மொழியால், பிறவகைகளால் நாட்டைத் துண்டாடும் செயல்களை நம் கண்முன்னேயே காண்கின்றோம். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பரந்த நோக்கோடு வாழவேண்டிய மனிதன் தன் உடன் பிறந்தானையும் வேற்றுக் கண்ணோடு நோக்கப் பழகி விட்டான். ஆம்! இன்றைய மனிதன் தன்னை மறந்து—மனிதப் பண்பினைத் துறந்து—உயிர் அறத்தை அடியிட்டு மிதித்து எங்கோ ஓடிக்கொண்டிருக்கின்றான். இதெல்லாம் எதனால்? உண்மைச் சமரச ஞானத்தை மறந்த காரணமல்லாது வேறு என்ன கூற முடியும்?

அருள் ஞானம் கைவரப்பெற்ற நல்லவர்கள் உண்மையிலே உயிர்களை ஒத்து நோக்கி உலகை உய்விக்க வேண்டுமென எண்ணுகின்றவர்கள்—அவ்வப்போது உலகில் தோன்றி அறநெறியைக் காட்டிக் கொண்டேதான் இருக்

கின்றனர். உலகம் தோன்றிய அந்நாள் தொட்டு இன்று வரை அவர்கள் காட்டிய-காட்டும்-சமரச நெறியை மனிதன் வாழ்விடை இன்னும் கொள்ளவில்லை. என்றா லும் அந்த அருள்ஞானச் செல்வர்கள் அதனால் சலிப்படை யாது அடுத்தடுத்து வந்து நமக்குச் சமரச ஞானத்தைத் தந்துகொண்டே யிருக்கின்றனர். அத்தகைய உள்ளத் துறவு பெற்ற உயர் அடியார் வரிசையில் வந்து உலகெல் லாம் வாழ வேண்டும் என்ற நல்ல விழைவில் அருட்பா பாடி, உயிர் நலம் புரந்த செம்மலார் **இராமலிங்க அடிகளார்** ஆவார்கள். அவர் தம் ஒவ்வொரு சொல்லும் உயிரினத்தை வாழ வைப்பதாகும்.

அவர்கள், தாம் அனுபவ வாயிலாகக் கண்ட பல உண்மைகளை உலகுக்கு உணர்த்துகின்றார்கள். அவரைக் காட்டினும், உயிர்களைக் கண்டு வருந்தி—அவர்தம் வருத்தம் கண்டு வாடி, அவர் நோய் கண்டு நெஞ்சு நைந்து, அவர்களை வாழவைக்க வழி என்ன என்னவென்று தேடிச் சென்ற பெரியவர் இல்லை என்று சொல்லலாம். வாடும் பயிர் அவர் உள்ளத்தை வாட்டுகின்றது. வீடு தோறும் இரந்தும் ஒரு வாய் சோறும் பெறாத ஏழையின் நிலை அவர் நெஞ்சத்தைத் தொடுகின்றது பிணியாளரின் சகிக்க முடியாத கொடுமை அவர் உள்ளத்தை வாள் கொண்டு அறுக்கிறது. அவரும் வாடுகிறார்-வருந்துகிறார். அவர் தம் இரக்கம்-ஏக்கம்-பாட்டாக உருப்பெற்று வருகின றது. அதை இறைவன் திருமுன்பு வைத்து, 'நானே இதற்கு நாயகமோ?' என இறைவனைக் கூவி அழைக்கிறார். இதோ அவர் வாக்கு:

வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன்; பசியினால் இளைத்தே
வீடுதோ று இரந்தும் பசியறாது அயர்ந்த
வெற்றைக் கண்டுளம் பதைத்தேன்;

நீடிய பிணியால் வருந்துகின் றார்என்
நேருறக் கண்டுளம் துடித்தேன்;
ஈடில்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ்சு
இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்.

இந்த அறிவுரை அன்று தொட்டு—தொல்காப்பியர் காலந்தொட்டு—இன்று வரை தமிழகத்தில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. உலகின் பல பாகங்களிலும் இதே உண்மை பல்வேறு தவஞானச் செல்வர்களால் உணர்த்தப்பட்டே வருகின்றது. என்றாலும், மனிதன் அதைப் பிடித்துக் கொண்டே—மற்றவர்களுக்கும் மற்றவைகளுக்கும் விளக்கிக் கொண்டே—தான் மட்டும் எங்கேயோ ஓடிக் கொண்டிருக்கிறான்; பறக்கிறான். சந்திரனைத் தாண்டியும் அவன் விண்வழி உயர உயரப் பறக்கிறான். என்றாலும் உள்ளம் எங்கோ தாழத் தாழச் சென்று கொண்டே இருக்கிறது. இதை எண்ணிப் பார்ப்பின் உணர்வான். எண்ணவும் அவன் விரும்ப வில்லை. வள்ளலார் எண்ணச் சொல்லுகிறார். எண்ணி உண்மையில் உள்ளத்து ஒளிபெறின் அவன் மனிதனாவான். அந்நாள் எந்நாளோ? புற இருளையும் அக இருளையும் ஒருங்கே போக்கி மனிதனை மனிதனாக வாழவைக்க இப் பூசப் பெருநாள் வழி காட்டுவதாக!

வாழ்க அறநெறி! வளர்க சமரச உணர்வு!

# 7. சமதர்மச் சமுதாயம்*

இன்று உலகெங்கணும் மக்கள் சமதர்மக் கொள்கை உடையவர்களாக வாழ வேண்டும் என்று பேசப் பெறுகின்றது. சிறப்பாக நம் பாரத நாட்டில் இக் கொள்கையைச் செயலளவில் பரப்ப இந்திய அரசாங்கமும் பொது மக்களும் விரும்புகின்றனர். கொள்கை மிகச் சிறந்தது தான். ஆனால் இது புதிய கொள்கையன்று. தமிழன் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக இக் கொள்கையை வற்புறுத்தி வந்து கொண்டே இருக்கிறான். வெறும் பொருளில் மட்டுமன்றி, கல்வி, புகழ், அனைத்திலுமே அவன் சமதர்மத்தை நாடியிருக்கின்றான். இன்று பணத்தில் உயர்ந்தவரால் மட்டும் சமூகம் கெட்டுவிடவில்லை. அதிகமாகப் படித்துவிட்டோம் என்று எண்ணும் சிலராலும், புகழ் ஏணியின் உச்சியில் ஏறிவிட்டோம் என்று இறுமாக்கும் சிலராலும்கூடச் சமூகம் கெடுவதைக் காண்கின்றோம். ஒருவனை மற்றவனிடத்திலிருந்து வேறு படுத்தும் எதிலும் சமதர்மம் நிலவ வேண்டும் என்பதே தமிழன் கொள்கையாகும்.

> ' **கல்வி ஆங்காரம் துன்பம்**
> கற்றில னாகில் துன்பம்
> மல்லன் மா ஞாலம தன்னில்
> **வலிமிகின் மதத்தால் துன்பம்**

என்று, பிற்கால அறிஞர் ஒருவர் கற்றதனாலும் வலிவுற்றதனாலும் நாட்டுக்கு வரும் துன்பத்தை எடுத்துக் காட்டுகின்றார். ஆண்டவனைப் பாடவந்த அடியவர்களாகிய மணிவாசகரும் தாயுமானாரும் இக் கருத்தை எண்ணித்

* மதுரைச் சித்திரை விழா மலர்

தான் போலும் 'கற்றுரை யான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும்' என்றும் 'கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்' என்று கூறிச்சென்றுர்கள். இப்படிக் கூறுவதால் நாட்டில் யாரையும் கற்க வேண்டாம் என்று கூறியதாக நினைக்க வேண்டாம். கற்க வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இல்லை. ஆனுல் கற்கும் வாய்ப்பை ஒரு சிலர் வைத்துக் கொண்டு, அதனுல் தாம் அதிகமாகக் கற்றுச் சமுதாயத்தில் மேலேற, மற்றவர் அதைக் கண்டு ஏங்கும் ஏற்றத்தாழ்வு கூடாது என்பதே அவர்கள் கருத்து. மற்றும், இன்று நாட்டிலும் உலகிலும் நடைபெறுகின்ற அத்தனைக் கொடுமைகளுக்கும் காரணம் யார் என்று எண்ணிப் பார்த்தால் ஓர் உண்மை புலப்படும். ஒரு தலைமுறையில் இருபெரும் யுத்தம் உண்டாக்கியவர்கள் கற்றவர்களா? கல்லாதவர்களா? அடுத்த போர் எப்போது தொடங்குமோ என்று மக்கள் உள்ளத்தில் மாளாப் பீதி உணர்ச்சியை ஊட்டிக் கொண்டிருப்பவர்கள் கற்றவர்களா? கல்லாதவர்களா? நாட்டில் பொருளாதார முட்டுப்பாட்டையும் பிற முட்டுப்பாடுகளையும் உண்டாக்கி மக்கள் வாழ்வைப் பாழாக்குபவர்கள் கற்றவர்களா? கல்லாதவர்களா? ஆம்! எல்லாக் கொடுமைகளும் கற்றவர்களால்தாமே நடைபெறுகின்றன. இத்தகைய கற்றவர்கள் எனத் தம்மைக் கூறிக்கொள்ளும் மக்களைக் கண்டே அறிஞர்கள் அவ்வாறு அஞ்சுகின்றனர். கற்றவர் தம் இலக்கணம் கூற வந்த வள்ளுவர்,

> 'தாம் இன்புறுவது உலகின்புறக் கண்டு
> காமுறுவர் கற்றறிந்தார்'

எனக் காட்டுகின்றுர். எனவே, படித்தவர்கள் தம்மைப் போல் உலகில் மற்றவர் வாழ வேண்டும் என எண்ணுபவராவர். இந்த உள்ளப்பாங்கு கற்றவருக்கும், புகழாளருக்கும் — ஏன்? — செல்வருக்கும் கூட இருக்குமாயின்

நாட்டில் ஒரு குறையும் இருக்காது; இல்லாத காரணத்தால் தான் நாட்டில் கிளர்ச்சிகளும், உலகில் போர்களும், மக்கள் உள்ளத்தில் தடுமாற்றங்களும் உண்டாகின்றன. அத்தடு மாற்றத்தைப் போக்க எல்லாருக்கும் எல்லாவற்றையும் சமமாகப் பகிர்ந்தளித்தலைத் தவிர வழி இல்லை. அதைத் தான் 'சமதர்மச் சமுதாயம்' என்கின்றனர் அரசியல் வாதிகள்.

கல்வியால் எல்லாரும் இன்புற்று வாழவேண்டும் என்ற உணர்வு உண்டானால், நாட்டில் கற்றவர் பெருகி யாதொரு வேறுபாடும் இல்லாமல் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்றபடி இணைந்து வாழ்வார்களன்றோ?

புகழும் மக்களுள் மாறுபாட்டை உண்டாக்குகின்றது. வாழ்வின் சூழல்களும் பிற இயல்புகளும் சிலரைப் புகழின் உச்சத்துக்குக் கொண்டு செலுத்துகின்றன. சிலர் எத்தனையோ தகுதிகள் பெற்றிருந்தும் புகழ்பெறாது மாய் வதையும் காண்கின்றோம்.

> ' யாவ ராயினும் நால்வரைப் பின்னிடில்
> தேவர் என்பது தேரும் இவ்வையகம் '

என்றபடி, யாராவது நான்குபேர் பின்னால் வர இருந்தால் அவர்கள் உடனே தலைவராகத் தம்மை நினைத்துக் கொள்ளுகின்றனர். இது அரசியலுக்கு மட்டும் பொருந் துவதன்று. கல்வி, கலை, பிற அனைத்துக்கும் பொருந்தும். அதனால் உண்மையிலேயே தகுதிபெற்றவர் வாடுவதோடு, மற்றவர் கண்டு பொறாமைப் படத்தக்க நிலையும் உண்டா கிறது. கற்றவர்களுக்கிடையே இப்புகழால் உண்டாகும் பொறாமையல்லவா 'புலவர் காய்ச்சல்' என்ற ஒரு புதுமைப் பொதுத் தொடரையே உண்டாக்கி விட்டது. எனவே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒரு புலவர், இந்தப் புகழ் இகழ் இரண்டுமே வேண்டாமென் றும், ஆருயிர் முறைவழிப் படுவதால், சந்தர்ப்பமே ஒருவனை

உயர்ந்தவனாகவும் தாழ்ந்தவனாகவும் காட்டுகிறதென்றும் கூறினர்.

'கல்பொருது இரங்கும் மல்லல் பேரியாற்று
நீர் வழிப்படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தன மாதலின் மாட்சியில்
பெரியோரைப் புகழ்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே'

(புறம். 142)

எனக் கணியன் பூங்குன்றனார் அன்றைக்குப் பெரியோரைப் புகழ்தல் இல்லையென்றும், அதனினும் முக்கியமாகச் சிறியயோரை இகழ்தல் இல்லை என்றும் திட்டமாகக் காட்டுகின்றார். இந்தப் புலவர் வாய்மொழி இன்று உலகில்—இந்தியாவில்—சிறப்பாகத் தமிழ் நாட்டில் ஏட்டளவில் இல்லாது நாட்டு வாழ்வில் வருமானால் எத்தனையோ சிறு சிறு வேறுபாடுகள் நீங்கி நன்மை உண்டாகுமே! ஆம்—கணியன் பூங்குன்றனார் காணவிழைந்த 'புகழின் சமதர்மம்' நாட்டில் தழைக்க என வாழ்த்திப் பொருளாதாரச் சமதர்மத்தைக் காண்போம்.

பொருளாதாரச் சமத்துவமே நாட்டின் நல்வாழ்வுக்கு அடிப்படையாகும் என்ற உண்மையை இரண்டாயிரம் ஆண்டுகளாகவே பல அறிஞர்கள் வற்புறுத்தியுள்ளனர். ஆண்டவனை அன்பால் வழிபடும் அடியவர்களும் கூட மெய்ம்மை வழிபாட்டின் அடிப்படை இச் சமதர்மச் சிறப்பில்தான் அமைந்துள்ளது எனக் காட்டுகின்றனர்

'உண்பது நாழி உடுப்பன இரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே!'

(புறம். 148)

என்று நக்கீரர் மக்கள் வாழ்வின் அடிப்படைகளை நன்கு எடுத்துக் காட்டுகின்றனர். எல்லா மக்களும் உண்ண உணவும் உடுக்க உடையும் ஒருவித குறைபாடும் இல்லா

மல் பெறுதல் வேண்டும். அத்துடன் இருக்க இடமும் தேவை. இந்த வாழ்வின் அடிப்படையையும் பிறவற்றை யும் சேர்த்தே 'பிறவும் எல்லாம் ஓரொக்கும்மே, என்றார். இந்த அடிப்படைகளை அனைவருக்கும் தேடித் தருவது தான் இன்றைய சமதர்மச் சமுதாயத்தின் அடிப்படை யாகும். நாட்டில் எல்லாச் செல்வங்களும் எல்லாருக்கும் பொருந்த இருக்குமானால் ஏற்றத்தாழ்வு நாட்டில் இருக் காது. மாறுபாடு இருக்காது. பொய்யும் பொறாமையும் அதிகமாக வளராது; அன்பும் அமைதியும் வாழும். ஆம்! அத்தகைய நாட்டில் பிச்சைக்காரர்களே இருக்கமாட்டார் கள் என்கின்றனர் புலவர்.

கம்பர் கோசல நாட்டை ஒரு தெளிந்த நாடாகக் (Ideal State) காட்ட விழைகின்றார். அந்த நாட்டில் எல்லாருக்கும் எல்லாச் செல்வங்களும் இருந்தனவாம். ஆகவே, பொருளால் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்றோ பெற்றார் அற்றார் என்றோ வேறுபாடு இல்லை எனக் காட்டு கின்றார்.

**' எல்லாரும் எல்லாச் செல்வமும் எய்தலாலே**
**இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ '**

என்கிறார். அவருக்குப் பின்னால் வந்த சிவப்பிரகாசர் தாம் கண்ட கற்பனை நகராகிய வனவசை மாநகரிலும், விளவல தேயத்திலும் ஓரே ஒரு குறைதான் இருந்தது என்றும், அது கொடுக்க நினைத்தாலும் வாங்கிச் செல்ல யாரும் பிச்சைக்காரர் கிடையாக் குறையே என்றும், எனவே, அந்த நாடும் நகரும் எல்லாச் செல்வங்களும் பெற்று விளங்கின என்றும் காட்டுகின்றார்.

**' கொடுப்போர்க்கு இரப்பார் இல்லாத**
**குறையொன் றுளது கூறுங்கால் '**

(பிரபுலிங்கலீலை

என்பது அவர் வாக்கு. இன்னும் சமயத் தலைவர்களாகிய அப்பர் சுந்தரர் இருவரும் இப் பொருட் சமத்துவத்தை நன்கு காட்டுகின்றனர். வாழ்வில் அமைதிகான ஆண்டவனை வழிபடுகின்றவர்கள், 'வைத்த பொருள் நமக்கு ஆம் என்று சொல்லி மனத்தடைத்து' இருக்க வேண்டும் என அப்பர் காட்டுகின்றார். சுந்தரரோ 'இம்மையே தரும் சோறும் கூறையும் ஏத்தலாம் இடர் கெடாலுமாம்' என்று இப்பிறப்பிற்குத் தேவையான சோற்றையும் ஆடையாகிய கூறையையும் இன்றியமையாதன எனக்கூறி, அவற்றைப் பெற்ற அடியவர் அமைதியாக இறைவனை வழிபடலாம் என்கின்றார். இவ்வாறு சங்ககாலந் தொடங்கி இன்று வரை வந்த உண்மையினை எண்ணித்தான் வள்ளுவர்,

**' இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து**
**கெடுக உலகியற்றி யான் '**

எனக் கூறி, இறைவன் தனது படைப்பில் சமதர்மத்தையே விழைந்தவன் என்ற உண்மையை வற்புறுத்திக் காட்டுகின்றார், இவற்றையெல்லாம் எண்ணிய இந்த நூற்றாண்டின் விடுதலைக் கவிஞர் பாரதி,

**' தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்**
**சகத்தினை அழித்திடுவோம்'**

எனக் கூறுகின்றார்.

இவ்வாறு, கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாகச் சங்க காலம் தொடங்கி இருபதாம் நூற்றாண்டுவரையில் வாழ்ந்த தமிழ் நாட்டுப் புலவர்கள் அனைத்திலும் சமதர்ம உணர்ச்சி மக்கள் உள்ளத்தில் பரவ வேண்டும் என வற்புறுத்தியே வந்துள்ளனர். இங்கு ஒரு சில காட்டினேன். தமிழ் இலக்கியக் கடலுள் ஆழ்ந்து காணின் இவை போன்று ஆயிரக்கணக்கான மேற்கோள்களைக் காணலாம். எனவே. இச் சமதர்மக் கொள்கை தமிழனுடைய

பழைய கொள்கைதான். இன்று இது அரசியல் கட்சி களால் பற்றப்படுகிறது. இக் கொள்கை நாட்டில் நிறைவேற்றப்பட வேண்டுமானால், மக்கள், கட்சி வேறு பாட்டையும், பிற சாதி சமய வேறுபாடுகளையும் மறக்க வேண்டும். நல்லது செய்வதில் நாட்டவர் அனைவரும் ஒன்றிச் செயலாற்றினால் வரும் தவறு ஒன்றும் இல்லையே! இந்த உண்மை உணர்ந்து உலகில் வாழும் மக்கள் பாரத நாட்டுப் பல்வகைப்பட்ட இன மக்கள்-சிறப்பாகத் தமிழ் மக்கள்—வெறும் உதட்டளவில் இல்லாது உண்மையாக உள்ளத்தில் நினைத்து ஒன்றிச் செயலாற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். தம்மை மறந்து-தம்மைப் பிரிக்கும் சாதி, சமயம், கட்சி, பிற வேறுபாடுகளை மறந்து-தன்னை ஒரு மனிதன் என்று கருதி, அம்மனிதனுக்கு இருக்கவேண்டிய நற்பண்புகளை யெல்லாம் பெற்று, ‘நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை’ என்ற கொள்கையில் நாம் வாழ்வோமானால், நாடு நலம் பெற்று ஓங்கும். அத்தகைய செம்மையான வாழ்வுப் பாதையில்-சமதர்மச் சமுதாய வாழ்வுப் பாதை யில்-நாம் அனைவரும் உளம் ஒன்றி முன்னேறுவோமாக!

'திட்டங்கள் ஒன்றன்பின் ஒன்ருகத் தீட்டப் பெறு கின்றன. பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் ஆண்டுதோறும் செலவுசெய்யப் பெறுகின்றன. கடந்த பத்து ஆண்டுகளிலே இந்தியா செலவு செய்த பணம் மிகப் பெரிது; பயனே மிகமிகச் சிறிது. 900 கோடி ரூபாய் விவசாயத்துக்காக இதுவரை செலவு செய்தும் பயன் ஒன்றும் காணவில்லை' என நேரு அவர்களே வாய் விட்டுப் பேசுகின்ருர்.

ஆக்ராவில் சென்ற நவம்பர் (1959) 10-ஆம் தேதி திரு நேரு அவர்கள் பேசியபோது இதைக் குறிப்பிட் டார்கள். "உலகில் எந்த நாட்டிலும் செலவிடப்படாத வகையில் விவசாயத்துக்கு இந்தியா 900 கோடி ரூபாயைச் செலவிட்டது. எங்கோ ஒருசில மூலைகளில் ஓரளவு பயன் காணப் பெறினும் பொதுவாக எதிர்பார்த்த பயன் இல்லை எனலாம். காரணம் என்ன? பணம் எங்கே மறைந்தது? யாராவது தின்று விட்டார்களா? இல்லை. அது சரியாகப் பயன்படுத்தப் பெறவில்லை. 'மேலே ஆளும் கணத்தார் நல் எண்ணத்தோடு திட்டங்களை உருவாக்க, அவற்றைக் கீழே செயல்படுத்தும் பொறுப்பாளர் சரிவர நிறைவேற்ற வில்லை' என்று நேரு அவர்கள் வருத்தத் தோடு கூறுகின்ருர்கள். செலவுத்தொகை ஒன்றிரண் டல்ல; பல ஆயிரம் கோடிகள்: அவை சரியாகச் செலவு செய்யப் படவில்லை என்றும் தெரிகிறது. தெரிந்தும், எங்கே சரியாக நடைபெறவில்லை என அறிந்தும் அதைத் துடைக்க அரசாங்கம் முன் வரவில்லை என்ருல், காரணம் என்ன?

சென்னையில் ஒரு கூட்டத்தில் திரு காமராசர் அவர்கள் வீடுகட்டும் திட்டம் பற்றிப் பேசினார்கள். அதில் 'அரசாங்கம் வீட்டில்லாதவர்களுக்கு உதவ வீடு கட்டித் தருகிறார்கள். குறைந்த வட்டியில் பணம் கொடுத்து வீடுகள் கட்டப் பெறுகின்றன. ஆனால், பலர் அவற்றை வாடகைக்கு விட்டு விடுகிறார்கள். சிலர் நல்ல விலைக்கு விற்று விடுகிறார்கள்' எனக் குறைபட்டார்கள். ஏன் அப்படிக் குறைப்பட வேண்டும்? நேரு அவர்கள் கீழ்உள்ள உத்தியோகஸ்தர்கள் மேல் குறை கூறுகிறார்; காமராசர் மக்கள் மேல் குறை கூறுகின்றார். ஆகவே இருவருக்கும் குற்றம் நடக்கும் இடம் தெரிந்தே இருக்கிறது. தெரிந்தும் நடவடிக்கை எடுக்காத காரணம் என்ன?

கீழ் உள்ள மாவட்ட அதிகாரிகள் தங்கள் வேலையை ஊர்தோறும் நேரில் சென்று பார்வையிட்டுச் செய்ய வில்லை என நேரு குறைப்படுகிறார்கள், உண்மை, ஆனால் அவர்களுக்கு ஓய்வு எங்கே இருக்கிறது? அவ்வப்போது வரும் மாநில மத்திய அமைசசர்களோடு இருக்கவும். வெளி நாட்டாருக்கு வழிகாட்டவும் அவர்களுக்கெல்லாம் ஏற்பாடு செய்யவுமே அவர்தம் பெரும்பாலான நேரம் கழிகிறது. எதற்காக அவர்கள் இருக்கிறார்களோ, அதற்காக அவர்கள் தொழில்பட முடிவதில்லை. மக்கள் வாழ்வை வளமாக்குவதே அவர்கள் பணி. ஆனால் மேலிடத்திலிருந்து வருபவர்கள் அவர்களைத் தங்களோடு இருக்கச் செய்து மக்களோடு தொடர்பு கொள்வதைத் தடுக்கிறார்கள். திங்களுக்கு ஏழெட்டுத் தடையாவது மந்திரிமார் வந்து வந்து சென்று கொண்டிருக்கிறார்கள். வெளிநாட்டுப் பயணக்கோட்டியார் பலர். இவர்களுக்கு இடையில் அவர்கள் தமது பணிகளைக் கவனிப்பது எங்கே?

பிற்க, இவ்வாறு விவசாயத்துக்குச் செலவிடும் பணம் வீணாகும் காரணத்தைக் காபி போர்டு தலைவர் விளக்கிக்

காட்டியதை 'மெயில்' இதழ் நன்கு எடுத்துக் காட்டி விளக்கியிருக்கிறது. 'எண்ணித் துணிக கருமம்' என்பது அரசியல் அறிந்த வள்ளுவர் வாய்மொழி. ஆனால் எத்தனை திட்டங்கள் எண்ணி எண்ணி உருவாக்கப் பெறுகின்றன? ஏதோ அவசரத்தில், மற்றக் கட்சிகளின் பிரசார மறுப்புக்காகப் பல கோடி ரூபாய் செலவிட்டோம் என்று தேர்தல் கூட்டத்தில் பேசுவதற்கோ என நினைக்குமாறு, முன்பின் விளைவுகள் உணராது பல கோடித் திட்டங்கள் தீட்டுவதால் பயன் என்ன? மெயில் இதழ் பலகோடி செலவிட்டும் பயனற்ற பல திட்டங்களை எடுத்துக்காட்டியுள்ளது— (12-11-59). அவற்றுள் ஒன்று துங்கபத்திரைத் திட்டம். எனவே எங்கோ உட்கார்ந்துகொண்டு காலம் இடம் அறியாது திட்டம் தீட்டிப் பணத்தை ஒதுக்கி வீணாக்கி விட்டால் மட்டும் பயன் காண முடியுமா? இது விவசாயத்தில் மட்டுமன்று. ஒவ்வொரு துறைக்கும்-கல்வி, கைத்தொழில், சமூகப் பணி அனைத்துக்கும்-பொருந்தியதேயாகும். திட்டம் தீட்டப்பெறுமுன் அது பயன்படும் இடம், கால நிலை, மக்கள் உணர்வு, பிற இயல்புகள் அனைத்தும் எண்ணப்பட வேண்டும், அவ்வாறு இன்றித் திட்டம் தீட்டிவிட்டுப் பயன் இல்லை என்றால் என்ன காணமுடியும்?

நிற்க, விவசாயிகளுக்குச் செலவாகின்றது பல கோடி என்று கூறும்போது மற்றொன்றையும் எண்ண வேண்டும். ஆண்டுதோறும் சட்டசபைகள் 'பட்ஜெட்' கூட்டம் கூடிச் செலவாகும் தொகையை அரசாங்கம் கணித்து மத்திய மாநில ஆட்சிகளுக்கு ஜூலை ஆகஸ்டில் ஒப்படைக்கின்றன. பின் மாநில ஆட்சிகள் மாவட்டங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப் பின்னும் இரண்டு மாதங்கள் ஆகின்றன. அவை உரியவருக்கு வேலை கொடுத்துத் தொடங்க ஜனவரி பிறந்துவிடும். வேலை

மார்ச்சு 31க்குள் முடியவேண்டும், எப்படி நடக்கும்? ஏதோ நடந்ததாகச் செய்து முடித்துக் காட்டுகிறார்கள். அதனாலே பலவாறு பயனற்றுப் பொருள் கெடுகிறது. ஐம்பது, நூறு ஆண்டுகளுக்கு முன் கட்டிய சிறு பாலங்கள் அப்படியே கெடாதிருக்க, அண்மையில் கட்டிய பாலங்கள் சிறு வெள்ளத்திலும் சிதறுண்டுப் போவதைக் காண்கின்றோம். எனவே இத்தகைய ஆக்கப் பணிகளுக்கு வேண்டிய பணத்தையும் பிற பொருள்களையும் குறைந்தது ஓராண்டு முன்னமேயே தந்து தொழிற்பட உதவ வேண்டும்.

எல்லாவற்றையும் விரைவில் செய்து நம் ஆட்சி நாளிலேயே நல்ல பெயர் வாங்க வேண்டும் என நினைப்பதில் தவறில்லை, அது மனித உள்ளத்தின் இயல்பு. ஆனால் அதற்காக அளவற்ற—தேவையில்லாத—பயன்படாத—சரிவர ஆக்க இயலாத பல பணிகளை ஒருசேர எடுக்கத் திட்டம் தீட்டுதல் முறையாகுமா? அதற்காக வெளிநாடுகளில் பல கோடிக்கடன் வாங்குவதும் மக்கள்மேல் தாங்கமுடியாத வரிச்சுமையை ஏற்றுவதும் முறையோ? இப்படிச் சற்றுச் சிந்தித்தால் உண்மை விளங்கும். '900 கோடி ரூபாய் இதற்குள் அவர்கள் திட்ட வழி செலவழித்தது எங்குச் சென்றதோ?'—என எண்ணித் தயங்க வேண்டியதில்லை. அரசாங்கம் அவ்வாறு பணம் பயனற்றுச் சென்றவிடத்தைக் கண்டுபிடித்து உற்றவருக்குத் தண்டனை அளித்தால் ஓரளவு இனியாவது நேர்மையாகச் செயலாற்ற வழி உண்டு.

நிற்க, திரு காமராசர் கூறியபடி சென்னையிலும் பிறவிடங்களிலும் அரசாங்கம் பல்வேறு வகையில் உதவி, குறைந்த வட்டிக்குப் பணம் தந்து, வீடற்றவருக்கு வீடு கட்டித் தருகிறது, ஆனால் அவர்கள் வாடகைக்கு விட்டுப், விற்றும் பொருள் சம்பாதிக்கிறார்கள். இதை

முதல் அமைச்சரே அறிந்திருந்தும் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது? சென்னையில் நிலைத்து வாழ்வோர் பலர் வீடற்று இருக்கும் நிலையில் இங்கு வாழாதவருக்கு ஏன் வீடு ஒதுக்க வேண்டும்? பல ஆண்டுகளாக நகராண்மைக் கழகத்தில் பணி செய்யும் பலர் வீடு வேண்டும் வேண்டும் எனக் கேட்டுக்கொண்டிருக்க, நேற்று வந்து நாளை செல்லும் சிலருக்கு நகராண்மைக் கழகத்தார் வீடுகளை ஏன் ஒதுக்க வேண்டும்? இவ்வாறு ஒதுக்கினால் அவர்கள் விற்று அல்லது வாடகைக்கு விட்டுச் செல்லாது வேறு என்ன செய்வர்? அவர்கள் அவ்வாறு செய்யும்போது நடவடிக்கை எடுத்துத் தடுத்துத் தண்டித்தால் நிலை திருந்தாதா? அறிந்தும் ஏன் செய்யவில்லை?

பம்பாயில் இந்தக் கூட்டுறவு முறையில் வீடுகட்டும் திட்டங்கள் உள, அதில் ஒருவரும் இம்மாதிரி விற்கவோ, வாடகைக்கு விடவோ முடியாது. அவர்கள் தமக்குத் தேவை இல்லையாயின் வீட்டைக் கொடுத்த கூட்டுறவுச் சங்கத்திடமே ஒப்படைக்க வேண்டுமே தவிர, வேறு ஒன்றும் செய்ய இயலாது. இந்த முறையை இங்கே செயலாற்றினால் என்ன? எத்தனையோ குறைகள் ஒழியுமே!

உணவு முறையில் அரசாங்கம் மேற்கொள்ளும் திட்டங்கள் நாளுக்குநாள் மாறுபடுவதைக் காண்கிறோம். நாட்டு நிலை அறிந்து தேவை அறிந்து சென்னை மாநிலம் தனக்கெனத் தனி உணவு மண்டலம் கேட்டும் மத்திய அரசாங்கம் ஏன் மறுத்தது? இங்குள்ள நிலை இவர்களுக்குத் தானே விளங்கும்? எங்கோ தில்லியில் இருந்துகொண்டு மற்ற மாநிலத்தாருக்கு உதவ வேண்டும் என்பதற்காக இவர்கள் வேண்டுகோளை மறுக்கலாமா? அதனால் இவர்கள் நெல்லைக் கொள்முதல் செய்வதும் இன்றேல் விடுவதும் என்று தம் விருப்பம்போல் செய்து மக்கள் வாழ்வை

மாருட வைக்கிருர்கள். நிற்க, 'அரிசி, புளி, மிளகாய் முதலியவற்றின் விலைகள் உயர்கிறதே; தடுக்க வழி யில்லையா?' என மக்கள் அலறும்போது 'அது நாட்டுப் பொருளாதார உயர்ச்சியைக் காட்டுகிறது' என்றும், 'விலை ஏறிஞல் அவற்றை வாங்காது விட்டு விடுங்கள்' என்றும் பொறுப்புள்ளவர்கள் பேசுவது பொருந்துமா? அரிசி, புளி, மிளகாயை வாங்காது விட்டு வாடி இறப்பதா? இதை அரசாங்கம் விரும்புகிறதா? உரிய நடவடிக்கை எடுத்து விலை ஏற்றத்தைத் தடுக்க வேண்டாமா?

இவ்வாறு ஒவ்வொரு துறையையும் எண்ணிப் பார்க்கலாம். அரசாங்கம் வருமானத்தை அதிகமாக்கச் சென்னைப் 'பஸ்' போக்குவரத்தை எடுத்துக் கொண்டது. ஆனல் இன்றைய கணக்குப்படி வருமானம் என்ன? தனியார் காலத்தில் வருமான வரியாக மத்திய அரசாங் கத்துக்கும், பிற வரிகளாக மாநில அரசாங்கத்துக்கும் கொடுத்த அந்த வருமானங்களோடு இன்றைய வருமானத் தைக்கணக்கிட்டுப் பார்த்தால் உண்மை விளங்கும். அன்றித் தான் மேற்கொண்டதைத் திறம்பட நடத்திற்று என்ற பெயரும் இல்லையே!

கல்வித் துறையிலும் எத்தனையோ மாற்றங்களும் மாருட்டங்களும் உள்ளன. இளம் குழந்தை முதல் கல்லூரி மாணவர் வரையில் இந்த அரசாங்கத் திட்டங் களாலும் பல்கலைக் கழகத் திட்டங்களாலும் பாதிக்கப் பெறுகின்றனர், அவ்வத்துறையில் வல்லவர்கள் அதில் அதில் உள்ள குறைகளைக் கண்டு காட்டித் "திருந்துங்கள் திருத்துங்கள்" என்று கூறினலும் கேட்பது கிடையாது. ஒவ்வொரு துறையிலும் இப்படி அவ்வத்துறையில் வல்ல வர் சொல் கேளாது தம் விருப்பம்போல் திட்டம் தீட்டிக் கடன் வாங்கிக் கோடிக் கணக்கில் செலவிட்டால்

மட்டும் பயன் காண முடியுமா? ஒவ்வொன்றையும் எண்ணிப் பார்க்க வேண்டும். எண்ணி எண்ணி மெள்ள மெள்ளச் செயல்பட வழி துறை காணவேண்டும். எதிலும் அவசரம் அல்லலையே விளைக்கும். இரண்டுபட்ட உலகில் நாட்டைத் தம் வழி இழுக்க யாரும் கோடி கோடியாகக் கடன் கொடுக்க வருவார்கள். ஆனால் அதைக் கொண்டு நம் நாட்டைத் திறம்படாத திட்டத்தால் சீர் குலைக்கலாகாது. ஆகவே ஒன்றைத் திட்டமிடுமுன் எண்ணுக!

'எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு,

என்ற குறளைத் தான் இங்கே என்னால் கூற முடிகிறது. ஆம்! திட்டுமுன்—திட்டம் தீட்டுமுன்—எண்ணுங்கள். எண்ணிப் பின் செயல் படுங்கள். பிறகு யாரையும் குறைகூற வழியிருக்காது. **வெற்றிக்கு அதுவே வழி!** ஆம்! எண்ணிச் செயலாற்றுவதே வெற்றிக்கு வழி!

# 9. எல்லைப் போராட்டம்*

பல ஆண்டுகளுக்கு முன் என்னையே நான் நன்கு அறிந்து கொள்ளாத காலம். கிராமத்தில் எங்கள் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தேன். எனது அன்னையார் பக்கத்தில் நின்று கொண்டிருந்தார்கள். திடீரென்று நான்கைந்து நாய்கள் குரைத்துப் பேரொலி எழுப்பின. நான் என்ன என்று எட்டிப் பார்த்தேன். தூரத்தில் எங்கள் தெருவை நோக்கி ஒரு நாய் மெல்ல வாலைக் குழைத்துக்கொண்டே நகர்ந்து வந்தது. ஆனால் தெருவி லிருந்த நான்கைந்து நாய்கள் அதை நோக்கியே குரைத்து வேகமாக ஓடின. அந்தப் புது நாய் சிறிது நேரம் நின்றது. பிறகு திரும்பி ஓட்டம் எடுத்தது. எனக்கு ஒன்றும் விளங்க வில்லை. அன்னையின் முகம் நோக்கினேன். அவர்கள் சொன்னார்கள்.

"இந்த நாய்களெல்லாம் நம் தெருவிலேயே வாழ்கின்றன. அந்தப் புதுநாய் எங்கோ பக்கத்துத் தெருவி லிருந்து புதிதாக இங்கு வரப் பார்த்தது. அதை அறிந்த இவைகள் குரைத்துத் திரும்ப ஓடும்படி செய்து விட்டன. ஆமாம்! இத் தெரு, இந்த நாய்களுக்குச் சொந்த எல்லை. இங்கு நாமெல்லாம் இடும் எச்சில் இலைகள் முதலியவைகளை இவையே தின்னும். இன்று வேறு புதிய நாய் வரவே, இவை தம் எல்லையில் அதை விடாது துரத்தின. பாவம்! அதுவும் தனியாக ஒன்றும் செய்ய முடியாமையால் ஓடிவிட்டது" என்று கூறிய அன்னை யின் சொல்லைக் கேட்ட எனக்கு அப்போது அதிகமாக ஒன்றும் விளங்காவிடினும், அது ஒரு எல்லைப் போராட்டம்

---

* நக்கீரன் பொங்கல் மலர். ஜனவரி 60

என்பது மட்டும் விளங்கிற்று. தமக்கு உரிமையான தெரு எல்லையில் புதிதாக வேறு ஒரு நாயைவிட எனது தெரு நாய்கள் ஒப்பவில்லை என்பது புரிந்தது.

எனக்கு வயது ஆக ஆகப் புதப்புது அனுபவங்கள் பலப்பல உண்மைகளை விளக்கின. நாய்கள் மட்டும் தாம் எல்லைக்கோடு அமைத்துப் போராட்டம் நடத்த வில்லை; மனிதன் அவற்றினும் மேலாக எல்லைப் போராட் டத்தில் முன் நிற்கின்ருன் என்பது விளங்கிற்று.

எங்கள் ஊரில் கால்வாய் வழிதான் நிலத்துக்குப் பாசனம் செய்ய முடியும். ஏரி கிடையாது. அக் கால் வாயை நிலத்துக்குரியவர்கள் முறைப்படி பங்கு போட்டுக் கொண்டு அவரவருக்கு உரிய எல்லையில் நின்று தோண்டி ஆற்று நீரைக் கொண்டு வருவார்கள். இது நெடுங் கால மாக நடைபெற்று வந்த நிகழ்ச்சி. ஆனல் ஒரு நாள் ஒருவர் திடீரென்று மற்றவர் எல்லையில் புகுந்து தான் அங்கேதான் தோண்ட முடியும் என்று மாறுபட்டார். ஊரில் அனைவரும் தடுத்தார்கள்; கேட்கவில்லை. கடைசியில் அன்றுதொட்டு இன்றுவரை கால்வாயில் சரியாக வேலை நடைபெருது பயிரிடும் தொழிலும் பெருத்த இழப்பிலேயே நடைபெறுகிறது.

ஊரில் அண்ணன் தம்பி இருவர் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தனர். எப்படியோ இருவரும் பிரிக்க விரும் பிய "நல்லவர்" களால் பிரிக்கப்பட்டனர். வீட்டை இருகூருக்கினர். இடையில் உள்ள ஒரு சுவர் பற்றிய எல்லைத் தொல்லை எழுந்தது. இருவரில் யாரும் தன் உடன் பிறந்தவருக்கு விட்டுக் கொடுக்கலாம். அதுதான் இல்லை. அதனல் நீதி மன்றம் ஏறினர். ஒவ்வொருவரும் ஏறக்குறைய ஆயிரம் ரூபாய் இழந்தனர். கடைசியில் எங்கோ இருந்த நீதி உரைக்கும் நடுவர் வாய் மொழிக்குக் கட்டுண்டனர். உடன் பிறந்தவர்க்கு ஒரு

சிறிது விட்டுக் கொடுக்க எண்ணாத எல்லைச் சண்டை ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ஆயிரம் இழப்பைத் தந்ததோடு, என்றும் அவர்களைப் பிரிந்து வாழவே செய்து விட்டது.

இத்தகைய எல்லைப் போராட்டங்கள் ஊர்தோறும் வீடுதோறும் எத்தனை எத்தனையோ நடைபெறுகின்றன. நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. எச்சில் இலைகளை எடுத்துப் பார்ப்பதில்கூடப் பிச்சைக்காரர்கள் எல்லைப் போராட்டம் நடத்துவதை நாம் காண்கிறோம். அண்மையில் ஒரு வேடிக்கையான—ஆனால் வேதனை தரும்—வழக்கு ஒன்று நடைபெற்றது. அதில் வாழ வந்த இடத்திலும் எல்லைப் போராட்டம் நடைபெற்றதைக் காண முடிந்தது. வடநாட்டிலே உத்தரப் பிரதேசத்தில் இருந்த இரு ஏழைகள் வாழ வகையற்றுத் தமிழ் நாட்டுக்கு வந்தனர், சென்னையில் 'சர்பத்' விற்கும் பிழைப்பு அவர்களுடையது. வண்டியில் வண்ண நீர்களைச் சர்பத்தாக்கி வீதிதோறும் விற்று அவர்கள் வாழ்க்கை நடத்தினர். அவர்தம் குடும்பங்கள் அங்கே உத்தரப் பிரதேசத்தில், இவர்கள் சர்பத் வாழ்க்கை இங்கே சென்னையில். வாழ வந்த இடத்திலேயும் இந்த எல்லைப் போராட்டம் அவர்களை விடவில்லை. ஒருவன், தான் 'சர்பத்'விற்கும் தெருவில் மற்றவனை வரவேண்டாம் எனக் கேட்டுக் கொண்டானும்' மற்றவன் அவன் வேண்டுகோளை ஏற்கவில்லையாம். மனக் கசப்பு வளர்ந்தது. கடைசியில் கொலையில் முடிந்தது. ஒருவன் மற்றவன்மேல் ஏதோ திராவகத்தை ஊற்றினானும். அது தாளாத மற்றவன் குமைந்து மருந்தாலும் குணமடையாது மாண்டானும். இதுதான் வழக்கு. வழக்கு முடிவைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டாம், வாழ வந்த இடத்திலே—வயிற்றுக்குக் கஞ்சி தேடி வந்த இடத்திலே—ஏழைகளுக்கும் எல்லைப் போராட்-

டம்தான் தொல்லையாக அமைந்தது என்பதைக் காண முடிகிறது.

இந்த எல்லைப் போராட்டம் தனி மனிதர்களோடு முடிந்து விட்டிருந்தால் உலக வரலாற்றில் இத்தனை நூல்கள் வெளிவரத் தேவையே இருக்காது. எல்லைக் கோட்டைமீறி வல்லரசுகள் அடிவைப்பதாலேயே உலகில் எல்லாப் போர்களும் உண்டாகின்றன எனக் காண்கிறோம். உலகில் மனிதன் வாழத்தொடங்கிய நாளிலிருந்தே இந்த எல்லைப் போராட்டம் நடப்பது என்பது நன்கு தெரிகின்றது. அண்மையில் நம் நாட்டில் மொழிவழி எல்லைப் போராட்டம் தொல்லை தந்ததை அறிவோம். சில ஆண்டுகளுக்கு முன் சமயவழியில் எல்லைப் போராட்டம் இந்தியாவை இரண்டு துண்டாக்கியதை அறிவோம். பிற நாட்டு எல்லைகளில் புகுந்து புகுந்து வெற்றி கண்ட 'வீரன் ஹிட்லர்' விழ்ந்த வரலாறும் நாம் அறியாததல்ல. நாட்டு எல்லைப் போராட்டத்தோடு தொடங்கிய ஆங்கில நாட்டு வரலாறு நமக்குப் பழைய பாடம். நிலத்திலும் நீரிலும் தொடங்கிய எல்லைப் போராட்டம் இன்று வான எல்லையில் வளரத் தொடங்கி விட்டது.

வானவெளியை வல்லரசுகளின் 'ராக்கெட்டு'களும் 'ஸ்புட்னிக்'குகளும் வட்டமிடத் தொடங்கிவிட்டன. ஒரு நாடு மற்ற நாட்டைக் காட்டிலும் விரைவில் வானவெளி ஆதிக்கம் செலுத்தத் தொடங்க நினைக்கிறது; தொடங்கி விட்டது என்றும் சொல்லலாம். அதனால் மற்ற நாடுகள் தம் எல்லையை வானவெளியில் வலியுறுத்த முடியவில்லையே என வாடுவதையும் காண்கின்றோம்! ஆம்! இவ்வாறு மூலை முடுக்குகளில் தனி மனிதன் வாழ்வில் தொடங்கிய எல்லைப் போராட்டம் மண் தாண்டி-கடல் தாண்டி-காற்றினையும் தாண்டி இன்று வான எல்லைவரையில் வளர்ந்து விட்டது. இதற்கு முடிவே கிடையாதா?

ஏன் இல்லை? முடிவு காண்பதன்முன் மற்றொன்றும் இங்கு எண்ண வேண்டியுள்ளது.

இன்று இந்திய நாட்டு வடஎல்லையில் இந்த எல்லைப் போராட்டம் தலைவிரித்தாடுகிறது. எந்த இருவர் ஒன்று கூடித் தோளோடு தோள் பொருந்த நின்று பாருக்கெல்லாம் 'பஞ்சசீலத்'தை உபதேசித்தார்களோ அவர்களே இரு துருவங்களாக இன்று எல்லைப்போராட்டத்தில் கால் வைத்து விட்டனர். சீன நாட்டு மக்கள் இந்திய எல்லையில், கேரள நாட்டு எல்லைபோன்று இருமடங்கு கைக்கொண்டு விட்டனர் எனக் காட்டும் வகையில் வலிய வந்து விட்டனர். இந்திய அரசாங்கம் தன் எல்லையைக் காக்கப் படைபலத்தை அதிகரிக்க வேண்டிய வழியை மேற்கொண்டுள்ளது. சீனாவோ இந்தியா தன் எல்லையில் புகுந்துவிட்டதாக உலக அரங்கில் பேச நினைக்கிறது. எது எப்படியாயினும், பஞ்சசீலம் பேசிய இரு நாடுகளுக்குள் எல்லைப் போராட்டமே தொல்லை தருவதாக அமைந்துவிட்டதே!

இந்தியா பாகிஸ்தானுக்கு உரிய எல்லைப் போராட்டம் இன்னும் தீர்ந்துவிடவில்லை. 'காஷ்மீர்' பற்றிய எல்லையின் முடிவினைக் காண முடியாது கடந்த பதின் மூன்று ஆண்டுகளாக இரு சாராரும் திண்டாடுகின்றனர். பம்பாய் மாநிலம் மொழிவழி எல்லைத் தொல்லையால் பல்வேறு இன்னல்களுக்கு உட்பட்ட பிறகே, இன்று இரு மாநிலங்களாகப் பிரியத் தக்க சூழ்நிலை அமைந்துள்ளது. இவ்வாறு நம் நாட்டிலும் பிறநாடுகளிலும் கடல்மேலும்-அதற்கு அப்பாலுள்ள வானவெளியிலும்-சந்திர மண்டலம் போன்ற பிற அண்ட அமைப்புகளிலும், இத்தகைய எல்லைப் போராட்டங்கள் வளர்ந்து கொண்டே போவானேன்? இவற்றால் மனித அறிவு வளர்கிறது என்று பொருளா? அறிவு என்றால் காணாத

விஞ்ஞானத்தைக் கண்டு பிடிப்பது என்று பொருள் கொள்ளலாமா? எப்படி முடியும்? வள்ளுவர் **'அறிவினுள் எல்லாம் தலை என்ப, தீய செறுவார்க்கும் செய்யாவிடல்'** எனக் கூறுகின்றாரே. எனவே, உண்மை அறிவான மற்ற வரை வாழவைக்கும் பண்பு நாட்டிலும் உலகிலும் வாழ வில்லை. அதனாலேயே இந்த எல்லைப் போராட்டங்கள் வளர்கின்றன. இதை நீக்க வழியில்லையா?

தமிழன் நெடுங்காலத்துக்கு முன்பே இந்த எல்லைப் போராட்டத்துக்கும் இதன் வழி அமையும் பிற போராட்டங்களுக்கும் வழி கண்டுவிட்டான். அதுவே,

**''யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா''** என்ற உண்மையாகும்.

'ஓரே உலகம் அமைப்போம்' என்று உதட்டளவில் பேசிவிட்டு, உள்ளத்தில் எல்லை கட்டும் இந்த எல்லைப் போராட்டத்துக்கு ஒரே மருந்து இந்தக் கணியன் பூங்குன்றன் அடிகள்தாம். ஆனால் உலக வல்லரசுகள் இந்த உண்மையை ஏற்குமா? நான் முதலில் கூறிய அந்தத் தெரு நாயாவது பிறவற்றின் குரைப்பொலி கேட்டுப் பின் திரும்பி ஓடிற்று. இன்றைய வல்லரசுகள் எது சரியோ அதை உணர்ந்து தத்தம் எல்லையில் பின் வாங்கி அமைவார்களானால், போர் இல்லாமலாவது தடுக்கலாம், ஆனால் அப்படிச் செய்யாது ஒன்றற் கொன்று முட்டிக்கொள்ளும் நிலை ஏற்பட்டால் என்னாவது?

தாயுமானவர்.

**ஆசைக் கோரளவில்லை அகில மெல்லாம் கட்டி**
**ஆளினும் கடல் மீதிலே**
**ஆணை செல்லவே நினைவர்'**

என, மக்கள் இனத்தை எண்ணி இரங்கிப் பாடுகிறார். இன்று கடல் தாண்டி விண் மீதும் ஆணை செலுத்த

முளைந்து விட்டனர்! இந்த ஆசையெல்லாம் 'யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவதுமாக முடியும்' என்கிருர் அவர். ஆம்! இதற்காக இத்தனை எல்லைப் போராட்டமா? தம் நாடு வாழப் பிற நாட்டைச் சுரண்டி—நசுக்கி—ஆணை செலுத்துவதா? அதற்கு நாகரிகம் என்று பெயரா? இந்தக் கொடுமை நீங்கத் தாயுமானவர் காட்டும் வழி 'உள்ளதே போதும்' என்ற உணர்வுதான். இந்தத் தமிழனுடைய உணர்வு வல்லரசுகள் உள்ளத்தில் முளைக்க வேண்டும்; முளைக்குமா?

தமிழன் இந்த உணர்வோடு 'செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருக்கும்' பண்பில் தன் நாட்டில் தான் வாடினும் மற்றவர்களை யெல்லாய் 'வருக' என வரவேற்று. இன்றும் அவர்களை நன்கு வாழவிடுகின்ருன், ஆனல் இந்தியாவின் பிற பகுதிகளிலோ உலக அரங்கிலோ இந்த வேறுபாட்டு உணர்வு மறையவில்லை என்பதை அன்ருட நிகழ்ச்சிகள் காட்டுகின்றன. இந்த எல்லைப் போராட்டம், தனி மனிதனுக்காயினும் சரி—வல்லரசு களுக்காயினும் சரி—என்று இல்லையோ அன்று தான் நாடும் உலகும் நாமும் வாழ்வோம். அதற்கு வழி காட்டக் கணியன் பூங்குன்றன் நேரில்தான் வரவேண்டும் போலும்! தாயுமானவர் மறுபடியும் தோன்றத்தான் வேண்டும் போலும்!

## 10. எல்லாரும் உவப்பது*

உலகில் எல்லாரும் உவக்கும் அல்லது விரும்பும் காரியத்தைச் செய்வது ஒருவராலும் இயலாது என அனைவரும் கூறுகின்றனர். ஒரு செயலைச் செய்தால் சிலர் மகிழ்வர்; சிலர் வெறுப்பர். ஆனால் எல்லாரும் உவக்கும் செயல் செய்தல் அரிதே. ஆயினும் அதற்கு ஒரு வழி கண்டுபிடித்தார் சங்ககாலப் புலவர் ஒருவர். நரிவெரூஉத்தலையார் என்ற அப்புலவர் அந்த எல்லாரும் உவக்கும் செயலைக் காட்டுகின்றார். அது மிக எளிதான வழிதான். என்றாலும் இன்று மக்கள் அச்செயலை மேற்கொள்ளத் தயங்குகின்றனர்.

மனிதன் தன் நிலைகெட்டு விலங்காகிக்கொண்டு வரும் நாகரிக நாள் இது. மனிதனுக்கு உரிய பண்பாடு அனைத்தும் ஏட்டிலே இருக்கும் அளவோடு நின்று விட்டன. மனிதருள் சிலர் மற்றவர் பெறும் துன்பங் கண்டு உளம் மகிழும் அளவிற்கு முன்னேறி விட்டார்கள் என்று சொல்லலாம். மனிதப்பிறவி பிற உயிர்கள் அனைத்திலும் மேம்பட்ட பிறவி என்பார்கள். அதற்குக் காரணம் அவன் நல்லதன் நலனும் தீயதன் தீமையையும் பகுத்தறிந்து 'தான் இன்புறுவது உலகின்புறக் கண்டு' வாழ்வாங்கு வாழ்கின்றான் என்பதே யாகும். ஆயினும், இன்றைய மனிதன் அந்த நிலையில் இல்லை. மேடைமேல் விண் முட்டப் பேசியும், ஏடுகளில் பக்கம் பக்கமாக அறநெறி பற்றி எழுதியும் வாழும் மனித சமுதாயம், வாழும் வாழ்க்கையில் எவ்வளவு முறை வழுக்கி வீழ்கிறது! காரணம் உள்ளத்துள்ளேயே மனிதப் பண்பாடு மறைந்

---

* மலேயா மலர்

ததேயாகும். அதனால் தான் நாட்டில் மாறுபாடும் பொறுமையும், சண்டையும்—ஏன்? பெரும் போர்களும் உண்டாகின்றன. இவையெல்லாம் எப்போது நீங்கும்?

மனிதன் அல்லதைச் செய்யாது நல்லதைச் செய்தால் கொடுமை நீங்கலாம். ஆனால் அது எல்லோராலும் இன்று இயல்வதாகக் காணோம். அதனால்தான் அச்சங்க காலப் புலவர் உலக மக்களை நல்லது செய்யுங்கள் என்று கூற நினைத்து—அது முடியாதது என்று கண்டு—மற்றொரு வழியைக் காட்டுகின்றார். நல்லது செய்வதால் ஒருவனுக்கு ஒருவேளை அல்லல், பணிமிகுதியால் தொல்லை, இன்ன பிற ஏற்படலாம்; ஆனால் ஒன்றும் செய்யவேண்டாம் என்றால் அமைதியாக இருக்கலாமன்றோ! அதைத்தான் நரிவெரூஉத்தலையார் சொல்லுகிறார். 'உங்களுக்கு நல்லது செய்ய முடியாவிட்டாலும் கவலையில்லை; நீங்கள் செய்யவே வேண்டாம்; ஆனும் மற்றொன்றை மேற்கொள்ளுங்கள். ஆம். அதுதான் 'கெட்டதையாவது செய்யாதிருத்தல்' மற்றவருக்குத் தீங்கு செய்யாதிருத்தல் வேண்டும் என்கின்றார் அவர். இது இன்றைய மனித சமுதாயம் மேற்கொள்ள வேண்டிய செந்நெறி. நாட்டில் நலம் செய்பவரினும். அவலம் செய்பவர்களே அதிகமாக உள்ளார்கள். அவர்தம் அவலச் செயல் நீங்கினாலே நாட்டிலும் உலகிலும் பல நல்லவை நிகழும். நல்லது செய்துதான் உயிர்களை வாழவைக்க முடியும் என்பதில்லை. கொடுமையாளர் அல்லல் இழைக்காதிருப்பின் அதன் வழியே உலகில் எத்தனையோ தொல்லைகள் நீங்கும். அத்தகைய அல்லல் ஆற்று நல்லவராகவாவது மக்கள் வாழவேண்டும் என்பது அவர் ஆசை. அச்செயல் அம்மக்களுக்கும் நாட்டுக்கும் நல்லதாவதோடு, அவர்களுக்கும் நற்பெயர் தந்து வாழவைக்கும். அதுவே எல்லாருக்கும் உவப்பையும் அளிக்கும். அதில் யாரும் தொல்லையுற வேண்டியதில்லை. இச்செயலை மேற்

கொள்வது கடினமுமில்லை. ஆனால் மனம்தான் வேண்டும். மனித சமுதாயம் அந்தச் சங்கப் புலவர்தம் சொல்லை மனதில் வைத்து வாழின் வளம் கொழிக்கும். வைக்குமா? இதோ அவர் வாக்கையே உங்கள்முன் வைத்து விடை பெறுகின்றேன்.

பல்சான் றீரே பல்சான் றீரே
... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ...
நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஒப்புமின்; அதுதான்
எல்லாரும் உவப்பது அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமா றதுவே.

(புறம். 195)

## 11. ஒரு சொல் கேளீர்*

உலகம் உய்யத் தோன்றிய கவிஞர்கள் எத்தனையோ வகையில் பாட்டிசைத்துச் சென்றுள்ளார்கள். நாடு வாழவும், நாநிலம் வாழவும், மக்கட் சமுதாயம் தழைக்கவும் அவர்கள் காட்டிய வழிகள் பலப்பல. அவற்றையெல்லாம் எண்ணி, அவற்றின் வழி நடப்பின் உலகில் துன்பமே காண முடியாது. ஆனால் நடந்தால்தானே!

பாரதி உலக மக்களை நோக்கியும், பரந்த பாரத நாட்டு மக்களை நோக்கியும், தமிழ் மக்களை நோக்கியும் பலப்பல அறிவுரைகளை அள்ளி வீசுகிறான். அவன் நாட்டுப்பாடல்களைப் போற்றி. நாடு விடுதலை கண்டது. எனினும் அவன் விரும்பிய பொருளாதார விடுதலை, சமூக விடுதலை போன்றவை இன்னும் கனவாகவே உள்ளன, கனவை நனவாக்க வேண்டுவது நன்மக்கள் கடன்.

பாரதி, தமிழ்ச் சமுதாயத்தை—தமிழ்ச் சாதியை நோக்கியும் சில வேண்டுகோள் விடுக்கின்றான். 'சாதி மதங்களைப் பாரோம்' என முழக்கிய பாரதிதான் தமிழ் மக்களைத் தமிழ்ச்சாதி எனக் காட்டுகின்றான். அந்தச் சாதிப் பகுப்பால் ஒற்றுமையே விளையும் என்பதை அவன் உணர்வான், தமிழ் வளர, தமிழன் வாழ, தமிழ் நாடு தழைக்கப் பாடுபடும் - எண்ணும் - எழுதும் - அத்தனை பேரையும் அவர்வழி வாழும் தமிழ்ச்சமுதாயத்தையும், 'தமிழ்ச் சாதி' யாக்குகிறான், அத்தமிழ் மக்களை நோக்கிப் பலப்பல அறிவுரைகள் சொல்லுகிறான், அவை அனைத்தும் தமிழர் செவியில் ஏறியிருக்குமா? எப்படி இருக்கும்? இருந்தால், வள்ளுவர்

---

*பம்பாய் கலைவிழா மலர்

குறள் வாழும் நாட்டில்—சங்கப் புலவர் அறமுணர்த்திய நாட்டில்—மூவேந்தர் முறை திறம்பாது ஆண்ட நாட்டில், இன்றும் வாழும் பிணக்குகளுக்கு இடம் உண்டோ? இல்லையே! இதை எண்ணிய பாரதி, 'பல சொல்லிப் பயனில்லை. ஒரு சொல் கேளீர்' எனச் சுருக்கமாகத் தமிழ் மக்களுக்குச் சேதி சொல்லுகிறான். அதுதான்,

> **சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்**
> **தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!**

என்பது. ஆம்! தமிழ்ச் சமுதாயம் தழைக்க வேண்டுமானால், தலை நிமிர்ந்து வாழவேண்டுமானால், தமிழ்மொழி தரணியில் உள்ள ஊர்தோறும்—தெருவெல்லாம் செழிக்கத் தான் வேண்டும்.

தமிழ் செழிக்கிறது. உலக அரங்கில் தமிழுக்கு இடமுண்டு. வள்ளுவர் குறளும், கம்பன் மொழியும் பல மொழிகளில் பெயர்க்கப் பெறுகின்றன. எனினும் இன்னும் உலக மக்கள் தமிழின் இனிமையையும் தொன்மையையும் நன்கு உணரவில்லை என்பதை உலக நிகழ்ச்சிகள் காட்டு கின்றன. எனவே தமிழராகிய அனைவரும் பாரதியின் ஒரு சொல்லைக் கேட்கத்தான் வேண்டும். இன்று கேளாது வாளா யிருப்போமானால், பின் என்றும் தமிழ்ச் சமுதாயம் தலைதூக்க வழியில்லை: பிறநாட்டாரெல்லாம் தமிழின் தொன்மையையும், அதிலுள்ள நிலைமையையும் காண அவாவுகின்றனர். தமிழர் அவற்றையெல்லாம் பிற மொழி களில் விளக்கி எழுதி, உலகுக்கு அன்னை தமிழை அறிமுகப் படுத்த வேண்டும். பாரதி காட்டிய பல உண்மைகளை உலகுக்கு உணர்த்த வேண்டும். வெளி நாட்டோர் வணக்கம் செய்யத்தக்க நல்ல கலைப்பெட்டகங்கள் தமிழில் உள்ளன. தமிழர் அவன் ஒரு சொல்வழி-தாம் சேம முற-தம் நாடும் மொழியும் சேம முற, தமிழை உலகமெலகம் பரவும் வகை செய்தல் வேண்டும்.

பம்பாய் பாரதி கலா மன்றத்தார் அத்துறையில் ஆவன செய்து அன்னைத் தமிழை உலக அரங்கில் உயர்த்தப் பாடுபடுவாராக! வாழ்க அவர் தொண்டு!

பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
 தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
 தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
 சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமைஎனில் வெளிநாட்டோர்
 அதை வணக்கம் செய்தல் வேண்டும்

(பாரதி)

## 12. வள்ளுவர் காட்டிய காதல் நெறி*

உலகில் மிகப் பழங்காலந்தொட்டு உயிர்கள் தோன்றி வளர்ந்து வாழ்கின்றன. மனிதன் உலகில் தோன்றியும் பலப்பல ஆண்டுகள் கழிந்து விட்டன. தோன்றிய உயிர்கள் பலவும் அவ்வவற்றின் வாழ்க்கை முறைகளை வகுத்துக் கொண்டு, ஏதோ பிறந்ததற்கென வாழவேண்டும் என்ற ஒன்றற்காக, எப்படியோ வாழ்ந்து மறைகின்றன. துன்பத்தின் இடைப்பட்டும் இன்பத்தின் இடைப்பட்டும் தத்தம் வாழ்வை வளமாக்கும் மக்களே பலர். மனிதன் ஒழிந்த பிறவற்றிற்கு 'நாளை'யைப் பற்றிக் கவலை இல்லை என்பர் சிலர். ஒரு சிலவற்றின் வாழ்க்கை முறைகளைக் கண்டால் அவையும் 'நாளை'யைப் பற்றிக் கவலைப்படுவனவாகத் தெரியும். எப்படியாயினும் நாளையைப் பற்றிக் கவலையுறுகின்றவர்கள் பெரும்பாலும் தம் வாழ்வைப்பற்றியே கவலையுறுவர். ஒருசிலரே பிற உயிர்களைத் தம் உயிர்போல் ஒத்து நோக்கி, அவற்றின் வாழ்வையும் வருங்காலத்தையும் கணக்கிடுவர். சமுதாயம் ஒருசேர முன்னேறினால்தான் தனிமனிதன் முன்னேற முடியும் என்ற உண்மையை உணர்ந்தவர்கள் அவர்கள். அவ்வாறு உணர்ந்த நல்லவர்கள் உலகம் தீமையற்று நல்ல வழியில் முன்னேறச் சிறந்த வழிகளை வகுத்து, அவற்றை உலகமக்களுக்கு உணர்த்துவர். இப்படி உணர்த்தும் நல்லவர் உலகின் பல பாகங்களில் அவ்வப்போது தோன்றியுள்ளனர். அவருள்ளெல்லாம் தலைசிறந்தவர், தமிழ் நாட்டில் பிறந்து சாவாத அறநூலைச் செய்தவராகிய திருவள்ளுவராவர்.

---

* கல்கந்தா எழுத்தாளர் சங்க மலர்

திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். அவர் சாதி, சமய, நீதி, நிற, நாட்டு வேறு பாடுகளை எல்லாம் கடந்து வாழ்ந்தவர். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று உலகில் மனிதர் மட்டு மன்றிப் பிற எல்லா உயிர்களுமே சமம் என்ற உண்மையை நாட்டுக்கு உணர்த்தியவர் அவர். அவர் பாடிய பாடலே 'திருக்குறள்' என்பது. குறுகிய இரண்டு அடிப்பாடல் களாலே அவர் உலகம் என்றென்றைக்கும் தீமை அற்று நலம்பெற்று வாழும் வழிகளையெல்லாம் விளக்கிக் காட்டி இருக்கிறார். அவர் காட்டிய வழியில் உலகம் சென்றால், உலகில் என்றைக்குமே கொடுமை தலைக்காட்டாது. அப்படிக் காட்டினாலும் அக்கொடுமை வாழாது உடனே அழிந்துவிடும்.

திருக்குறள் 1330 குறட்பாக்களில் உலகம் வாழ வழி கண்டார். அவர் குறள் மூன்று பகுப்பாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவை அறம், பொருள், இன்பம் என்பன. இவை மூன்றும்தாம் உலகில் உள்ளன. இவையன்றி வேறு எது? வாழ்வில் பெறக்கடவன இவையே. அறநெறி பற்றி நின்று, அந்த அறவழியால் பொருளைப் பெருக்கி, அப்பொருளின் துணையால் கருத் தொருமித்த காதலாகிய இன்பவாழ்வில் வாழ்வதுதானே சிறந்தது. ஆம். இந்த மூன்று உண்மைகளையும் அவர் நன்றாகத் தெள்ளத் தெளியக் காட்டிவிட்டார். இவற்றுள் முதலில் உள்ள அறம், பொருள் இரண்டையும் தமிழ் நாட்டுப் பிற புலவர்களும் பிறநாட்டுப் புலவர்களும் ஓரளவு விளக்கியிருக்கிறார்கள். என்றாலும், அவர் கடைசி யாகக் காட்டியுள்ள இன்பவாழ்வை உலகில் யாரும்— எந்தப் புலவனும்—இதுவரை அவரைப்போல் காட்ட வில்லை. இனியும் காட்ட இயலாது என எண்ணுகிறேன். இத்தகைய காதல் வாழ்வைக் காட்டிய வள்ளுவரைப் பெற்ற தமிழ்நாடு சிறக்க என வாழ்த்துகிறேன்.

திருவள்ளுவர் காமத்துப்பாலில் 250 குறட்பாக்களை" 500 வரிகளை-பாடியுள்ளார். ஒவ்வொரு பாட்டும் மக்கள் உள்ளத்தை மகிழ்விப்பதாகும். ஒருவனும் ஒருத்தியும் உள்ளத்தால் மகிழ்வதே காமமாகும். காமம் தெய்வத் தன்மை பொருந்தியது. தமிழில் மட்டுமன்றிப் பிறமொழி களிலும் காமத்தைப்பற்றிப் பலர் எழுதியுள்ளார்கள். எனினும் வள்ளுவர் போன்று அதன் மென்மையையும் அதைப் பெற்றுத் துய்ப்பவரின் தன்மையையும் யாரும் விளக்கவில்லை. காமம் மலரைக் காட்டிலும் மென்மை யுடையது என்கிறார் அவர். ஆம்! மலர் கண்டால் இனிமை பயப்பது. தூரத்தே இருந்தாலும் மணம் வீசி மகிழ்விப்பது. தொட்டால் மென்மையாக நலம் பயப்பது. தானாக இயல்பாக மலர்வது, தூய்மை உடையது. ஆம்! காதலும் அத்தகையதே. தலைவன் தலைவியர் இருவரும் மாறா இன்பத்தை-கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புலன்களும் பெறும் இன்பத்தையே-காதல் வழியே பெறுகின்றனர். காமம் அம் மலரைக் காட்டிலும் மென்மை உடையது என்கிறார் வள்ளுவர். அத்தகைய மென்மை வாய்ந்த பொருளைக் கையாளுபவர் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும் அல்லவா? எத்தனையோ பேர் காதல், காமம் என்று கண்மூடி விழ்ந்து வாழ்வதாக எண்ணிக் கெடுவதைக் கண்டிருக்கிறார் வள்ளுவர். மலரின் மென்மைத்தன்மை அறிந்து அதைக் கசக்காமலும் வாடவிடாமலும் போற்றித் துய்த்தல் அறிவுடைமை, ஆம்! காமம் அதனினும் மென்மை உடையது. எனவே அக்காதல் வயப்பட்டு, அதன் நிலை கெடாது, அதனால் தம் இன்பத்தை வளர்ப்பவர் நாட்டில் மிகமிகச் சிலரே யாவர். உலகில் எங்கும் காமம் என்றும் காதல் என்றும் பேசப்படினும், அதனால் என்றும் மாறா இன்பம் பெறுபவர்

மிகச்சிலரே. இவற்றையெல்லாம் எண்ணித்தான் எண்ணித் திருவள்ளுவர்,

மலரினும் மெல்லிது காமம், சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார் (1289)

எனக் காட்டுகின்றார்.

இத்தகைய மென்மையான காமத்தின் தலை சிறக்கும் காதலர் வாழ்வைப் பல கோணங்களில் படம் பிடித்துக் காட்டுகின்றார் வள்ளுவர். இக்காலத்தில் 'கண்டதும் காமம்; உடனே விவாக ரத்து' என்று பேசப்படுவது போன்ற 'நாகரிகக் காமம்' வள்ளுவர் காணாதது. அவர் காட்டும் காமவாழ்வு வழிவழியாகப் பலப்பப் பிறவிகளில் தொடர்ந்து வருவது. வள்ளுவர் மறுபிறப்பில் நம்பிக்கை உள்ளவர். முன்னைப் பிறவிகளை எண்ணுபவர். எனவே இக்காதல் வாழ்வு திடீரென ஓரே பிறவியில் ஏற்பட்டு விட்டது என அவர் எண்ணவில்லை. இக் காமமாகிய கட்டு, பல பிறவிகளில் ஒருவரை ஒருவர் பற்றி வருவதாகக் காட்டுகின்றார். இதை மிக நுணுக்கமாக அவர் விளக்கும் திறன் போற்றற்குரியது.

ஒரு தலைவன் தலைவியின் உள்ளத்தை நிறைவித்து அவளுடன் கூடி மகிழ்கின்றான். அந்த மகிழ்ச்சியில் அவளைப் போற்றிப் பாராட்டுகின்றான். அவளை விட்டுப் பிரிய மனம் இல்லை அவனுக்கு. அவள், தான் மாறுபட்ட தாகக் கருதி ஒருவேளை புலத்தல் செய்வாளோ என அஞ்சுகிறது அவன் உள்ளம். எனவே, அவன் 'இந்தப் பிறவியில் நான் உன்னைப் பிரிய மாட்டேன்' என்கின்றான். உடனே 'அவள் அழுதாள்' எனக் குறிக்கின்றான். ஏன் அழுதாள்? 'அப்போது மறுமையில் பிரிந்து விடுவீர்களோ, என எண்ணுகிறது அவள் உள்ளம். ஆகவே ஒரு முறை காதல் வயத்தால் கலந்த இருவர் இந்தப் பிறவியில் மட்டுமின்றி எந்தப் பிறவியிலும் பிரியாது வாழவேண்டும் என்பது

வள்ளுவர் கருத்து. காதலைத் தெய்வத்தினும் மேலாக அவர் போற்றுவது இதனால் நன்கு விளங்குகிறதன்றோ. இதோ அவர் வாக்கு:

'இம்மைப் பிறப்பில் பிரியலன் என்றேனாக்
கண்நிறை நீர்கொண் டனள்' (1315)

இத்தகைய பண்பட்ட மாறாத காமமே வள்ளுவர் காட்டும் காமமாகும்' இதைத்தான் இந்த நூற்றாண்டில் வாழ்ந்த பாரதியார் கண்ணன் கண்ணம்மா காதல் பாட்டாக அமைத்து விளக்கிக் காட்டுகின்றார். காதல் வாழ்வு வழிவழியாகத் தொடர்ந்து வருவது என்பது வள்ளுவர் உள்ளக்கிடக்கை யன்றோ! அது பல பிறவிகளில் பலவகையில் தொடர்ந்து வரும். அன்பால் பிணிக்கப்பட்ட ஒருயிராக எத்தனை எத்தனையோ பிறவிகளில் சேர்ந்து வாழ்ந்த இருவர், மாறுபட்டுப் பிரிபவர் போன்று சிற்சில வேளைகளில் தெரியுமாயினும், பிறகு அவர்கள் பிணைந்தே விடுகின்றனர் என்பதையும் காட்டுகின்றார்.

கண்ணன் கண்ணம்மாவைப் பார்த்துப் பாடும் காதல் பாட்டின் ஒரு பகுதி இது:

'சாத்திரக் காரரிடம் கேட்டு வந்திட்டேன்—அவர்
சாத்திரம் சொல்வதை நினக் குரைப்பேன்
நேற்று முன்னாளின் வந்த உறவன்றடி—மிக
நெடும் பண்டைக் காலமுதல் நேர்ந்து வந்ததாம்
போற்றும் இராமனென முன்பு தித்தனை
பொன்மிதிலைக் கரசன் பூமடந்தை நான்
ஊற்றமு தென்ன உயர் வேய்ங் குழல் கொண்டாய்—
உலகம் நினக்கமையப் பார்ந்தன் அங்கு நான்.

முன்னம்மிகப் பழைமை இரணியன் நான்
மூர்க்கம் தவிர்க்க வந்த நரசிங்கன் நீ
பின்னொரு புத்ததென நீ வளர்ந்திட்டாய்
பெண்மை அசோதரை என்றுன்னை நண்ணினேன்.

சொன்னவர் சாத்திரத்தில் மிக வல்லர்காண்—அவர்
சொல்லில் பழுத்திருக்கக் காரணம் இல்லை
இன்னம் கடைசிவரை ஒட்டிருக்குமாம்—இதற்கு
எண்ணப்படுவதில்லை ஏடி கண்ணம்மா,

என்று கணவன் மனைவியர் காதல் வாழ்வு ஏதோ ஒரு பிறவியில் வந்து கனவாகக் கழியும் ஒன்று அன்று என்பதையும், அது முன்னர் உண்டான பல பிறவிகளிலும் பின் வரப்போகும் எல்லாப் பிறவிகளிலும் பின்னிப்பிணைந்து நிற்கும் ஒப்பற்ற தெய்வ நலம் சான்றதென்றும் விளக்குகின்றார் பாரதியார்.

இந்த வள்ளுவர் கருத்தை, அவர் காலத்தை அடுத்து வாழ்ந்தவரும், வள்ளுவரைப் 'பொய்யில் புலவன்' எனப் போற்றியவருமாகிய சாத்தனார் தம் மணிமேகலையில் நன்கு விளக்குகிறார். கலங்காத உள்ளமுடைய மணிமேகலை, உதயகுமரன் வாளால் வெட்டுண்டு வீழ்ந்த காலத்தில் கலங்கியபோது, கந்திற்பாவை கூறியதாகக் காட்டும் சொற்கள் இவ்வுண்மையை விளக்குவனவாகும்.

'நினக்கு இவன் மகனாத்தோன்றியதூஉம்
மனக்கினி யாற்கு நீ மகள் ஆயதூஉம்
பண்டும் பண்டும் பலபிறப்பு உளவால்
கண்ட பிறவியே அல்ல காரிகை' (21, 29-32)

என்று சாத்தனார் காட்டுகின்றார் என்றால், தமிழர், காதல் நலம் ஒரு பிறவிபால் முளைத்துக் கருகுவது அன்று என்றும். அது வழிவழிப் பிறவிகள்தோறும் பற்றும் என்றும் நன்கு உணர்ந்திருந்தார்கள் என்பது வெளிப்படை.

இத்தகைய இனிய காமத்தைச் சிலர் இன்று கள்ளொடு தொடர்பு படுத்திக் காட்டுகின்றனர். வள்ளுவரும் அன்று கள்ளையும் காமத்தையும் இணைத்துப் பார்க்கின்றார். தன்னை மறக்க வைத்தலில் இரண்டும் ஒன்றாகத் தோன்றினும், பலவற்றுள் காமம் மேம்பட்டது என்பது

அவர் கருத்து. கள் தன்னைக் குடித்தால்தான் மகிழச் செய்து மறக்க வைக்கும். ஆனால் காமமோ அவ்வாறன்று; கண்டாலே மகிழச் செய்து தம்மை மறக்க வைப்பது. மற்றும் முன்னைய காதல் நிகழ்ச்சிகளை எண்ணி எண்ணி மகிழ்தலும், உற்ற காதலரைக் கண்டு மகிழ்தலும், காமத்துக்கு உண்டு எனவும், அச்செயல்கள் கள்ளுக்குக் கிடையாதெனவும் வள்ளுவர். விளக்குவது எண்ணி எண்ணி மகிழத்தக்கதன்றே! 'உண்ணற்க கள்ளை'யென வெறுத்து ஒதுக்கிய வள்ளுவனார், அக் கள்ளொடு தொடர்பு படுத்திக் காமத்தை அதனினும் மேலானதாகக் காட்டி, அதன் வழி மக்களை வாழச் செய்கிறார் என்றால், காமத்தோடுகள் தொடர்புபடுத்திக் காட்டப் பட்டாலும், காமம் வெறுக்கப்படாது வேண்டப்படுவது என்பதை அறிய மகிழவேண்டியுள்ளது. மயக்கும் தொழிலுக்குக் கள் உவமையாக்கப்படினும், அதிலும் காதலே வெற்றி பெறுகின்றது என அவர் காட்டத் தவறவில்லை. அவர் பாடல்கள் இவை:

**'உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம் போல்**
**கண்டார் மகிழ்செய்தல் இன்று'** (1090)

**'உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்**
**கள்ளுக்கில் காமத்துக் குண்டு'** (1281)

இக் காதல், உள்ளத்து அரும்பி மெள்ள மெள்ள மலருவதாகும். முதலில் காணும் தலைவனும் தலைவியும் தத்தம் உள்ளக் கருத்தை எப்படி ஒருவருக்கொருவர் உணர்த்துவார்கள்? பலரிடையில் பேசமுடியுமா? முடியாது. பலரிடையில் இக்காதலர் முன்பின் அறியாதவர் போலவே நடிப்பார்கள் என்கிறார் வள்ளுவர்.

**'ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்**
**காதலார் கண்ணே உள'** (1099)

என்பது குறள்.

இவ்வாறு பிறர் காணப் பொது நோக்கு நோக்கும் காதலர் இருவர் எவ்வாறு தம் உள்ளக் கருத்தை ஒருவருக் கொருவர் காட்டிக் கொள்வர் என்பதையும் வள்ளுவர் நன்கு விளக்குகின்றூர். இருவரும் ஒருவரை ஒருவர் தம்மைப் பிறர் காணுவிடத்துக் கண்டு கொள்வார்கள். அவர்தம் கண்கள் வாய்பேசாத எத்தனையோ கதைகளைப் பேசிக் கொள்ளுமாம். வாய்ச் சொற்களுக்கு அங்கே இடமே இல்லையாம்.

**‘ கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்**
**என்ன பயனும் இல ’ (1100)**

என்று வள்ளுவர் அவர்தம் கண்கள் பேசும் பேச்சுக்களை விளக்குகின்றனர். அவர்தம் காதலை அவர்கள் உணர்ந்து கொள்ளும் பார்வைக் குறிப்பை,

**‘ யான்நோக்கும் காலை நிலம்நோக்கும் நோக்காக்கால்**
**தான்நோக்கி மெல்ல நகும் ’ (1094)**

எனத் தலைவன் வாக்காலேயே கூறுகின்றூர்.

எனவே வள்ளுவர் காட்டும் காதல் வெறும் புறத் தோற்றத்தால் மட்டும் அமைவதன்று என்பதும், அது உள்ள நெகிழ்வே என்பதும், அந்த நெகிழ்வும் பண்டு தொட்டுப் பல்வேறு பிறவிகளில் பற்றி வந்ததே என்பதும் நன்கு விளங்கும். இனி இவ்வாறு உள்ளத்தால் ஒன்றிய காதலர் கூடலையும் ஊடலையும் பிரிவையும் வள்ளுவர் எவ்வளவு நுண்ணிதாக ஆராய்ந்து அறிந்து உலகுக்கு உணர்த்துகின்றூர் என்பதைக் கண்டு அமைவோம்.

‘இன்பம் இன்ன வகைத்து’ எனப் பிறருக்கு எடுத்துக் காட்ட இயலாது என்பதனாலேயே அகப் பொருள் என அது பெயர்பெற்றது என்பர் அறிஞர். வள்ளுவர் அந்த இன்ப நிலையை நுணுகி நுணுகி உணர்ந்து உற்று அறிந்து ஓரளவு உணர்த்தவும் செய்கின்றூர் என்றால், அவர்தம்

அறிவின் திறம் வியக்கற்பாலதன்றோ! பல உவமைகள் வாயிலாகவும், உற்ற அனுபவ வாயிலாகவும் தலைவன் தலைவியர் வாக்கில் அந்தக் கூடல் இன்பத்தையும், ஊடல் வழி உற்றுப் பிறக்கும் உள்ள நெகிழ்ச்சியையும் பிரிதலாற்றா உள்ள நிலையையும். அவர் எண்ணி உணர்த்தும் போது நாம் நம்மை மறக்கத்தான் வேண்டும் ஆம்! இந்தக் காமத்துப்பாலைப் பயிலும் போது நாமே அக் காதலராகிவிடுகின்றோம். மகிழ்ச்சியில் மகிழ்கின்றோம். புலத்தலில் புலக்கிறோம். ஊடலில் ஊடுகிறோம்-இரங்கலில் இரங்குகிறோம். ஆம், வள்ளுவர் நம்மை அவராக்கிப் பின் அந்தக் காதல் பாத்திரங்களாகவே ஆக்கிவிடுகிறார். அவர் வாய்மொழி வழியே இந்த உண்மையைக் கண்டு அமைவோம்.

தலைவியொடு கூடி மகிழும் இன்பத்தை எண்ணி எண்ணிப் பார்க்கிறான் தலைவன். அவளைச் சேர்ந்திருக்குங் கால் பெறும் இன்பமும் பிரியுங்கால் பெறுந் துன்பமும் அவனைப் பேசவைக்கின்றன. தன் மனைவியொடு கூடிப் பெறும் இன்பத்துக்குப் பேரின்ப மோட்ச வீடும் சமமாகாது என்கின்றான் அவன். தலைவியைக் கூடக் கூடக் காணும் புதுப்புது இன்பநிலை அறிய அறிய அறியாமையே விரியும் உலக அறிவியலைப் போன்று பெருகிக் கொண்டே போகின்றது என்கின்றான். நெருப்பு நெருங்கினால் சுடும். விலகினால் தண்ணென்றிருக்கும்; ஆனால், அவளிடம் உள்ள காமத் தீ அருகில் தண்ணென்றும் விலகினால் சுட்டும் நிற்கிறது எனப் பாராட்டுகின்றான். இப்படி இவனுடைய பாராட்டு விரிந்துகொண்டே செல்கிறது. வள்ளுவர் வாய்மொழியைத் தருகின்றேன்.

**' தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்**
**தாமரைக் கண்ணான் உலகு '** (1103) என்றும்,

**' அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்**
**செறிதோறும் சேயிழை மாட்டு '** (1110) என்றும்,

**'நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்**
**தீயாண்டுப் பெற்றாள் இவள்'** (1104) என்றும்.

நன்கு தலைவியால் பெறும் இன்பத்தையும், பிரிந்தால் உறும் துன்பத்தையும் உவமைகள் வாயிலாக விளக்கு கின்றார்.

இவை போன்றே தலைவன் அருமையைத் தலைவி பாராட்டுவதும் அறிந்து இன்புறத்தக்கது. ஒருவரை ஒருவர் கண்ட பிறகு இருவரும் மாறி மாறி ஒவ்வொருவர் உள் ளத்தும் இடம்பெற்று விட்டனர். எனவே அவர்கள் உள் ளம் காதலர் வாழும் உள்ளமாகி விட்டது. இந்த உள்ளத் தில் வெம்மை படலாமா? வெப்பம் காதலருக்குத் துன்பம் உண்டாக்கு மல்லவா! எனவே காதலி தான் வெம்மையான பொருள்களை உண்ண மாட்டாமையைக் குறித்து விளக்குகிறாள். தான் வெம்மையான பொருளை உண்டால், அதனால் உள்ளத்து நிலைத்து வாழும் காத லருக்கு ஏதம் வரும் என அஞ்சும் நிலை காதலியின் உயரிய பண்பாட்டை எண்ணத் தூண்டுகிற தன்றோ!

**நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்**
**அஞ்சுதும் வேபாக்(கு) அறிந்து** (1128)

என்று வள்ளுவர் அத்தலைவியின் கருத்தை அழகுபட எடுத்துக் காட்டுகின்றார்.

இதே நிலையில் தம் கணவரைப் பிரிந்த தலைவியர் நிலையை வள்ளுவர் நன்கு விளக்கி, அவர்கள் எங்கே பிரிந்திருந்தாலும் இடையறாது நினைக்கின்ற நிலையிலே வாழ்கின்றவர் என்பதையும் காட்டுகின்றார். இரவுப் பொழுதில் கணவனை எண்ணி எண்ணி ஏங்கும் பெண்கள் தாம் உறங்காது வாடும் நிலையையும், உலகெலாம் உறங்கும் நிலையையும், அதுகாலை இரவே தமக்குத் துணை யாகும் பான்மையையும்,

'மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்துஇரா
என்அல்லது இல்லை துணை' (1168)

என்று எடுத்துக் காட்டுகின்றார்.

தலைவி, தலைவனைப் பிரிந்தாலும் அன்றிக் கூடினாலும் உறங்காமலேயே உள்ளாள் என்பதை மற்றொரு குறளால் வள்ளுவர் காட்டுகின்றார். தலைவன் வரவில்லையானால் 'வரவில்லையே' என்று எண்ணி எண்ணி ஏங்கும் நிலையில் உறக்கம் வரவில்லை. வந்த பிறகோ அவனைக் கண்டு கண்டு காதற் கதைகள் பேசிப் பேசி உறக்கத்தை ஓட்டுகிறாள். எனவே என்றும் உண்மைக் காதலி உறங்காள் என்ற பண்பை,

'வராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண்' (1179) எனக்காட்டுகின்றார்.

காதல், உள்ளத்து எப்போதும் நீங்கா நிலையில் நிலைத்து நிற்கும் ஒன்று என்றாலும், அது இரவில் ஆட்சி புரிவது என்பதை யாவரும் அறிவர். இந்த உண்மையை வள்ளுவர் பல குறட்பாக்களால் விளக்குகின்றார். ஒன்று சிறந்ததாக நாம் காட்டுவோம். காதல் நோய் மாலை மலருவது. மாலை மலர்ந்து இரவெல்லாம் மணம் வீசி உரியவர்களை மகிழவைப்பது. அம் மலர் காலையில் அரும்புவிட்டு, பகலில் போதாக இருந்து, மாலையில் மலருவதாகும். இதனால் மாலைக் காலத்தோ இரவுக் காலத்தோ வருந்தி மற்ற வேளைகளில் தலைவரை மறப்பவர் அல்லர் பெண்கள். காதல் இன்பம் உள்ளத்தே ஊடுருவி நிற்பது. மாலை இரவு போன்ற இனிய காதல் நலம் தரும் வேளைகளில் புறத்தே தெரியக் கூடியது. இந்த உண்மைகளையெல்லாம் உள்ளடக்கி,

'காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும் இந் நோய்' (1227)

என்கிறார் வள்ளுவர்.

இவ்வாறு இரவில் ஆட்சிபுரியும் காமநோய் கூடி இருக்கும் தலைவரை ஒன்றும் செய்யாது. அவர்தம் மகிழ்ச்சிக்கு எல்லை இல்லையே! என்றாலும் பிரிந்து நிற்ப வரைப் பல வழிகளில் இரவு அல்லல் படுத்தும். பிரிந்த தலைவரை எண்ணி எண்ணி வாடும் மங்கையர் உறங்க மாட்டார்கள் எனக் கண்டோமல்லவா! ஒரு வேளை உறக்கம் வருமானால், அதிலும் தம் காதல்நோய் பற்றியே கனவு காண்பார்கள். விழித்தால் அக்கனவு நீங்கிவிடு மல்லவா! எனவே தலைவனைக் காணாது நனவில் கவலு வார்கள். ஆகவே சில பெண்கள் கனவையே விரும்பு வதும் உண்டு. கனவிலே தம் தோள்மேல் துஞ்சம் காதலர் நனவில் நெஞ்சத்தே ஆட்சி புரிவாரல்லவா! இதையும் எண்ணிப் பார்க்கிறாள் ஒரு பெண். இங்கே காணும் இரு குறள்களும் கனவின் சிறப்பையும் அதன் ஏற்றத்தையும் காட்டுகின்றன.

**'நனவுஎன ஒன்றுஇல்லை யாயின் கனவினால்**
**காதலர் நீங்கலர் மன்'** (1216)

**'துஞ்சுங்கால் தோள் மேலராகி விழிக்குங்கால்**
**நெஞ்சத்த ராவர் விரைந்து'** (1216)

இக் குறள் பாக்களினாலெல்லாம் அறிவன யாவை? காதல் அல்லது காமத்தால் பின்னப்பட்டார் இருவர் எக் காரணத்தாலும் எக்காலத்திலும் எத்தனை பிறவி எடுத் தாலும் பிரியாது, உள்ளத்தால் உடன் உறைந்து மற வாது வாழ்க்கை நடத்தும் மண்பினர் என்பதும், அவர் வழியே கற்பு நலம் நாட்டில் சிறந்து நிற்கின்றது என்பதும் தேற்ற மன்றோ!

இனி, இவ்வாறு உள்ளத்தால் ஒன்றிய காதலர் தம் முன் சிறு சிறு வேறுபாடுகள் காரணமாக மாறுபாடு கொண்டுப் பிணங்கி ஊடுவது உண்டு என்பதும், அவ் வூடலே பின் அவர்தம் கூட லுக்குக் காரணமாக நின்று

அவருக்கு நிலைத்த இன்பத்தைத் தருவது என்பதும் வள்ளுவர் காட்டும் இன்பப் பகுதியின் நுணுக்கங்களாகும்.

பிரியக் கூடாத தலைவியைப் பல காரணங்களால் தலைவன் பிரிந்து விடுகின்றான். 'பிரிய மாட்டேன்' என்று சத்தியம் செய்து கொடுத்த தலைவனின் பிரிவு தலைவியை வாட்டுகின்றது. அவன் கொடுமையை எண்ணி நைகிறாள் அவள். எனினும் அவள் நெஞ்சம் தலைவன்பால் செல்லுகிறது. ஆனால் பேதைப் பெண், வேறு வழியாக நினைக்கிறாள். தன்னை விட்டுப் பிரிந்த தலைவன் தன்னை அடியோடு மறந்துவிட்டதாகக் கருதுகிறாள்; அவன் நெஞ்சமும் மறந்திருக்குமென நினைக்கிறாள். ஆகவே அவள் தன் நெஞ்சைப் பார்த்து,

> ' அவர்நெஞ்சு அவர்க்காதல் கண்டும் என்நெஞ்சே
> நீ எமக்கு ஆகாதது ?' (1291)

எனக் கேட்கின்றாள். மற்றும் அவள் நெஞ்சு அவன் பின்னால் செல்வதற்கு இரங்குகிறாள். அதைப் பேதை என்றும் பழிக்கிறாள்.

> ' பரிந்தவர் நல்கார்என் றேங்கிப் பிரிந்தவர்
> பின் செல்வாய், பேதை என் நெஞ்சு (1248)

என்பது குறள்.

பின் அவள் உள்ளம் திரும்புகிறது. எண்ணம் சிறக்கிறது. பிரிந்த காதலர் திரும்புவார் என்ற உணர்வு உண்டாகிறது. ஏன்? அவர், தன் உள்ளத்திலேயே குடி கொண்டவர் என்ற உணர்வும் பிறக்கிறது. அதனால் அன்றே அவள் வெம்மையை உண்ணவும் அஞ்சினாள். எனவே உள்ளத்திலிருப்பவரை விட்டு ஓடும் நெஞ்சை அழைத்து அவள் கூறும் உரை சிறந்தது.

> ' உள்ளத்தார் காத லவராக உள்ளிநீ
> யார்உழை சேறிஎன் நெஞ்சு ' (1249)

எனப் பிரிந்த கணவரைப் பரிந்து ஏற்கும் உள்ளத்தை அவள் காட்டி, உள்ளம் ஆற்றியிருக்கவேண்டிய அமை வையும் காட்டுகிறுர் வள்ளுவர்.

இவையனைத்தும் காதலின் மென்மைத் தன்மையை யும், அதைத் துய்த்து அதன் வழி இன்பம் பெறுவார் நிலைமையும் நன்கு காட்டுகின்றன வன்றே!

இறுதியாக வள்ளுவர் காட்டும் ஊடலையும் கண்டு நாமும் அமைவோம். இடையில் விட்டுப் பிரிந்த தலைவன் வரும் காலத்தில் தலைவி உண்மையில் மகிழ்வாள். எனி னும் அவனிடம் பொய்யாக மாறுபட்டுக் காய்வாள். தன்னை அவன் விட்டுப் பிரிந்தது தக்கதன்று எனத் தன் செயல் மூலம் காட்டுவாள். எனினும் அந்த ஊடல் அல்லது சிறு மாறுபாட்டு நிகழ்ச்சி நீட்டிக்கக்கூடாது என எச்சரிக்கை செய்கின்றுர் வள்ளுவர். உண்மையில் நீட்டிக்கவும் முடியாது. 'என்று காண்போம்' என ஏங்கிய தலைவியின் உள்ளமும், எச் செயல் புரியினும் தலைவியை மறவாத தலைவனின் நெஞ்சமும் எப்படிக் கண்டபின் கட்டி மகிழாமல் பிரிய நினைக்க முடியும்? எனினும் உள்ளத்துச் சிறு ஊடல் தோன்றின் அந்த மகிழ்வு இன்னும் சிறக்கும் அல்லவா! அந்த மகிழ்ச்சி எல்லையற்றது. எனினும் இடை யில் தோன்றும் சிறு புலவி நீட்டித்தலாகாது என்கின்றுர் வள்ளுவர். அது அமைய வேண்டிய எல்லைக்கு அவர் காட்டும் உவமை சிறந்த வொன்றாகும்.

நமது உணவுக்கு உப்பு அவசியம். உப்பில்லாப் பண்டம் குப்பையிலே தான் கொட்டப்படுகின்றது. உப்பை அளவு அறிந்து சேர்க்கவேண்டும். அது குறைந் தாலும் பண்டம் கெடும்; மிகுந்தாலும் அப்படியே. எனவே அளவறிந்து அதைச் சேர்க்க வேண்டும். காதல் இடையில் கையாளவேண்டிய புலவியும் அத்தகையதே. காதலருக்கு இடையில் புலவி இல்லையாயினும் கூடல்

இன்பம் குறையும்: புலவி நீளினும் இன்பம் கெடும். இந்த உண்மையை வள்ளுவர்.

'உப்பமைந் தற்றால் புலவி, அது சிறிது (1032)
மிக்கற்றால் நீள விடல்'

என்கின்றார்.

இப்புலவி இல்லையாயின் காமம்-கனியை ஒத்த காமம்-அழுகிய பழமாகவோ அன்றிப் பயனற்ற பிஞ்சாகவோ கெட்டுவிடும் என்பதை மற்றோர் உவமையினாலே வள்ளுவர் நன்றாக விளக்குகிறார்.

'துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று' (1306)

இவ்வாறு புலக்கும் நிலை தலைவியர் மாட்டே உண்டு எனக் காட்டுகின்றார் வள்ளுவர். இன்றைய உலகத்திலும் இவ்வுண்மையைக் காண முடியுமன்றோ! ஆடவரைக் காட்டிலும் பெண்கள்தாம் ஊடும் நிலையில் ஊடிக் கணவரிடம் தம் கருத்து முற்றுப் பெற வழி செய்து கொள்ளுகின்றனர்- இதைப் புலவி நுணுக்கம் என்னும் அதிகாரத்தால் வள்ளுவர் காட்டுகின்றார். ஒவ்வொரு குறளும் சிறந்த வகையில் அமைந்துள்ளது. தலைவனுடைய ஒவ்வொரு சொல்லிலும் குற்றங் காண்கிறாள் தலைவி; ஒவ்வொரு செயலிலும் குற்றங்காண்கின்றாள் அவள். இவற்றால் தலைவன் தன்னைவிட்டுப் பிரிந்து சென்ற நிலையைக் குத்திக் காட்டுகின்றாள் தலைவி அவை எல்லாம் எண்ணி எண்ணிப் பார்க்கின்ற தலைவன் தான் இனிப் பிரியாது கூடி வாழ்வதாக வாக்களித்து அவளுடன் கூடி மகிழ்ந்திருப்பான் அல்லனோ!

இந்தப் புலவியின் பாங்கில் அமைந்த ஒரு குறளைத் தான் முதலிலே கண்டோம். பிரிந்த தலைவன் இனி இப் பிறவியில் மட்டுமன்றி எப்பிறவியிலும் பிரியலாகாது எனக்கருதிய தலைவி கண் கலங்கினாள் அல்லவா!

அவள் உள்ளத்தின் பல கோணங்களைப் பலவகையில் காட்டுகின்றார் வள்ளுவர்.

தலைவன் தலைவியிடம் 'உன்னை நினைத்தேன்' என்றானும். ஆனால் அதற்குத் தலைவி கண்ணீர் வடித்தாளாம். ஏன்? இதன் வழி வள்ளுவர் நல்ல உளப்பண்பைக் காட்டுகின்றார். ஒருவரை இடையில் மறந்தால் தானே நினைக்கத் தோன்றும். இடைவிடாது உள்ளத்தில் இடம் பெற்ற ஒருவரை மறத்தல் எங்கே? பின் நினைப்பதுதான் எங்கே? தலைவன் உளத்தில் தலைவி நிலைத்திருப்பின் அவன் நினைத்தேன் என்பானா? எனவே தலைவி கலங்குகிறாள்.

'உள்ளினேன் என்றேன் மற் றென்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்' (1316)

என்பது குறள்.

இதை அறிந்த தலைவன், உலகில் தான் வேறு யாரையும் விரும்பவில்லை எனவும் யாரும் அவளுக்கு மேலாக அவன் உள்ளத்தில் இடம்பெறவில்லை எனவும் கூறி, அவளை மாற்ற முயன்றான். ஆனால் அதிலும் அவன் வெற்றி பெறவில்லை, யாரினும் என்றதால் தலைவனுக்குத் தன்னைப்போய் பலர் உளர் என்றும் அவருள் எல்லாம் தன்னைப் போற்றுகின்றான் என்றும் பொருள் கொண்டு, அப்படிக் கூறிய 'பிறர் யார்?' என்ற வினா எழுப்பி, அப் பிறரோடு சென்றது தக்கதோ எனப் புலக்கின்றாள் தலைவி.

'யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று (1314)

என்பது குறள்.

இதனால் தலைவியும் தலைவனும் ஒருவருக் கொருவராகவே ஒருவரை ஒருவர் பற்றி வாழ்த்தலே சிறந்தது என்ற உண்மையையும் வள்ளுவர் காட்டியுள்ளார். இவ்வாறே

லொவ்வொரு குறளினும் புலவி நுணுக்கம் போற்றப் படுகிறது.

இப்புலவி நீட்டிக்கலகா தல்லவா! எனவே அடுத்த அதிகாரத்திலேயே அப்பிரிந்த இருவரைச் சேர்த்து வைத்து, அவர்களைத் தனியாக இருக்கவிட்டுத் தாம் அங்கிருந்து விடுதலைப் பெற்று விடுகின்றார் வள்ளுவர். எனினும், அப்படிப் புறப்படுமுன் அவ்வூடலும் கூடலும் அவ்விருவர்தம் உள்ளத்தை என்னென்ன பாடுகள் படுத்துகின்றன என்பதையெல்லாம் நுணுகி ஆராய்ந்து காட்டிய விடுதலை பெறுகின்றார்.

தோன்றிய காலத்தில் துன்பம் தரினும், ஊடல் முடிவில் எல்லையில்லாத இன்பம் தருவதாகும். எனவே ஊடல் அந்தக் கூடல் இன்பத்தின் அளவைப் பெருக்கு கின்றது. உலகில் நீரும் நிலனும் கூடியன போன்று அவ்வாறு கலந்த உள்ளத்தவராகிய தலைவன் தலைவியர் ஊடுவதிலும் வேறு தெய்வ உலகவாழ்வே கிடையாது என்கிறார் வள்ளுவர். அவ்வழி, கூடலுக்கு ஏற்றம் தருவது உடலேயாகும்,

**‘ ஊடலில் தோன்றும் சிறுதுனி நல்அளி**
**வாடினும் பாடு பெறும்’** (1323)

என்றும்,

**புலத்தலில் புத்தேள்நாடு உண்டோ? நிலத்தொடு**
**நீர் இயைந் தன்னார் அகத்து’** (1322)

என்றும் அவர் காட்டுகிறார்.

இவ்வாறு ஊடிப்பெறும் இன்பம் பெரிது என்பதை வள்ளுவர் இன்னும் பலவழிகளில் காட்டுகின்றார். ஊடு பவள் பெரும்பாலும் தலைவி; அவள் ஊடலை நீக்குபவன் தலைவனே. ஊடலில் யார் தோற்றாலும் தோற்றவர் வெற்றி பெற்றவரே என்றும், அவ்வெற்றி பின் நிகழும் கூடலிலே காணமுடியும் என்றும் கூறுகின்றார் வள்ளுவர்.

அந்த இன்பத்தை, பெற்ற அவ்விருவரல்லாது யாரே கூற வல்லார்? எனவே, வள்ளுவர் அவர்தம் ஊடலும் கூடலும் இயைந்த இராப்பொழுதை, அவர்தம் வாயாலேயே 'நீடுக' என வாழ்த்தித் தாமும் அவர்களிடம் இருந்து விடை பெறுகின்றனர்.

'ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலில் காணப் பெறும்' (317)

என்றும்,

'ஊடுக மன்னோ ஒளிஇழை; யாம் இரப்ப
நீடுக மன்னோ இரா' (1319)

என்றும் கூறி,

இறுதியாக,

'ஊடுதல் காமத்துக்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்' (1330)

என்று காட்டி, அவர்தம் இன்ப வாழ்வில் அவரைவிட்டுத் தம் குறளையே முடித்துக் கொள்கிறார் வள்ளுவர். இதுவே 'வள்ளுவர் காட்டிய காம வாழ்வு.' அவர் காட்டிய 250 குறட்பாக்களில் நான் ஒருசிலவே எடுத்துக்காட்டினேன். இவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெரு நூலை அமைக்க உதவும். இன்னும் பிற குறட்பாக்களும் உயரிய நலம் பயப்பன. அவற்றையெல்லாம் வாய்ப்பு உள்ளவர் தனித்தனியாகப் பயின்று மகிழ்வார்களாக!

இவ்வாறு காதல் என்பது உள்ளத்து உணர்வாக அமைவது என்பதும், அது ஒத்த பண்பும் நலமும் பிற நல்லியல்புகளும் பொருந்திய ஒருவன் ஒருத்தி மாட்டுத் தோன்றுவதென்பதும், அவ்வாறு தோன்றுவது திடீரெனத் தோன்றி மறைவது அன்று என்பதும், அக்காதல் பிறவிதோறும் தொன்றுதொட்டு அடுத்து என்றும் வற்றாது வளர்ந்து வருவது என்பதும், அவ்வாறு உள்ளத்தால் ஒன்றியவர் யாராலும் என்றும் பிரிக்க முடியாத பெரு

வாழ்வு வாழ்வார்களென்பதும், உடலால் பிரிய நேரினும் உள்ளம் ஒன்றியே வாழ்வர் என்பதும், இருவரும் மாறிப் புக்கு ஒருவர் இதயத்தே மற்றவர் புகுந்து வாழ்தலே சாகாக் காதல் வாழ்வு என்பதும், அந்த வாழ்வில் மாறு பாட்டுக்கு இடமின்றேனும், இல்லாததை உண்டென்பது போல் ஆக்கித் தாமாகவே சிறிதளவு மாறுபடுதலும் அதன்வழிப் புலத்தலும் பின் நிகழும் கூடலைச் சிறப்பிக்கும் தன்மையன என்பதும், அந்தப் புலவியின் எல்லையிலே காணும் கூடல் வாழ்விலே அவர்கள் என்றென்றும் தம்மை மறந்து வாழ்வார்கள் என்பதும் வள்ளுவர் காட்டிய காதல் பாதையாகும். ஆம்! அவ்வாறு தம்மை மறந்து, இன்பத் தில் திளைத்த காதலர் மற்றவர் வழியில் சென்று அவர்களைத் துன்பத்துக் காளாக்காமல் வையத்தை வாழவிட்டுத் தாமும் வாழ்பவராவர்- அவர் வழி வையம் தழைக்கும். இந்த வளமார் மெய்க்காதல் வாழ்வை உலகுக்கு விளக்கிக் காட்டிய வள்ளுவர் புகழ் 'வாழ்க' என வாழ்த்தி நாமும் அமைவோம்!

வாழ்க வள்ளுவர்! வளர்க வளஞ்சால் காதல்!

# 13. வடமொழி - ஆரியம் சமஸ்கிருதம்*

இன்று தமிழ் நாட்டில் வடமொழி, ஆரியம், சமஸ்கிருதம் என்ற மூன்றும், தமிழல்லாத-தமிழில் வந்து வழங்கும் ஒரு வேற்று மொழியைக் குறிக்கும் சொற்களாக வழங்கப் பெறுகின்றன. சமஸ்கிருதம் என்பது இந்த நாட்டின் பழங்கால மொழியாக இந்தியா முழுவதும் கொள்ளப் படுகிறது. என்றாலும் அம்மொழியும் அம் மொழிக்குரிய மக்களும் பரந்த இந்திய நாட்டு எல்லைக்கு வெளியே இருந்து உள்ளே வந்தவர்கள் என்றும். அக்காலம் இன்றைக்கு 3,500 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கும் என்றும் வரலாற்று ஆய்வாளர் கூறுகின்றனர். அவர் தம் மொழிக்கு அவ்வாறு வந்த அக்காலத்தில் தமிழிலோ பிற இந்திய மொழிகளிலோ என்ன பெயர் இட்டனர் என்பது திட்டமாக கூற இயலவில்லை.

ஒரு நாள் என் மதிப்பிற்குரிய நண்பர் ஒருவர் வழியில் வரும்போது இம்மூன்று சொற்களும் ஒரே பொருளைக் குறிக்கின்றனவா எனக்கேட்டார். அப்போதுதான் அவை பற்றி எண்ணிப்பார்க்க வேண்டும் என்ற உணர்வு தோன்றிற்று, ஆய்ந்து பார்ப்பின், இம்மூன்றும் மூன்று வகையில் பொருள் தரத்தக்கன என்றும், சமஸ்கிருதம் என்ற மொழியைப் பிற இரண்டும் குறிப்பன அல்ல என்றும் எண்ண வேண்டி வரும் இக் கருத்தை மக்கள் முன் வைக்கின்றேன். அறிஞர்கள் முடிவு கூறட்டும்.

வடசொல் என்பது தொல்காப்பியத்திலேயே கூறப் படுகிறது. எச்ச இயலில் சொற்களைப் பாகுபடுத்தும்

---

*தென்றல் பொங்கல் மலர்-சனவரி 1960

ஆசிரியர் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வட சொல் என்று நால்வகைச் சொற்களைக் குறிக்கின்றார். இங்கே 'வடசொல்'லுக்கு உரை கூற வந்தவர்கள் வட சொல் என்பது ஆரியச் சொற்போலும் சொல் என்றும், (இளம்பூரணர்) ஆரியச்சொல் (நச்சினார்க்கினியர்) என்றும் காட்டுவர். யாரும் 'சமஸ்கிருதம்' என்று குறிக்கவில்லை. மற்றும், உரையாசிரியர்கள் காலத்தில் ஆரியச் சொல்லும் வடசொல்லும் ஒன்றாகக் கருதப்பட்டனவென்பது தெளி வாயினும், இளம்பூரணர் வழி, வடசொல் ஆரியச்சொல் போன்ற தமிழ்ச் சொல்லையே குறிக்கும் எனக் கொள்ளல் வேண்டும். இனி இந்த எச்ச இயல் ஐந்தாம் சூத்திரம் வடசொல் பற்றியே வருவது.

'வடசொற் கிளவி
வடவெழுத தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த
சொல்லா கும்மே'

என்பது அது. அதற்கு உரையாசிரியர்கள் பலவகையில் விளக்கம் தருகின்றனர். 'வடசொற் கிளவி' என்று. சொல்லப்படுவது ஆரியத்திற்கே உரிய எழுத்தினை ஓரீஇ இரு திறத்தார்க்கும் பொதுவாய எழுத்தினை உறுப்பாக உடையவாகும் சொல் என்றவாறு' என்பர் இடம்பூரணர். நச்சினார்க்கினியரும் சேனாவரையரும் இதே பொருள் காட்டுவர். தெய்வச்சிலையார் வடமொழிச் (பிராகிருதம்) சொற்களையும் சேர்ப்பார். எனினும், அச்சொற்கள் வழங் கும் முறை கண்டு 'வடசொல்லுள்ளும் பெயரல்லது செய்யுட்கு உறுப்பாய் வாரா' எனச் சேனாவரையரும், 'திசைச் சொல்லும் வட சொல்லும் பெருப்பாலும் பெயர்ப் பெயராயும் சிறுபான்மைத் தொழிற் பெயராயும் வருத லின்றி ஏனைய வாரா' என நச்சினார்க்கினியரும் உரை கூறுவர். அனைவரும் இதற்குக் குங்குமம், நற்குணம், காரணம், காரியம் போன்ற சொற்களைக் காட்டுவர்.

எனவே உரையாசிரியர்கள் காலத்தே வடசொல் என்பது ஆரியச் சொல் எனப் பெயர்பெற்றது. அதுவே பின் சமஸ்கிருதமாகக் காட்டப்பெறுவது என விளங்கும். எனினும் 'ஆரியச் சொல் போலும் சொல்' என்ற இளம்பூரணர் உரையையும் பிராகிருதத்தைச் சேர்த்த தெய்வச்சிலையார் உரையையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

உரையாசிரியர்கள் காலம் பிற்காலச் சோழர் காலம். அக்காலத்தில் தமிழ் நாட்டில் சமஸ்கிருத மொழிக்கு ஏற்றம் உண்டாயிற்று என வரலாறு காட்டுகின்றது. எனவே அக்காலத்தில் வாழ்ந்த உரையாசிரியர்கள் அவர் தம் காலத்தை ஒட்டி அவ்வாறே உரை எழுதி மேற்கோள் காட்டிச் சென்றார்கள். எனினும், சிந்திப்பின் ஓர் உண்மை புலப்படும் என்பது உறுதி.

வடமொழி என்பது தமிழ்ச்சொல்; தமிழகத்துக்கு வடக்கே உள்ள ஒரு மொழியை இது குறிக்கும் எனலாம். தமிழ்நாட்டு வடஎல்லை சங்க காலத்திற்கு முன்பிருந்தே வேங்கடமாக அமைந்துள்ளதை நாமறிவோம். சங்க இலக்கியங்களிலே,

பனிபடு சோலை
  வேங்கடத்து உம்பர்
மொழிபெயர் தேயம் (அகம் 211) என்றும்

'தமிழ் கெழு மூவர் காக்கும்
  மொழிபெயர் தேஎத்த
பன்மலை இறந்தே (அகம் 31) என்றும்.

'குல்லைக்கண்ணி
  வடுகர் முனையது
வல்வேற் கட்டி
  நன்னாட்டு உம்பர்
மொழி பெயர்
  தேஎத்த ராயினும்' (குறுந் 11) என்றும்.

வேங்கடத்து அப்பால் வடுகர் நாடு தொடங்கிப் பலமொழி பேசியவர் வாழ்ந்தனர் என அறிகிறோம். தெலுங்கு மொழி பேசியவரையே, தமிழர் 'வடுகர்' என அழைத்து வந்தனர். 'வடுகன் தமிழறியான் வைக்கோலைக் கசுவென்பான்' என்ற ஒரு வேடிக்கைப் பழமொழி நாட்டில் வழங்குகின்றது. அவ்வடுகர் வேங்கடத்துக்கு அடுத்த ஆந்திர நாட்டில் வாழ்ந்தவர்களாவார்கள். தமிழ்நாட்டு வட எல்லையில் வாழ்ந்தவரை வடுகர் என்றும், மொழியை வடமொழி என்றும் தமிழர் அழைத்திருக்க வேண்டும். தொல்காப்பியர் காலத்திலேயும் வடவேங்கடம் வடக்கு எல்லையாய் இருந்தமையின் அவர் கூறும் வடமொழியும் இவ்வடுகர் பேசிய மொழியைத்தான் குறிக்கும் என்பது கொள்ளத்தக்கதாகும். தமக்கு அடுத்து அண்மையில் இருக்கும் மொழிபற்றியும் அது தமிழில் வந்து வழங்கும் வழக்குப் பற்றியும் ஒன்றும் கூறாது, எங்கோ ஆயிரம் கல்லுக்கு அப்பாலுள்ள மொழி வழங்குவது பற்றி இலக்கணம் கூறினர் என்றால் பொருந்தாது. உரையாசிரியர்களெல்லாம் அவர் காலத்தில் சமஸ்கிருதம் தமிழில் வழங்கியதறிந்ததும் காலச் சூழலுக்கு உட்பட்டும் அவ்வாறு உரை எழுதினார்கள் என்று கொள்ளுவதே பொருத்தமானதாகும். மற்றும் தமிழில் வடுக மொழியாகிய தெலுங்கு மொழிச் சொற்கள் அதிகமாகப் பயின்று வந்தமையாலும், திராவிட மொழிக் குடும்பத்துள்ளே தமிழொடு அதிகத்தொடர்பு கொண்டமையானும் 'வடசொல்' என்று பிற சொற்களினின்றும் அதைத் தனியாகப் பிரித்துக் கூற வேண்டியதாயிற்று.

நிற்க, வடமொழி சமஸ்கிருதத்தைத்தான் குறிப்பதாயின் அது வழங்கிய நாடு மிக வடக்கே இருந்தது. அந்த ஆர்யவர்த்ததிற்கும் தமிழ் நாட்டுக்கும் இடையில் ஆயிரம் கல் தூரத்துக்குமேல் உள்ளது. இரண்டுக்கும்

இடையில் தெலுங்கு போன்ற பல மொழிகள் வழக்கில் உள்ளன. அவை எல்லாம் சமஸ்கிருதத்தை எப்பெயரால் அழைத்தன? 'வடமொழி' என்று ஒவ்வொன்றும் அதைக் கூறியிருக்கிறதா? இல்லை என்பர் மொழி ஆராய்ச்சியாளர்கள். எனவே தொல்காப்பியத்தில் வரும் 'வட மொழி' சமஸ்கிருதத்தைக் குறிக்காது என்றும், தமிழ் நாட்டு வட எல்லையில் வழங்கிய பழந் தெலுங்கையே அது குறிக்கும் என்றும் கொள்வதுவே சிறந்ததாகும்.

இனி, ஆரியம் என்ற சொல்லைக் காண்போம். சமஸ்கிருதத்திலேயே 'ஆரியம்' என்பது அம்மொழியைக் குறிக்கவில்லை என்பர் அம்மொழியில் புலமை உடைய அறிஞர்கள், தமிழிலும் ஆரியம் என்ற சொல் காலத்தால் பிந்தியே வழங்குகின்றது. வட நாட்டிலிருந்து வந்தவரை ஆரியர் என்றும் அவர் மொழியை ஆரியமொழி என்றும் பிற்காலத்தில் கொண்டனர். எனினும் தமிழில் 'ஆரியம்' என்ற சொல்லுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்கள் உள்ளன. ஆரியன் என்ற சொல்லுக்குப் பெரியோன், ஐயன், அறிவுடையோன், ஆரிய வர்த்த வாசி, உபாத்தியாயன் எனப் பற்பல பொருள்கள் உள்ளன. ஆரியப்பாவை என்ற தமிழ்க் கூத்து நாட்டில் பண்டைநாளில் வழக்கத்தில் இருந்தது. ஆரியம் என்றால் கேழ்வரகு என்ற ஒரு பொருளும் உண்டு. ஆரிய வாசியம் என்பது ஓமத்துக்குப் பெயர். இப்படி மனிதரில் உயர்ந்தவரையும், உணவுப் பொருளில் உயர்ந்ததையும், மருந்துப் பொருளில் உயர்ந்ததையும் 'ஆரிய' என்ற சொல்லாலே வழங்கினர் எனக் காணலாம். ஆரியன் என்றால் மிலேச்சன் என்ற பொருளும் உண்டு. என்றாலும் பெரும்பாலான பொருள்களை நோக்கினால் 'ஆரிய' என்ற சொல் உயர்வைக் குறிக்க வரும் சொல்லலாகவே இருப்பதை அறிகின்றோம். தமிழ் இலக்கியத்தில் வடக்கே உள்ள ஆரிய

ரைக் குறிக்க 'வட வாரியர்' என்ற சொல்லே எடுத் தாளல் காணப்படுகின்றது. எனவே 'வட வாரியர்' என்ற சொல் வேண்டுமாயின் ஆரியவர்த்தத்தில் சமஸ்கிருதம் பேசிய மக்களைக் குறிக்கும் எனக் கொள்ளலாம். மற்றும் தமிழ் நாட்டில் வடமொழி பேசி, வேதத்தை வாழ வைக்க வும், அதை நிந்திப்பவரை தாக்கிப் பேசவுமே பிறந்த வராகத் தம்மைக் கூறிக் கொள்ளும் திருஞான சம்பந்தரை வட நாட்டவர் ஆரியர் என்றே கொள்வ தில்லை. சங்கராச்சாரியார் அவரைத் 'திராவிட சிசு' என்றே குறித்ததாகக் கூறுவர். எனவே வேதத்தைக் கொண்டுள்ள சமஸ்கிருதத்தை 'ஆரிய மொழி' யென அவர்களே கொள்ளவில்லை எனத் தெரிகின்றது. திருநாவுக்கரசர் 'ஆரியமும் தீந்தமிழும் ஆயினான்' என்று கூறுவதும் சமஸ்கிருதத்தை அன்று எனலாம். ஆரிய மொழி என்றால் கிரந்த மொழி என்ற பொருளும் உண்டு. சமஸ்கிருத நூல்களிலே எங்கும் அம்மொழியைக் குறிக்கும் பெயர் ஆரியம் என்று காட்டப் பெறவில்லை என்பது அம் மொழியுணர்ந்த புலவர் துணிவு. எனவே தமிழில் வழங் கும் 'ஆரியம்' என்ற சொல் சமஸ்கிருதமல்லாத வேறு ஒன்றைக் குறிப்பதாகவே கொள்ள வேண்டும்.

ஆரியம் என்ற சொல்லுக்கு அழகு என்ற பொருளும் உண்டு. எனவே அழகிய ஒன்றை ஆரியம் எனக் கொள்ளல் பொருந்தும். அரியவற்றையும் ஆரியமாகக் கண்டனர். மக்களுள் கிடைத்தற்கரியராய் ஒழுக்க சீல ராய் விரதம் முதலியன மேற்கொண்டவராக உள்ளவாய் வாழ்ந்த அறிவர் ஆரியராயினர். இவர் சமஸ்கிருதம் பயின்றவரின் வேறு என்றும், அவருள் அறிவர், தாபதர் போன்ற பிரிவுகள் உள வென்றும், இலக்கணத்தால் அறிகி றோம். எனவே அரிய என்ற சொல்லில் இருந்து ஆரியம் என்ற சொல் பிறந்து, பண்பால் உயர்ந்த, குணநலத்தால்

சிறந்த உயர்ந்த பெரியோரையும், அழகையும், பிற உடலுக்கும் உயிருக்கும் நலம் தரும் பொருள்களையும் குறித்தது எனலாம். ஒருவேளை வடவாரியார் தென்னாட்டுக்கு வந்தபோது இரு சொற்களையும் இணைத்து ஒன்ருக்கி விட்டார்களோ என்று கொள்ள இடம் உண்டாகிறது. எனவே தமிழில் வழங்கும் ஆரியர், ஆரியம் என்ற சொற்கள் தமிழில் உள்ள 'அரிய' என்ற சொல்லின் அடிப்படையில் தோன்றி உயர்ந்தவரையும் உயர்பொருளையும் குறிப்பன என்று கொள்ளல் வேண்டும். தமிழில் தொல்காப்பியர் கால முதற் கொண்டே-ஏன்-அதற்கு முன் இருந்துங்கூட அறிவர், தாபதர் போன்ற நல்உணர்வாளர் இருந்தார்கள் என அறிகிருேம். அவர்கள் 'பொன்னே கொடுத்தும் புணர்வற்கு அரியராய் இருந்ததோடு' அவ்வப்போது மக்களுக்கு அறம் உணர்த்தும் ஒழுக்க சீலராய் விளங்கினுர்கள் எனவும் காண்கிருேம். அவர்கள் வாழ்வு சற்றுத் தனிப்பட்ட முறையில் அமைந்து, தனி இடத்திலிருந்து எண்ணும் பண்பாட்டில் தலைசிறந்ததாக விளக்கியிருக்கும் என்பதைத் தொல்காப்பியம் முதலியவற்ருல் அறிகின்ருேம். எனவே தமிழ் நாட்டு அரியராகிய அறிவரே 'ஆரியர்' எனப்பட்டார் என்பது பொருந்தும். இந்த ஆரியர் மிகப் பழங்காலந்தொட்டு-வடநாட்டு ஆரியர் சிந்துவெளிக்கு வருவதற்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே - தமிழ் நாட்டிலும் தமிழ் வழங்கிய பரந்த இந்தியப் பெருநிலத்திலும் வாழ்ந்தவராதல் வேண்டும்.

இனி, பின் இந்திய நாட்டுக்கு வாழ்வு வேண்டி வந்தவர்களாகிய ஓர் இனத்தாரும் தம்மை ஆரியரென்று கூறிக் கொண்டிருப்பதில் தவறில்லை. அவர்கள் எதனுல் அப் பெயரிட்டு அழைத்துக் கொண்டார்கள் என்பதை இன்று நம்மால் காண இயலாது. எனினும் அவர்களைத்

தமிழர்கள் பிரித்தே, 'வட வாரியர்' எனவே வழங்கி வந்தார்கள் என்பதை இலக்கியங்கள் எடுத்துக் காட்டு கின்றன. இன்று இந்தியர் என்று பெயரிலே இருநாடு களில் - ஒன்றிற் கொன்று எவ்வகையிலும் தொடர்பில் லாத இருநாடுகளில் - வாழ்பவரை உலகம் குறிப்பதைக் காண்கின்றோம். எனினும் அமெரிக்கா நாட்டை ஒட்டி வாழ்பவர்களைச் 'செவ்விந்தியர்' எனப் பிரித்திருப்பதையும் காண்கின்றோம். இது போன்றே தமிழ் நாட்டு அரியராக வாழ்ந்த ஆரியரும் வடவாரியரும் பெயரளவில் ஒன்று பட்டாலும் பிற அனைத்திலும் வேறுபட்டவராவார்கள். அந்த வட வாரியர் மொழியை அவர்கள் வேண்டுமாயின் ஆரியம் எனக் கொள்ளலாம். எனினும் நான் மேலே காட்டியபடி அவர்களே தம் சமஸ்கிருதத்துக்கு ஆரிய மொழி என்று பெயரிட்டதாகக் காணமுடியவில்லை. எனவே தமிழ் இலக்கண இலக்கியங்களில் வரும் வடமொழி, ஆரியம் என்பன இன்றைய 'சமஸ்கிருதத்'தினும் வேறுபட்டவை என்பதும், வடமொழி தமிழ்நாட்டு எல்லையில் வடக்கே-பக்கத்திலேயே - வழங்கியதாக இருக்க வேண்டும் என்ப தும், ஆரியம் தமிழ் நாட்டிலேயே ஒழுக்க நெறியில் உயர்ந்த அரியர் வழங்கிய குழுக்குறி மொழியாகவோ அன்றி வேறு வகையாகவோ இருக்க வேண்டும் என்பதும், இம்மொழியையும் பின் வடக்கிலிருந்து வந்த சமஸ்கிருதத் தையும் 'ஆரிய மொழி' என்ற பெயரால் ஒற்றுமைப் படுத்தி இருக்கவேண்டும் என்பதும் விளங்குகின்றன. தமிழ் நாட்டில் அழகின் அடியாகப் பிறந்த 'முருகு' என்னும் முருகனையும் புராணக் கடவுளாகிய கந்தனையும் ஒருவராக்கி வழிபடும் வரலாறு நாடறிந்ததே. இவற்றைப் பற்றியெல்லாம் நன்கு ஆராய்ந்து வரலாறு, மொழி, கலை ஆகியவைபற்றி ஆராயும் வல்லவர்கள் உண்மையை உலகுக்கு எடுத்துக் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமைகின்றேன்.

## 14. உள்ளும் புறமும்*

என் வீட்டில் எப்பொழுதும் குருவிகள் பறந்து கொண்டேயிருக்கும். ஒரு சில சமயங்களில் சில குருவிகள் என் மேஜையின் மேல் உட்காருவதும் உண்டு. சுவர்களில் மாட்டியிருக்கும் தொங்கு படங்களின் பின் அவை தம் மாளிகைகளாகிய கூடுகள் உள்ளன. அவைகள் குடும்பம் நடத்தும் வழியே தனி. 'பண்பாடு, பண்பாடு' என்று கூப்பாடு போடும் மனிதன் அதைப் பற்றிக் கொண்டு வாழவில்லை என்றாலும் அவன் வாழும் வீட்டுக்குள் கூட்டை அமைத்துக் கொண்ட இந்தக் குருவிகள் அப் பண்பாட்டை விடாது பிடித்துக் கொண்டிருக்கின்றன; ஆணும் பெண்ணும் இணைபிரியாது கலந்து வாழ்கின்றன. முட்டையிட்டுக் குஞ்சு பொறித்து அக்குஞ்சு வளரும் வரையில் காக்கும் பண்பு அக்குருவிகளிடம் நன்கு அமைகின்றது. அவை, தம்மைப் பார்த்தாவது இந்த மனிதன் பண்பாட்டைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில்தானோ ஏனோ அவன் கண்முன்னே அவன் வீட்டிலேயே வாழ்ந்து வருகின்றன. அந்த இணைபிரியா ஆணும் பெண்ணும் வாழும் வாழ்வு மக்களுக்கு எடுத்துக் காட்டு. அவைகளுக்கு உள்ளம் இல்லை என்று யார் சொல்ல முடியும்? அவற்றின் நெஞ்சின் தூய்மை நிலையை யாரே அறுதியிட வல்லார்?

இவ்வாறு ஒருவரோடு ஒருவர் கலந்து பழகும் மனித இனம் அந்தப் பண்பாட்டைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றே அவை தம்முன் உள்ளங் கலந்து வாழ்கின்றன. ஆம், அதுதான் பண்பாடு. அக் குருவிகளுக்கு உள்ளும்

*முல்லை (ஏப்ரல் '60) இதழில் வந்தது.

புறமும் ஒன்ருகவே உள்ளன. 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும்' நாகரிகம் அக்குருவிகளுக்கு என்றும் தெரியவே வழியில்லை. எல்லாவற்றிலும் உயர்ந்தவன் என்று தன்னைக் கூறிக்கொள்ளும் இந்த மனிதனே 'பண்பாடு' என்று பேசியும் எழுதியும் காட்டிவிட்டு, தன் தனி வாழ்வில் அதைக் குழிதோண்டிப் புதைத்துவிடுகிருன். பண்பாடு உதட்டால் வருவதன்று; உள்ளத்தில் முகிழ்ப்பது.

உள்ளும் புறமும் ஒத்து வாழ்வதே பண்பாடு ஆகும். மனிதனுக்கு உள் புறம் என்ற இரண்டும் தனித்தனித் தொழிற்படுகின்றன. உள்ள நிகழ்ச்சியைப் பிறர் அறிந்து கொள்ள முடியாது. ஆனல் புறநிகழ்ச்சி அனைவரும் அறிந்துகொள்ளத் தக்கது. பிறர் அறிந்துகொள்ள முடியாது என்பதற்காக இன்றைய மனிதன் அகத்தைப் புறத்தினும் வேருக நன்கு மாற்றப் பழகிக் கொண்டான். மனிதனுக்கு உள்ளத்து உண்டான உணர்வே பின் சொல்லாகவும் செயலாகவும் புறத்தே தொழிற்படும். எனவே எல்லாப் புற நிகழ்ச்சிகளுக்கும் உள்ளமே அடிப்படை. என்ருலும், இன்றைய உலகில் பலர் உள்ளத்தை மறைத்தே உதட்டை அசைத்தும் உடலை அசைத்தும் புறத் தொழில் புரிகின்றனர். இது மனிதப் பண்பாட்டிற்கே மாறுபட்டது.

தமிழில் இந்த மூன்றும் ஒத்து இயங்கவேண்டும் எனக் குறிக்கவே மூன்றிடத்தும் 'மெய்' வேண்டும் என அறிஞர் அறுதியிட்டனர். 'உள்மெய், வாய்மெய், மெய்மெய்' என்ற மூன்றே உண்மை, வாய்மை, மெய்ம்மையாயின என்பது தேற்றம். எனவே, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் கயமை மனித உணர்வுக்கு அப்பாற்பட்டதாகும். இதைத்தான் சேர்ந்து வாழும் அந்தக் குருவி இனம் மனிதன் பக்கத்தில் இருந்துகொண்டே உணர்த்துகின்றது.

மனிதன் குருவி போன்ற பிற பறவை விலங்குகளி லும் மேம்பட்டவன். அவை ஒன்றோடு ஒன்று பழகினால் தான் பற்றிக்கொண்டு வாழ முற்படுகின்றன. மனிதனோ நேர்முகப் பழக்கம் இன்றேனும், உள்ளத்தால் கலந்து வாழக் கற்றவன். இதைத்தான் திருவள்ளுவர்,

**' புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான்**
**நட்பாம் கிழமை தரும் '**

என எடுத்துக் காட்டினார்.

மனிதனுக்குப் பிற உயிர்களுக்கு இல்லாத உள் ளுணர்வு ஒன்று உண்டல்லவா! அதனால் அவன் பிறரிடம் நன்கு பழக முடியும். மற்றவரோடு நன்கு பழகுவதை **'உளங் கலந்து பழகுதல்'** அல்லது **'மனம் விட்டுப் பழகுதல்'** என்பர். இதன் கருத்தென்ன? நட்பு வெறும் புறத் தோற்றத்திற்காக அல்லாது உள்ளத்து நிறைவுக் காகவே அமைய வேண்டும் என்பதாம். ஆனால் இன்று மனித இனத்தில் எத்தனை பேர் இந்த 'உணர்ச்சி நட்பிலே' வாழ்கின்றனர்? இதனாலன்றோ வள்ளுவர் போன்ற அறிஞர்கள்.

**' தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும் '**

**' கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன**
**வினைபடு பாலாற் கொளல் '**

என்பன போன்ற நீதிகளைச் சொல்லவேண்டிய தேவை உண்டாயிற்று. மனிதன் இந்த நிலையில் வாழ்வோனே யானால், உலகம் என்று முன்னேற்றப் பாதையில் செல்லும் என எண்ணி வாடுவர் நல்லவர்.

இவ்வுணர்ச்சியே—உள்ளத்தால் ஒருவரை ஒருவர் உற்று அறியும் செயலே—மக்கள் வாழ்வுக்கு இன்றி யமையாத ஒன்று என்பதைத் தமிழர் நெடுங்காலத்துக்கு முன்னமே கண்டு வாழ்ந்தார்கள். தமிழர் தம் சமுதாய வாழ்வு பண்பட்ட வாழ்வாகவே இருந்தது. அங்கொன்

றும் இங்கொன்றுமாகச் சில கொடுமைகள் பழந்தமிழ் மக்கள் வாழ்வில் காணப்படினும், பொதுவாக அவர்தம் சமுதாய வாழ்க்கை செம்மை நெறியிலே சென்றுகொண்டிருந்தது. அவர்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாது, உள்ளும் புறமும் ஒத்த உணர்விலேயே சிறந்து வாழ்ந்தார்கள் என்பதைப் பல சங்க கால இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. சங்க இலக்கியங்களுள் புறப்பற்றிய சிறந்த இலக்கியம் புறநானூறு என்பது நாடறிந்ததே. அதில் இத்தகைய நல்லுணர்வாளர் பலர் முன் கொண்டு வந்து காட்டப்படுபெறுகின்றனர். நாட்டு வாழ்க்கையையும் வீட்டு வாழ்க்கையையும் அங்கே ஒன்றியதாகவே காணமுடிகின்றது. ஒரு சில இடங்களில் அவர்தம் உணர்ச்சி உயர்ந்த மனிதப் பண்பின் எல்லையினையும் தாண்டி மேலோங்கி நிற்கின்றது. அவற்றில் ஒன்றிரண்டு கண்டு அமைவோம்.

> **'புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்**
> **நட்பாம் கிழமை தரும்'**

என்ற குறளுக்கு எடுத்துக் காட்டாகப் பரிமேலழகர் கோப்பெருஞ் சோழனையும் பிசிராந்தையாரையும் காட்டுகிறார். அவர்கள் பற்றி நாடு நன்கறிந்துள்ளது. முன்பின் காணாத பிசிராந்தையாரிடம் உணர்ச்சியால் பழகிய கோப்பெருஞ் சோழன், தான் வடக்கிருக்கும் காலத்தில் தவறாது அவர் வருவார் என நினைத்துப் பேசியதும், அப்படியே அவர் வந்து சேர்ந்ததும் நாடறிந்த வரலாறேயாகும். ஆகவே அதுபற்றி நாம் இங்குப் பேச வேண்டா. உள்ளும் புறமும் ஒத்தவர்கள் எப்படி உணர்ச்சி ஒத்துப் பழகினார்கள் என்பதையும், ஒருவர் நினைத்தபடி மற்றவர் வந்தார் என்பதையும் பலர் நாட்டுக்கு நன்கு காட்டியுள்ளனர். கோப்பெருஞ் சோழன் பிசிராந்தையாரைக் குறிக்கும் காலை,

'செல்வக் காலை நிற்பினும்,
அல்லற் காலை நில்லான் மன்னே'

என்று கூறி, வாழ்வில் இன்றேனும் தாழ்வில் உற்றவர் வருவார்கள் என்ற உண்மையை விளக்கினான்.

நான் இங்கே காட்ட விழைந்தது அவர்தம் ஒருமை உணர்வினையேயாம்; உள்ளும் புறமும் ஒத்த ஒன்றையே யாம். இருவரும் உணர்ச்சியால் ஒத்த பிறகு அவர்தம் உள்ளும் புறமும் ஒத்ததாகவே அமைவதைக் காணல் வேண்டும். பிசிராந்தையாரை முன்பின் நேரில் கண்டறியாது போயினும் உணர்ச்சியால் உற்றறிந்த சோழன் அவரைப் பற்றி மற்றவர்களுக்கு அறிவுறுத்திய ஒன்றே அவர்தம் இருமை உணர்வை இல்லையாக்குவதாகும். கலந்து பழகிய பின்பு இருவரில் எந்த வேற்றுமையைக் காட்டமுடியும்? 'அவனே நான், நானே அவன்' என்று 'கண் இரண்டும் ஒன்றையே காணும்' நிலைபெற்றபின், வேறு பாட்டுக்கு இடம் எங்கே? இங்கே சோழன் தனக்கும் புலவருக்கும் வேறுபாடு கண்டான் இல்லை. இந்த உண்மையைச் சோழன் தன் வாக்காலேயே காட்டுகிறான்.

'தன்பெயர் சிறக்கும் காலை, 'என் பெயர்
பேதைச் சோழன்' என்னும் சிறந்த
காதற்கிழமை உடையன், அதன்தலை
இன்னதோர் காலை நில்லலன்
இன்னே வருவன் ஒழிக்க அவர்க்கு இடமே.'

(புறம் 216)

என்று சோழன் கூறுவதால் நாம் உயர்ந்த பண்பாட்டினை உணர முடிகின்றதன்றோ! தன் பெயரைச் சோழன் பெயராகவே கொண்டு தமக்குள் வேறுபாடு காணாத அன்புரிமை உடைய புலவர் அச்சோழன் துன்புறுங்காலை வாராதிருப்பாரோ! வந்து உடன் வடக்கிருந்தாரன்றோ!

இருவர் உளம்விட்டுப் பழகுதலைக் 'காதற் கிழமை' எனல் மரபு. அது, கால வழக்கில் ஆண், பெண் உள மாற்றத்துக்கு அமைந்த ஒன்றாகிவிட்டது. எனினும் 'காதல்' பழங்காலத்து எந்த உள்ளங்களும் கலந்த நிகழ்ச்சிக்கும் அமைந்த பொதுப்பெயராகவே இருந்தது. அந்தச் 'செம்புலப் பெயல்நீர்போல'க் கலந்த உள்ளங்கள் காணும் இன்பமே காதல் இன்பம். அந்த இன்ப நிலையில் 'நீ வேறு, நான் வேறு, என்ற வேறுபாடு தோன்றுமோ? இந்த உண்மையைத்தான் கோப்பெருஞ்சோழன் அவ்வாறு அழகுபடக் காட்டுகின்றான்.

இது நாடறிந்த வரலாறு. எனினும், இதனினும் சிறந்த காதற்கிழமை பொருந்திய வரலாறு இதே புறநானூற்றில் இடம்பெற்றுள்ளது. இன்று நான் காட்ட விழைந்தது அதையேயாகும். புறநானூற்றில் ஒரு சில புலவரைத்தான் இன்றைய அறிஞர்கள் நாடறிந்தவராக்குகின்றார்கள், ஒரு சிலர் எங்கேயோ அமைதியாகப் பகட்டு வாழ்வுக்கு இடங்கொடாமல் அவர்தம் பாடல் வழிப் பணிபுரிகின்றனர். அத்தகைய அமைதிப் புலவருள்ளே கள்ளில் ஆத்திரையனார் ஒருவர், 'கள்ளில்' அவருடைய ஊர்போலும். ஆதிரை நாளில் பிறந்ததனால் ஆதிரையனாராகி இருக்கலாம். அவர் இந்த உள்ளும் புறமும் ஒத்த காதற்கிழமையை நன்கு விளக்குகின்றார். அகப்பொருள் பாடும் புலவர்கள் இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தும் சிறப்புக்களை பலவாறு பாராட்டுவார்கள். 'அவன் நெஞ்சில் அவள்'; 'அவள் நெஞ்சில் அவன்'; இதுவே அகப்பொருள் காதல் வாழ்வு, ஆம்! இதே காதல் வாழ்வைப்புறப் பொருளில் காட்டுகிறார் ஆத்திரையனார். 'என் நெஞ்சம் திறப்போர் நிறகாண்குவர்' என்ற அடியைப் படிக்கும்போது, இது எங்கோ குறுந்தொகையிலோ அன்றி நற்றிணையிலோ உள்ள அடி

யாகத்தான் நினைக்கத் தோன்றும், இதில் 'காதற்கிழமை' ஒளி விடுகிறது. ஆனால் இக்காதற்கிழமை தலைவன் தலைவியைப் பற்றியதன்று. ஆதன் ஊங்கன் என்ற சிற்றரசனுக்கும் ஆத்திரையனாருக்கும் இடைப்பட்ட கிழமையாகும் இது. அவர்கள் இருவரும் உள்ளும் புறமும் ஒத்தனர். எனவே புலவர் தம் நெஞ்சைத் திறந்தால் அவனைக் காணமுடியும் என்கிறார். அவர் அத்துடன் நிற்கவில்லை; அதற்குமேலும் செல்லுகிறார். தான் அவனை மறக்க முடியுமா? என்ற வினாவினை எழுப்பிக்கொள்ளுகிறார். அதற்கு அவரே பண்பாட்டின் உச்சியில் நின்று பதிலும் தருகிறார், மறக்க முடியும் என்கிறார். எப்போது? ஆம்! ஒரே ஒரு வேளையிலதான்! தன்னை மறக்க முடியுமன்றோ! அவ்வாறு தன்னை மறந்து இறக்கும் அதே வேளையில் தன்னினும் வேறாக அல்லாத அவனையும் மறக்கத்தானே வேண்டும். ஆகவே தன் உயிர் பிரியும்—தன்னை மறக்கும் அந்த இறுதிக்காலத்திலன்றி, உயிர் வாழும் நாள்வரை ஆதன் ஊங்கனை அவர் எந்தக் கணமும் மறக்கவில்லை. என்வேதான் 'என் நெஞ்சம் திறப்போர் நிற்காண்குவர்' என்று, அவன் தன் அகத்தில் நிறைந்திருப்பதை அவர் காட்டுகின்றார். எனவே அந்தப் புலவர் உள்ளும் புறமும் ஒத்த வாழ்க்கை வாழ்ந்தவர். அதனால் தான் போலும் அவர் இந்த ஆரவார உலகில் எங்கோ ஒரு மூலையில் அமைதியாக இருக்கின்றார்: எனினும் பண்பாட்டில் தலைநின்ற தமிழகம் அத்தகைய பண்பட்ட உள்ளும் புறமும் ஒத்த நல்லவரை மறந்துவிடாது என்பதை நாட்டுக்கு உணர்த்த வேண்டும். இதோ அவர் அடிகளைத் தருகிறேன்.

'எந்தை வாழி! ஆதனுங்க! என்
நெஞ்சம் திறப்போர் நிற்காண் குவரே!

நின்யான் மறப்பின், மறக்குங் காலை
என்உயிர் யாக்கையின் பிரியும் பொழுதும்
என்னையான் மறப்பின் மறக்குவன்' (புறம் 175)

இந்த ஆதனுங்கன் தமிழ்நாட்டு வடஎல்லையில் வேங்கடத்துக்கு அப்பால் இருந்தவன்; மோரியர் காலத்தவன். அவ்வடவேந்தரைத் தமிழகம் வரவிடாது தடுத்தவன். அவனை நினைக்கும்போது, அவன் மோரியர் திகிரியைத் திரிதரக் குறைத்த புகழும் அவனுடைய ஞாயிறு அன்ன அறவாழ்வும் அவர் முன் தோன்ற, அவற்றைக் காட்டித் தன்பாடலை முடிக்கின்றார் புலவர். நாமும் இத்துடன் அமைவோம்.

## 15. மாணவர் நல்லவரே

நாள்தோறும் தாளிதழைப் புரட்டிப் பார்க்கும் காலம் இது. அதில் எத்தனையோ செய்திகள் வருகின்றன. ஒவ்வொருவருக்கு ஒவ்வொருவகைச் செய்தி தேவைப் படுகின்றது. எனினும் யாருக்கும் வேண்டாத யாராலும் விரும்பப்படாத சில செய்திகளும் வந்து கொண்டே இருக்கின்றன. அவ்வாறுன செய்திகளுள் ஒன்று அண்மையில் அடிக்கடி வந்துக்கொண்டிருக்கிறது. அது தான் மாணவர்களைப் பற்றியது, காசிமுதல் கன்னியா குமரிவரையில், பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் மாணவர் முறை தவறி நடந்தார்கள் என்ற செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன, அத் தகைய செய்தி வந்த அன்றைய காலை இதழைப் படித் தேன். பலவிடங்களில் மாணவர் போராட்டம் நிகழ்ந்த தாகச் செய்திகள் இருந்தன. இரவு உணவு உண்டு படுக்கச் செல்லுமுன் அதைப் படித்தேன். அதனுல் சிந்தனை நீண்டது.

அன்று இரவு எனக்கு நெடுநேரம் தூக்கமே வரவில்லை. 'மாணவர்கள் கெட்டுவிட்டார்கள்' என்று பெருந்தலைவர் முதல் சாதாரண ஊழியர்வரை இன்று பேசுகிருர்களே! அதன் அடிப்படை என்ன? என்று அத் தூக்கமற்ற வேளையில் என் மனம் ஆராயத் தொடங்கிற்று. தமிழ்நாட்டில் மட்டுமன்றிப் பரந்த பாரதநாட்டிலேயே பல இடங்களில் மாணவர் முறைதவறி நடக்கின்ருர்கள் என்ற செய்திகளை அடிக்கடி நாளிதழ்களில் காண் கிருேமே! வடக்கே காசிச் சர்வகலாசாலை சில காலம் மூடப்பட்டுக் கிடந்தது. கேரள நாட்டில் மாணவர் சிறு

கட்டளைத்துக்காகப் பெருங்கிளர்ச்சி செய்தார்கள் எனக் கண்டோம். ஏன்? சென்ற மார்ச்சு ஏப்ரலில் (1958) நம் தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகமாகிய அண்ணுமலையில் மாணவர் தேர்வுகள் நிறுத்தப்பட்டுப் பல்கலைக் கழகமே மூடப்பட்டது. இப்படி எத்தனையோ பல. இவற்றிற் கெல்லாம் காரணமென்ன? இந்த நிகழ்ச்சிகளுக் கெல்லாம் அடிப்படை எங்கே உள்ளது? ஆளும் கட்சியினர் 'மாற்றுக் கட்சியினர் தூண்டுகோலினுலே தான் மாணவர் தம் உள்ளங்கள் கெடுகின்றன' என மேடைகளில் பேசுகின்றனர். மாற்றுக் கட்சியில் உள்ளவர்களோ அரசாங்கச் சட்ட முறைகள் ஒழுங்கற்ற வகையில் இருப்பதுதான் இதற்கெல்லாம் காரணம் என்கின்றனர். எனினும் எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒன்று கூடிப் பேசி இதற்கு முடிவு காணவில்லை. சில மாதங்களுக்கு முன்னே சட்டசபையி லுள்ள பல அரசியல் கட்சித் தலைவர்களெல்லாம் ஒன்று கூடி, இம்மாணவர் ஒழுங்கற்ற நிலைக்கு வழிகாணப் போவதாகத் திட்டம் வெளியிட்டனர். ஆனல் இது வரை ஒன்றும் முடிவு ஏற்பட்டதாகத் தெரிய வில்லை.

இன்று தமிழ் நாட்டின் ஆட்சி மன்றத்தில் நாட்டில் உள்ள முக்கிய கட்சிகளின் உறுப்பினர்கள் அனைவரும் அங்கம் வகிக்கின்றனர். அவர்களெல்லாம் ஒன்று கூடின் இதற்கு ஒரு முடிவு காணமுடியாதா? முடியும்; பின் ஏன் செய்யவில்லை? ஒவ்வொரு அரசியல் கட்சியும் மாணவரை யும் தொழிலாளரையும் தத்தம் பக்கத்தில் இழுத்துக் கொள்ள விரும்புகிறது. எனவே, ஆளும் கட்சியாயினும் சரி, வேறு எக்கட்சியாயினும் சரி, இத்துறையில் இறங்க மயங்குகிறது. "எந்தக் கட்சியும் மாணவரிடைக் கலக்கக் கூடாது என்ருல், ஆளும் கட்சியும் அதில் அடக்கம் தானே. ஆனல் அமைச்சர்களும், அவர் வழி இயங்கும்

சில ஆணையாளர்களும் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் புகுந்து தமது கட்சிக் கருத்தினைப் பேசுவது தவறுகு மன்றோ! மற்றும் பள்ளிப் பாட நூல்களிலே தம் கட்சித் தலைவர்கள் பற்றியும், கொள்கை பற்றியும் செயல் பற்றி யும் பாடம் இருக்க வைப்பது தவறுதானே" என்று எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள். எனவே அதற்கு ஆளும் கட்சியார் பதில் சொல்ல மயங்குகிறார்கள். நான் அக்கட்சிகளைப் பற்றியெல்லாம் நினைக்கும் போது என்றால் ஒரு முடிவுக்குத்தான் வர முடிகிறது. எந்தக்கட்சி யாறுலும், எவரும் கல்வி நிலையங்களுக்குச் சென்று மாணவருக்குத் தம்மைப் பற்றியும், தம் செயல் பற்றியும் கூறிப் புகழ்ந்து பிறகட்சியாளரை இகழ்தலாகாது. மற்றும் அண்ணல் காந்தி அடிகள் போன்று நாட்டுடை மையான நல்லவர்தம் படங்களையும் பாடங்களையும் தவிர்த்துச் சாதாரணமாகக் கட்சியைச் சேர்ந்து வாழும் தலைவர்தம் படங்களையும் பாடங்களையும் நூலில் சேர்க்கக் கூடாது. அரசாங்கப் பொதுப்பணத்தால் செய்த எந்தச் சாதனையையும் தம் கட்சியினர் சாதனையாகக் காட்டி நூல்களில் பாடம் தீட்டலாகாது, முடிவாகச் சொல்ல வேண்டுமானால் கல்வித் தாபனங்கள் அரசாங்கப் பிடிப்பி லிருந்து விலகியனவாகிக் கட்சிச்சார்பற்ற பொது மக்க ளால் நடத்தப்பெற வேண்டும். அரசாங்கக் கல்லூரி களிலும் பள்ளிகளிலும் பிறவிடங்களிலும் யாரும் தம் கொள்கையைப் பரப்ப விடாதிருக்க ஆளும்கட்சி தானே முன்னின்று வழிகாட்ட வேண்டும். இந்தக் கருத்தைப் பிற தமிழ் நாட்டுக் கட்சியாளர் அனைவரும் ஏற்பார்கள் என்பதில் ஐயமில்லை. அப்படி ஏற்று அவர்களும் தங்கள் தொடர்பினையும் மாணவர்களோடு கொள்ளவில்லை என்று முடிவு செய்துவிடுவார்களாயின் ஓரளவு மாணவர் நிலைகெட்டு அரசியல் அலைகளால் தள்ளப்படும் கொடுமை குறைவுபடும். பள்ளி அல்லது கல்லூரிகளில் கலைக்கழகங்

களில் அறிஞர் தம் அறவுரைகளை முழக்க முறும். மாண வரும் நல்லவகையில் முன்னுக்குவர வாய்ப்பும் வசதியும் உண்டு. ஆயினும் இந்த ஒரு செயலினாலேயே மாணவர் களுக்கு நிறை ஒழுக்க நெறியைக் கற்றுக் கொடுத்துவிட முடியாது.

மாணவர்களைப் பயிலும் காலத்திலேயே நாடாளத் தகுதியுடையவர்களாக்க வேண்டும் எனச் சிலர் கருது கின்றனர். அதனாலே பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தேர்தல் முறை இன்றியமையாது வேண்டப்படுகிறது. அத் தேர்தல் முறை மாணவர்களுக்குள் பிளவும் மாறு பாடும் உண்டாகக் காரணமாக அமைகின்றது என்ற உண்மையைக் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் பணி யாற்றுகின்றவர் நன்கு அறிவர். அமைதியும் கூட்டுறவும் பண்பும் அன்பும் கலந்து முகிழ்க்க வேண்டிய கல்லூரி வாழ்க்கையில், வேறுபாடும் பொருமை உணர்வும், அவற்றின் வழி அலேவும் அலக்கணும் உண்டாவதைக் காண்கின்றோம். இதனாலே கல்லூரிகளிலோ உயர்நிலைப் பள்ளிகளிலோ கலைக்கழகங்கள் தேவை இல்லை என்பது என் கருத்தன்று. ஆயினும் அவற்றை மாணவர் வழி இயங்க விடுவதிலும், அவர்களை அதிகமாகப் பயிலவிட்டு விட்டு. ஒவ்வொரு துறையிலும் வல்லவரை அழைத்து வந்து, அவர்களை மாணவர் மாட்டுப் பேசவும், கருத்துத் தெளிவு காட்டவும் செய்து கலக்கவைக்க வேண்டிய பொறுப்பை அவ்வத்துறையில் வல்ல ஆசிரியர்களே மேற்கொள்ள வேண்டும். அதற்கும் ஒரு கல்லூரிக்குப் பல கழகங்கள் என்ற நிலைமாறி, ஒன்றற்கு ஒரு கழகம் போதும் என நிறைவு பெற்று, அதன் வழியே பெறவேண் டியதாகிய அனைத்து நலன்களையும் பெறமுடியும் என்ப தைக் காட்டவேண்டும். இவ்வாறன்றித் தத்தமக்குப் பேரும் புகழும் வரவேண்டுமென்ற காரணத்தாலே

போட்டியிடுவதும், அதன் வழிப் பொருமை உள்ளம் கொண்டு ஒருவருக்கொருவர் மாறுபட்டு நிற்பதும் மாணவர் உலகில் இன்று நமக்கு வேண்டாதன. எனவே கல்லூரி அமைப்பாளர்களும், அரசியலாரும் இத்துறையில் கருத் திருத்த வேண்டும்.

மாணவர் படிக்கும் நேரமும் அறிந்து கொள்ளும் பொருளும் மிகக் குறைவு. சுற்றுலா என்று பல ஊர்கள் சுற்றுவதும், கூட்டங்கள் கூட்டிப் பொழுது போக்கு வதும், நாடகம் முதலியன கற்றுக்கொள்ள ஊக்கமளிப் பதும் இன்றைய கல்வித் துறையில் இடம் பெற்றுள்ளன. இவற்றை யாரும் தேவையற்றன என்று சொல்ல மாட் டார்கள். இவையெல்லாம் இல்லாத காலத்திலே படித்த நம் முன்னோர்கள்—நமது பரம்பரையினர்—அறிவற்றவர் களாகவா இருந்தார்கள்? அவருள் எத்தனை அறிஞர்கள் இன்றும் நாட்டின் மாணிக்கங்களாக விளங்குகிறார்கள்! ஆகவே, அத்தகைய பல முகக் கருத்திருத்தும் கல்வி நிலை மாறவேண்டும்:

பாடத்திட்டங்கள் அடிக்கடி மாற்றப்பெறுகின்றன. தாம் ஆளவந்த காரணத்தால் எல்லாவற்றையும் மாற்ற வேண்டும் என்ற கருத்தில் ஒவ்வொரு ஆளும் கட்சியும் செயலாற்றத் தொடங்கினால் நாட்டு நிலை என்னாவது? ஆரம்பப் பாடசாலையிலும் உயர்நிலைப் பள்ளியிலும் விடுதலை பெற்ற பிறகு என்னென்னவோ மாறுதல்களைக் காண் கின்றோம். கல்லூரிகளிலே $2+2=4$ என்பது போய், $1+3=4$ என்ற மாறுதல் புகுத்தப் பட்டிருக்கிறது. இன்னும் சில ஆண்டுகளில் வேறு சில மாறுதல்கள் வரப் போவதாகவும் அறிகிறோம். இவையெல்லாம் அமைதி யான கல்வியாற்றில் அலைமோதவிடும் கற்களாக அன்றோ அமைகின்றன.

மற்றொன்றும் நோக்க வேண்டும். பாடத்திட்டங்கள் மாணவர் வருங்கால வாழ்வுக்குப் பயன்தரத்தக்கதாக அமையவேண்டும். பள்ளிகளில் பாடத்திட்டம் வகுக்கும் முறையை அவ்வத்துறையில் வல்லவர்கள் வழியே ஒப்படைத்தல் வேண்டும். அதுபோன்றே தேர்வு முறையிலும் அடிக்கடி மாற்றங்கள் செய்து மாணவரைத் திண்டாட விடாது, அமைதியான ஒரு முறையில் நல்ல அறிவறிந்து அவ்வத்துறையில் தேர்ச்சிபெற்ற வல்லவர்வழித் தேர்வுகளை நடத்த வேண்டும். மாணவர் பயிலும் கல்வி அவர்தம் வாழ்வுக்கு வழிகாட்டியாக அமைய வேண்டுமேயன்றி 'அடகெடுவாய் பலதொழிலும் இருக்கக் கல்வி அதிகமெனக் கற்றுவிட்டோம் அறிவிலாமல்' என்று வாடும் வகையில் கல்வி நெறியை அமைக்கலாகாது. இன்று அத்துறையில் கல்வி இல்லாத காரணம்தான் மாணவர்களை வேற்றுத் துறைக்குச் செல்லத் தூண்டுகிறது. மேலை நாடுகளின் கல்வி நிலையினைக் கண்டுவரும் பலர் அங்குள்ள கல்வி முறைகளுக்கும் இங்குள்ள முறைகளுக்கும் வேறுபாடுகள் உண்டு என்கின்றனர். அதற்காக—அவற்றை ஆக்குவதற்காக—அரசாங்கச் செலவில் செல்லும் நல்லன்பர்கள் அத்துறை வழிகளை ஆராய்ந்து அவற்றுள் நல்லனவற்றை நம் நாட்டில் செயலாக்க முயல வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாகப் பள்ளியிலும் கல்லூரியிலும் நல்ல ஒழுக்கநெறி ஓம்பும் வல்லவர்களையே ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும். செயலாற்றும் திறனும் செம்மை உளமும் உள்ளவர்கள் முதல்வர்களாகவும் ஆசிரியர்களாகவும் வருவார்களாயின் அது கல்வித் துறைக்கு நலமாகும். இப்படி எத்தனையோ சொல்லிக் கொண்டு போகலாம். இவற்றைப் பலர் நினைக்கின்றனர். எனினும் வெளியில் சொல்ல அஞ்சுகின்றனர். என்றாலும் ஒருநாள் சொல்லித்தானே ஆகவேண்டும். எனவே

சொல்லுகிறேன். மாணவர்களை மட்டும் குறைக் கூறிக் கொண்டிருப்பதில் பயனில்லை. அவர் தம் உள்ளங்கள் கண்ணுடி போன்றவை. அவர் தம் எதிரில் காணும் நாட்டு நிலை—சமூக நிலை—கட்சி நிலை—கல்வி நிலை—ஆசிரியர் நிலை—அவர்கள் தலைவர் தம் நிலை அத்தனையும் அவர்களிடத்திலும் நிலவுகின்றன. இப்படியே ஒவ்வொன்றையும் எண்ணிப்பார்த்து நோயின் மூலத்தை அறிந்து மருந்து கொடுக்க வேண்டுமே ஒழிய வீணில் மற்றவரைக் குறை கூறல் தவருகும். மாணவராகிய கண்ணுடியின்முன் நல்ல உருவங்கள்—அவற்றின் செயல்கள்—அதன் வழி உருவாகும் உணர்வுகள்—அவ்வுணர்வில் தோன்றும் ஒழுக்க நெறிகள் நிறுத்தப்பெற வேண்டும். அரசாங்கமும் பிறரும் அதைச் செய்து பார்க்கட்டும். பிறகு அவர்களே கூறுவார்கள். 'மாணவர்கள் நல்லவர்களே' என்று; ஆம்; மாணவர்கள் நல்லவர்கள் தாம். அந்த நல்லவர்களை நல்லவர்களாகவே வளர்த்து, நல்லவர்களாகவே வாழச் செய்து, வருங்காலச் சந்ததியை உருவாக்கும் பொறுப்பு எல்லோருக்கும் உரியது. வாருங்கள்—சேர வாருங்கள்—திரண்டு வாருங்கள்—செம்மைப் பணிபுரிய வாருங்கள்—செயலாற்றுங்கள்! மாணவச் செல்வங்கள் நல்ல வருங்காலச் செல்வங்களே என்பதைச் செயல்வழி ஒன்றிக்காட்டி உயர்த்துங்கள்; நீங்களும் உயருங்கள் என்ற வேண்டுகோளுடன் இக்கட்டுரையை முடிக்கின்றேன்! மாணவர் நல்லவர்! வாழ்க அவர் நல் உள்ளம்! வளர்க அவர் அறிவுத்திறன்! சிறக்க அவர் எதிர்காலம்! செழிக்க அவர் செயல் முறைகள்!

## 16. கவிஞன் யார்?*

உலகில் சாகா வரம்பெற்று வாழ்பவன் கவிஞனே யாவன். காலம் இடையிட்டும் அவன் நிலையுற்ற வாழ்க்கையைப் பெற்றுவிட்டான். ஊழிதோறூழி எத்தனை எத்தனையோ பொருள்கள் தாம் இருந்த இடத்தின் சாயல்கூடத் தெரியாத வழி அழிந்துபோயின என்றாலும் கவிஞன் தன் கவிதைமூலம் அவ்வூழிகளையெல்லாம் வென்று நிலைத்து வாழ்வதை நாம் காண்கின்றோம். பாரனைத்தும் போற்றச் சிறந்திருந்த புகார் நகரம் இன்று இல்லை? அதன் சுவட்டைக் காணவும் வழியில்லை. ஆனால் அதைப் பாராட்டிய பட்டினப்பாலை இன்று வாழ்கின்றது. என்றும் வாழும். ஆம்! அப்பட்டினப்பாலையின் வழி அதை இயற்றிய புலவன்-கவிஞன் உருத்திரங்கண்ணன் நிலைத்து வாழ்ந்து வருகின்றான் அல்லனோ! அவ்வாறு என்றென்றும் நிலைபெற்று வாழும் கவிஞன் யார்? அவன் நிலை என்ன? எப்படி? அவனை அவ்வாறு வாழவைப்பது எது? இவைபற்றி எல்லாம் எண்ணிப் பார்ப்பின் உண்மைக் கவிஞனுடைய உயர்நலம் நன்கு புலனாகுமன்றோ!

கவிஞன் பிறப்பவனா? அன்றி ஆக்கப்படுபவனா? பலரும் அவன் பிறப்பவனே என்று சொல்லுகின்றனர். அதன் கருத்தென்ன? பிறக்கும்போதே கவி பாடிக் கொண்டே பிறக்கிறான் என்று சொல்வதா? அது எவ்வாறு பொருந்தும்? ஆயினும் கவிஞன் இலக்கணங்களைப் பயின்று, எதுகையும் மோனையும், இணைக்கும் வகை கற்று, சீரும் அசையும் தெரிந்து, அதன்படி பாடுபவனா

* தென்றல் கவிஞர் மலரிலிருந்து (6-8-60)

என எண்ணின் அந்த எண்ணமும் தவறேயாகும். யாப்பிலக்கணம் பயின்று அதன்படி பாட்டிசைக்கத் தொடங்குவாறுயின் எவனும் பிறர் உள்ளம் தொடும் தெள்ளுமொழிக் கவிதையைப் பாடமுடியாது; பாடின தாக அவன் நினைப்பினும் விரைவில் அது மறைந்தொழியும். எனவேதான், 'காரிகை கற்றுக் கவி பாடுவதனினும் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றே' என்ற பழமொழி நாட்டில் உலவுகின்றது. அப்படியாயின், இலக்கண முறையற்ற கவிதை பாடுவதா என்ற ஐயம் எழும். அதுவும் தவறே. உண்மைக் கவிஞன் தன்னை மறந்த நிலையில் யாதொரு வேறுபாடுமற்ற தன் உள்ளத்தே உயர்வுன்னி மெள்ள மெள்ளப் பாட்டிசைத்து உலகுக்குக் கவிதை இன்பத்தைத் தருவான். அக்கவிதை எல்லா இலக்கணங்களும் பொருந்தியதாக இருப்பதோடு, அதுவே இறவாத கவிதையாக இருக்க முடியும். எனவே கவிதை என்றும் எழுத்தெண்ணுவதாலோ சொல் கட்டுவ தாலோ அமைவதன்று. அது உள்ளத்தின் அலை-எழுச்சி யின் உயர்ச்சி. அதில் கவிஞன் தன்னை மறக்கிருன். அதைப் பாடுபவனையும் மறக்க வைப்பான். அந்த மெய்க் கவிஞன் வாழ்வாஞக என வாழ்த்துகிறேன்.

'கல்லைக் கண்டால் நாயைக் காணேம் நாயைக் கண்டால் கல்லைக் காணேம்' என்பது நாட்டில் வழங்கும் சாதாரணப் பழமொழி. அதன் கருத்தென்ன? நாயை அடிப்பதற்கு அதைக் காணும்போது கல் இல்லையே என்று ஏங்குவதா? அன்று! அன்று!! இப்பழமொழி கலை ஞனின் பெருமையைக் காட்டும் ஒன்ருகும். கல்லில் நாய் உருவம் செதுக்கிய ஒரு கலைஞனின் கைவண்ணத் திறனைப் பாராட்டும் மொழி இது. கல்லிலே நாய்; அதன் நலம் அறிந்து கலைப்பண்பு உணரும் நல்லவனுக்கு அது நாயாகவே தோன்றுகின்றது. அல்லாதவருக்கு அது

வெறும் கல்லே. எனவே அது அறிந்தார் உள்ளத்தே கலையாக—நாயாக—நல்ல கலைப் பெட்டகமாகக் காட்சி தருகின்றது. அதைக் கல்லாகக் காண்பவர்கள் அந்தக் கலைவடிவான நாயைக் காண இயலாது. அல்லாதாருக்கோ அது கலைச் செல்வம். ஆம்! கலைஞனுக்குப் பொருந்தும் இந்த நிலையும் பண்பும் கவிஞனுக்கும் பொருந்துவனவே. அறிந்தறிந்து மகிழ்வாருக்கு அவன் கவிதை தெவிட்டாத தெள்ளமுதம். உள்ளத்தை உயர்த்தும் உயர் மருந்து—வாழ்வை வளமாக்கும் வற்றாத செல்வம். அல்லாதாருக்கு ஒரு வேளை அது வெறும் சொற்கட்டாகும்.

கவிதை அதைப் பாடுபவனுக்கும் மேலானது. கவிதை பாடும் புலவனின் தலைவனாகப் பணியாற்றும் நிலை உடையது. கவிதை தான் உயர்ந்து தன் வழிப் பாடுபவனைப் பற்றி ஈர்த்து அவனை என்றும் வாழ்பவனாகச் செய்கிறது. கவிதை எல்லா வேறுபாடுகளையும் மறக்கச் செய்கிறது. இன்னார் இனியார் என்னாது, உற்றார் அற்றார் என்று பகுத்துப் பார்க்காத நல்ல கவிதை காட்டில் எல்லார் உள்ளத்தும் இடம் பெறும். ஆங்கிலேயன் மேல் வெறுப்புற்று அவனை நாட்டை விட்டு ஓட்டக் கங்கனம் கட்டிச் செயலாற்றிய அந்த நாளிலும் இந்தியர் ஆங்கிலக் கவிஞர்களைப் போற்றிப் பாராட்ட வில்லையா! ஆம்! கவி தன்னைப் பாடியவனினும் மேம்பட்டதாகி, அறிவறிந்த உள்ளங்களைத் திறந்து, அவற்றுள் நிலைத்த இடம் பெற்றுச் சிறக்கிறது. மக்கள் உள்ளம் தொடும் கவிதை எதுவும் காலத்தேவன் கையில் சிக்காது வாழும் என்பது உறுதி. சங்க காலப் புலவர் தம் பாடல்களுள் பல அத்தகையனவே.

சாகா வரம் பெற்ற கவிஞர்களின் தன்மை தனிச் சிறப்பு வாய்ந்தது. கவிஞனானவன் உயர்ந்த கற்பனைத்

திறனும் விரிந்த நல்நோக்கும் உடையவனாகி, அவற்றை உலகுக்குத் தெள்ளத்தெளியக் காட்டி விளக்குபவனாக இருக்க வேண்டும் என்று கவிஞனுக்கு இலக்கணம் கூறுவர் மேலைநாட்டு அறிஞர். அவன் கண்ணுக்கு வானோங்கிய இமயமலையும் ஒன்றுதான், நெளிந்து செல்லும் சிறு நாங்கூழ்ப் புழுவும் ஒன்றுதான். உயர்ந்த இமயத்தை அண்ணாந்து நோக்கும்போது, 'மன்னும் இமயமலை எங்கள் மலையே' என்று வீறு தோன்றப் பாடுகின்றது அவன் வாய். ஊர்ந்து செல்லும் உலையாத நாங்கூழ்ப் புழுவை நோக்கும் போது 'ஓஓ நாங்கூழ்ப் புழுவே, உன்பாடு ஓவாப் பாடே' எனப் பாராட்டி வியக்கிறது அவன் வாய். அவனுடைய உயரிய உள்ளத்திலே அனைத்தும் வேறுபாடற்ற சமநிலையில் காட்சி அளிக்கும். அக் காட்சிவழி கற்பனை மிதக்கும். கற்பனை முற்றிக் கவிதையாக உருப்பெற்று ஓடி வந்து உலகுக்கு நல்லமுதூட்டும். அதன் வழி உலகம் நலம் பெறும். இதைத் தான் இந்த நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞன் பாரதி,

'உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப் போல் கலைப்பெருக்கும்
கவிப் பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருந்த குருடரெலாம்
விழிபெற்றுப் பதவிகொள்வார்'

எனப் பாடிச்சென்றான். எனவே நாட்டையும் உலகையும் வாழ்விப்பன உண்மையில் உயரிய கவிதைகளும் அவற்றை ஆக்கிய கவிஞர்களுமே யாவர். இன்று தமிழர்தம் தொன்மையையும் பண்பையும் நாகரிகத்தையும் பாராட்டக் காரணமாயிருப்பவர் சங்க காலக் கவிஞர்களேயன்றி வேறு யார்?

வாழும் கவி மற்றவர் உள்ளங்களைத் தொட வேண்டும் என்று கண்டோமல்லவா! அவ்வாறு தொடுவதற்கு

அதில் நல்ல கருத்துக்கள் அமைந்திருக்க வேண்டும். வெறும் சொற்களை மட்டும் அடுக்கி எதுகை மோனை இட்டுக் கவியாக்குவர்களேயானல் அவை நெடுங்காலம் வாழா என்பதை வரலாறு காட்டுகின்றது. ஆனல் பொருள் நலத்தைப் பொருந்த வைத்து, இழுமென் மொழியால் இன்பக் கவிதை தீட்டினல், தீட்டுவார் இயற்பெயர் மாய்ந்து விட்டாலும் அவருக்குக் கவிதை தன்வழி ஒரு புதுப் பெயரை இட்டு உலகில் வாழ வைக்கும் என்பது உண்மை. சங்க காலச் 'செம்புலப் பெயல் நீராரும்' 'தேய்புரிப் பழங்கயிற்றூரும்' அவ்வாறு இன்றும் வாழ்கின்றவர்களன்றோ! எனவே, கவிதைக்கு வெறும் சொற்களைக் காட்டிலும் பொருளே இன்றியமையாது வேண்டப்படுவது. இதைத்தான் 'யாப்பு' என்ன என்பதை விளக்க வந்த இடத்தில் தொல்காப்பியனர்.

'எழுத்து முதலா ஈண்டிய அடியில்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்' (பொருள் 384)

எனப் பொருளை முற்றக் காட்டவேண்டிய தன்மையை விளக்கிக் காட்டினர். எனவே கவிஞன் சிறந்த பொருளின் அடிப்படையிலேயே தனது கவியை எழுத வேண்டும் என்பது தெளிவு.

பொருளே கவிதைக்குச் சிறந்தது என்றாலும், அந்தப் பொருளின் நிலைக்கேற்ற நல்ல சொற்களையே கவிஞன் தன் கவிதைக்குத் தேர்ந்தெடுக்க வேண்டுவதும் இன்றியமையாததாகின்றது. எனவே, சொல்லும் பொருளும் பின்னியதே கவிதை. அது கவிஞன் உயர் உள்ளத்தின் அடிப்படையில் அமைவது. இவ்வாறு பாடும் கவிஞனது கவியின் ஆழத்தை அளந்தறிதல் கடினமே. ஒரே குறளுக்கு எத்தனை எத்தனை புதுப் பொருள்கள் காலந்தோறும் கண்டு கொண்டே இருக்கின்றோம். அதே வேளையில் அந்தப்

பொருள் எல்லாருக்கும் எளிதில் விளங்கக் கூடியதாக வாழ்க்கையில் தொடர்புடையதாகவும் அமைந்து விடுகிற தன்றோ! எனவே கவிஞன் சொல்லுக்கும் பொருளுக்கும் முட்டுப்பாடு 'இல்லாதவனாக, 'உளங்கனிந்த போதெல்லாம் உவந்து, வந்து பாடுபவனாக' இருக்க வேண்டும், அவன் உலகில் பொருட் செல்வம் அற்றவனாக இருக்கலாம். ஆனால் அவனது கவிதைச் செல்வம் அவனை வையம் உள்ளளவும் வாழ வைக்கும் என்பது உறுதி. சங்ககாலப் புலவருள் பலர் இவ்வுண்மையை உணர்ந்திருந்த காரணத் தினாலே தான் தமக்கெனப் பொருள் விழையாராயப் பழுமரம் நாடிச் செல்லும் பறவைகளாய் வாழ்ந்து வந்தார் கள். அதனாலன்றோ அவர்கள் இன்றும் வாழ்கின் றனர்.

இன்று உலகில் கவிதை நலத்தையும் கவிஞன் உயர்வையும் காட்டப் பலப் பல மொழிகளில் பலப்பல நூல்கள் வெளிவந்து கொண்டே இருக்கின்றன. தமிழில் அத்தகைய நூல்கள் பல வரவில்லை என்றாலும், தமிழ் நாட்டு மக்கள் காலந்தோறும் தோன்றி வாழ்ந்த புலவர் களில் தக்காரைப் போற்றி மதிக்கத் தவறவில்லை. பொது மக்களாலே—கற்றார் மட்டுமன்றி மற்றாராலேயும்—மதிக் கப்படும் கவிஞன் சிறந்த உலகக் கவிஞனாக வாழ்கின்ற தையும் நாம் காண்கின்றோம். எப்படி அவன் வாழ முடிகின்றது? சாதாரண எளிய மக்களுடைய வாழ்வைப் பின்னி எழுந்த கவிதைகளன்றோ அவனை வாழ வைக் கின்றன. எனவே மெய்க்கவிஞன் வெறும் காணாத உலகையும் கற்பனை உலகையுமே தன் உள்ளத்தால் உருவாக்குவதைவிட, சுற்றியுள்ள சூழலுக்குட்பட்ட மக்கள் வாழ்வையும், அவர் தம் பண்பாடு, நாகரிகம் முதலியவற்றையும் பின்னிய கவிதைகளையே உருவாக்க வேண்டும். சங்க இலக்கியங்களின் வழி இவ்வுண்மை

நன்கு தெளிவாகும், ஆங்கிலத்திலேயும் சிறந்த புலவர்கள் இவ்வாறு மக்கள் வாழ்வோடு பிணைந்த கவிதை பாடிச் சென்றவர்களாகத்தான் உள்ளார்கள். எனவே கவிஞன் தன்னைச் சுற்றியுள்ள உலகத்தையும் அதில் வாழும் உயிர்களையும் கண்டு, அன்புளங்கொண்டு, அவற்றின் வாழ்வையும் வளத்தையும் அன்றித் தாழ்வையும் தளர்ச்சியையும் எண்ணி, அவற்றோடு தன் உயர்வுள்ளத்துக்கு ஏற்பப் பயில்வார் மனநிலைக்கு ஒப்ப நல்ல கற்பனை நயத்தையும் கலந்து, உவந்துவந்து, உணர்ந்துணர்ந்து பாட்டிசைப்பவனேயாகும். அவன் கவிதையில் ஒவ்வொரு எழுத்தும் களிநடம் புரியும்; வாழும், வாழவைக்கும்: அத்தகைய கவிஞர் அன்று தொட்டு எத்தனையோ பேர் தோன்றி வாழ்ந்து நாட்டை வளம்பெறச் செய்தனர். அத்தகைய கவிஞர் வரிசையில் நாம் வாழும் இந்த நூற்றாண்டிலும் தமிழ்நாட்டில் சிலர் தோன்றியுள்ளனர். அவர்வழி நாடு நலம்பெறுக என நாமும் வாழ்த்துவோம்.

# 17. நாடகத் தமிழ்*

பழங்காலத்தில் தமிழையே மூவகையாகப் பிரித்தார்கள். இயல் தமிழ் என்றும், இசைத்தமிழ் என்றும், நாடகத் தமிழ் என்றும் அவை வழங்கப்பெற்றன. இலக்கியங்கள் செய்யுள் நடையிலும் உரை நடையிலும் எழுதப்படின் அவை இயற்றமிழ் ஆகும்; இயற்றமிழோடு இசையினையும் சேர்த்துப் பயிலும் முறையும் அமையும் நூல்களும் இசைத்தமிழின் பாற்படும். இயலும் இசையும் சேர்ந்து கற்காத பாமரனும் கூட அறிந்து கொள்ளும்படி எளிய நடையில் எழுதப்பெற்றுப் பலரும் காண நடித்துக் காண்பிக்கத் தக்க வகையில் அமைவது நாடகத் தமிழ் ஆகும். இவை மூன்றும் மிகப்பழங்காலந் தொட்டே தமிழ்நாட்டில் வழக்கத்தில் இருந்துவந்துள்ளன. இவற்றை ஒன்று சேர்த்தே முத்தமிழ் என வழங்கி வந்தனர். எனவே, என்று தமிழ் உண்டோ அன்றே நாடகமும் உண்டு என்று கொள்ளுதல் பொருந்தும்.

என்றாலும், பழங்காலத்தில் தமிழில் இருந்த நாடக நூல்கள் எவை என்று நம்மால் கூற முடியாது. நாடகங்கள் இருந்தும் அவை கடலால் கொள்ளப்பட்டனவோ என நினைக்க வேண்டி இருக்கிறது. இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கொள்ளும் தொல்காப்பியத்திலேயே நாடகம் பற்றிய குறிப்பு வருகின்றது; நாடக வழக்கு, உலகியல் வழக்கு எனப் பிரிக்கின்றார். இந்தப் பிரிவில் இருந்து நாம் ஒன்றை நன்றாக அறிந்து கொள்ள முடிகின்றது. அதுதான் நாடக வழக்கு சாதாரண உலக வழக்கிலும் சற்றே வேறுபட்டது என்பது. உலக வழக்கு வாழ்வோடு பொருந்தி அமைதியாகச் செல்வது; நாடக வழக்கோ உலக நடைக்கு மாறுபடாததாய், அதே வேளையில் எழுதும் புலவனுடைய

---

* கல்கத்தா இதழ்

திறனுக்கு ஏற்ற கற்பனையைக் கொண்டதாய்ப் பார்ப்பவரோ படிப்பவரோ எண்ணிப் பார்த்துப் போற்றும் வகையில் அமைவதாகும். நாடகம் சற்று உயர்வு நவிற்சியாக இருக்கலாம். இன்றைக்கு நாம் படக்காட்சியிலோ அன்றி நாடகத்திலோ காணும் நிகழ்ச்சிகளை அப்படியே வாழ்வில் மேற்கொள்ள விரும்புவதில்லையே. அப்படி மேற்கொள்ள விரும்பினாலும், அது நகைப்புக்கு இடமாக அமைகின்றது. ஆனால், அதையே பலர் முன் நடித்துக் காட்டும் நாடக மேடைக் காட்சியாக்கினால் எல்லோரும் கண்டு மகிழ்கின்றோமல்லவோ! எனவே வாழ்வை விளக்கிக் காட்டுவதுதான் நாடகம் என்றாலும் அதில் கற்பனையும் பிறவும் கலந்தால்தான் சிறப்பு உண்டாகின்றது. இந்த உண்மையைத்தான் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியர் காட்டியுள்ளார். இரண்டையும் பிணைத்து,

> **'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
> **பாடல் சான்ற புலநெறி வழக்கம்'** (அகத்திணை 56)

எனக் காட்டியுள்ளார். இத் தொல்காப்பியனார் காலத்துக்கு முன்பிருந்தே நாடகம் தமிழ்நாட்டில் சிறந்திருந்தது என அறிகின்றோம். அதாவது சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நாடகம் தமிழ்நாட்டில் நன்கு வழக்கத்தில் இருந்தது எனக் காண முடிகின்றது. என்றாலும் அந்த நாடகங்களை இன்று நம்மால் காண முடியவில்லை; ஏன்?

தமிழ்மொழி வரலாற்றில் எத்தனையோ மேடு பள்ளங்கள் உள்ளன. பிறநாட்டார் தம் சேர்க்கை, அரசியல், சமயம் போன்ற ஆதிக்கம் முதலியன தமிழ்நாட்டு வாழ்க்கை முறையினை மாற்றி அமைத்துள்ளன. இடைக்காலத்தில் தமிழ்நாட்டில் ஆணை செலுத்திய பௌத்தம் சமணம் போன்ற சமயங்கள், இந்த நாடகம் இசை போன்றவை காம இச்சையை வளர்ப்பன என்றும், அவை கடியப்பட வேண்டியன என்றும் மக்களிடை ஒரு கருத்தைப் பரப்பின. அரசரும் அச்சமயங்களைச் சார்ந்து

இருந்தமையின் அரசியலின் வழியும் அவற்றை வளர ஒட்டாமல் தடுத்திருக்கக்கூடும். எனவே இடைக் காலத்தில் பல காரணங்களால் நாடகமும் கூத்தும் நடனமும் இசையும் தமிழ்நாட்டில் நன்கு வளராது நின்றுவிட்டன என்பது பொருந்தும்.

தமிழ் நாட்டில் நாடகத்துக்குக் கூத்து என்ற ஒரு பெயரும் உண்டு. 'கூத்துள் படுதல்' என்றே அதன் வழி இயங்கும் நிலை குறிக்கப் பெறும். தமிழ்நாட்டில் பல வகைக்கூத்துக்கள் இருந்தன என்பதைப் பழங்காலத் தமிழ் இலக்கியங்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. தனிப்பட்ட வகையிலே அமைகின்ற கூத்துக்கள் பதினொரு வகைப்படும் என்பர். நாடகம் முதலியன அப் பதினொரு வகைக்கு அப்பாற்பட்டன: நாடகங்களின் நடுவிலே இக்கூத்துக்களுள் ஒன்றிரண்டு இணைக்கவும் பெறலாம். கடைச்சங்க காலத்தில் 'கூத்து நூல்' என்ற ஒரு நூலே இருந்ததாக இறையனார் களவியல் உரையால் அறிய முடிகிறது கூத்தாடுதல் என்றால் மகிழ்ச்சி மிகுதல் என்றும் பொருள் உண்டு. எனவே சேர்ந்திருக்கும் மக்கள் உள்ளத்தில் மகிழ்ச்சி மிகுதற்காக, உலகியல் முறையோடு சில கற்பனைகளையும் கலந்து நடிக்கப் பெறுவதே நாடகம் என்பது நன்கு அறியப்படும்.

தொல்காப்பியத்தில் நாடகம் குறிக்கப் பெறுகின்றதேனும், அக்காலத்தில் இருந்த நாடக நூல்களை நம்மால் அறிய முடியவில்லை. கடைச்சங்க காலப் பாடல்கள் பல நாடக அமைப்பிலேயே உள்ளன. கலித்தொகைப் பாடல்களில் சிலவற்றை அப்படியே நாடகமாக்கி நடிக்க முடியும். அகநானூறு போன்ற இலக்கியப் பாடல்களில் சில நாடக அமைப்பில் இருக்கின்றன. என்றாலும் அவற்றைத் தனி நாடக நூல் என்று கூறமுடியாது. சங்க காலத்தில் இருந்த பல நாடக நூல்களும் அவற்றை விளக்கிக் காட்டும் நாடகம் பற்றிய இலக்கண நூல்களும் இடைக்காலத்தில் மறைந்துவிட்டன; அல்லது மறைக்கப் பட்டன. எனவே இன்று நாடகமும் இசையும் பற்றிய

பல பழைய கருத்துகளை நம்மால் அறிய முடியவில்லை. எனினும் சிலப்பதிகாரத்தினாலும் அதன் உரைகளாலும் அவைபற்றி ஓரளவு அறிந்துகொள்ள முடிகின்றது.

சிலப்பதிகாரத்தை நாடகநூல் என்றே சொல்லு வார்கள். அதை வெறும் காப்பியம் அல்லது இலக்கியம் என்று சொன்னாலும், அதில் நாடகத்துக்கு வேண்டிய அத்தனை நல்ல அமைப்புகளும் பொருந்தியுள்ளன. அதில் நடனம் பற்றியும் அந்த நடனம் நடக்கும் அரங்கு முதலியன பற்றியும் பல விளக்கங்கள் கூறப்படுவதோடு, நாடகத்துக்கு வேண்டிய பல வரிப் பாடல்களும் இடம் பெற்றுள்ளன. கானல் வரியும், வேட்டுவ வரியும், குன்றக் குரவையும், ஆய்ச்சியர் குரவையும் நாடகங்களுக்கு ஏற்ற நல்ல பாடல்கள் அல்லவா! அவற்றை வைத்தே புதிதாக நல்லதொரு நாடகமே எழுதிவிடலாம். மற்றும் அந்த நூலில் பல பாத்திரங்கள் ஒருவருக்கொருவர் பேசுவதாக அமையும் இடங்களிலே நாடக அமைப்பே கையாளப் பெறுகின்றது. கோவலன் கண்ணகி பேச்சும், கவுந்தி அடிகள் மாதவி போன்றார் பேச்சும், வழக்குரை காதையும், பிறவும் நாடக அங்கங்களாகவே காட்சி அளிக்கின்றனர். சிலப்பதிகாரத்தில் கதைப் போக்காய் ஆசிரியர் வாக் காகச் சொல்வதை எடுத்துவிட்டால் அப்படியே அது ஒரு நாடக நூலாக உருப்பெற்றுவிடும் என்பது உறுதி. எனவே சங்க காலத்தை ஒட்டிய இன்றைக்கு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பே நல்ல நாடகங்களும், அந் நாடக முறைக்கேற்ற உரைநடை, பாட்டு, இசை முதலியனவும் உறுப்பெற்ற விட்டன எனக் காண முடி கின்றது. எனினும், அந்த நாடகமும் இசையும் தமிழ் நாட்டு வரலாற்றின் இருண்ட காலத்திலே சற்று நிலை கெட்டன எனலாம்.

இருண்ட காலத்துக்குப்பின் பல்லவர் தமிழ் நாட்டை ஆண்ட காலத்திலும் நாடகமும் இசையும் போற்றப் பட்டன. இசை பற்றியும் அதன் வளர்ச்சி பற்றியும் தேவாரம் போன்ற தோத்திரப் பாடல்கள் நன்கு விளக்

இக் காட்டுகின்றன. மகேந்திர பல்லவனாகிய பெரு மன்னனே ஒரு நாடகப் பிரியனாக இருந்தான் என்றும், அவனே 'மத்தவிலாசப்ரகசனம்' என்ற நாடக நூலை இயற்றினான் என்றும் காண்கின்றோம். பலலவர் காலத்திலே நாடகமும் நடனமும் கோவில் தொறும் ஊர் தொறும் நடைபெற்று வந்தன எனக் காண முடிகின்றது. அக்காலத்தில் உண்டான இலக்கியங்கள் கோயில்களை மையமாகக் கொண்ட சமய இலக்கியங்களேயானாலும், அவற்றிலிருந்து அக் கோயில்களே நாடகங்களுக்கும் நடனங்களுக்கும் முக்கிய இடங்களாக அமைந்தன எனக் காணமுடிகின்றது.

அடுத்துச் சோழர் காலத்தில் நாட்டில் எத்தனையோ கலைகள் வளர்ந்தன. தமிழ் நாட்டு வரலாற்றில் அக் காலத்தைப் பொற்காலம் என்பார்கள். அக்காலத்தில் நாடகம் ஓரளவு நாட்டில் நன்கு உலவிற்று என்னலாம். அக்காலத்தில் சிறந்த அரசனாக விளங்கிய இராசராசான் காலத்தும், அதற்குப் பிறகும், அவன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயிலில் 'இராஜ ராஜ விலாசம்' என்ற நாடகம் நடைபெற்றதாகக் கல்வெட்டுக்கள் மூலம் அறிகிறோம். அக்காலத்தில் 'நொண்டி நாடகம்' என ஒன்று நடை பெற்றதாகவும் தெரிகின்றது. அவை எல்லாம் இப் போது கிடைக்கவில்லை. அக்காலத்திய இலக்கியங்களாகக் கொள்ளும் சயங் கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணியும், ஒட்டக் கூத்தர் பாடிய உலாக்களும், அவை போன்ற சிலவும் நாடக அமைப்பிலே உள்ளமையை இன்றும் அவற்றைப் படிப்பவர்கள் நன்கு அறிவார் களன்றோ! அக்காலத்துக்குப் பிறகும் ஒரு சில நூற்றாண்டு களுக்கு முன்னும், சென்ற நூற்றாண்டிலும், பள்ளு, குறவஞ்சி போன்ற இலக்கியங்கள் நாடக அமைப் பிலேயே எழுதப் பெற்றன. வயலில் வேலை செய்யும் பள்ளரின் வாழ்வினை மையமாகக் கொண்டு பள்ளும், மலையில் வாழும் குறவரை மையமாகக்கொண்டு குறவஞ்சி யும் எழுதப் பெற்றன; அவற்றுள் ஒருசில இன்னும் வாழ்கின்றன. ஒரு சில நாடகமாகவும் நடிக்கப் பெறு

கின்றன. இக்காலத்தில் ஊர்தொறும் தெருக் கூத்துக்கள் நாடகமாக நடிக்கப்பட்டதெனவும் அவர்களுக்குக் கிராமத்தார் சிறப்புச் செய்தார்கள் எனவும் காண்கின்றோம். பிற்காலச் சோழரும் பாண்டியரும் கட்டிய பெரிய கோயில்கள் கலைவளர்க்கும் கூடங்களாக விளங்கின. அக்கலைகளுள் நாடகமும் ஒன்று.

மேலை நாட்டு அறிஞர்கள் தமிழ் நாட்டில் வந்து, தமிழ் பயின்று. அதை வளர்க்க நினைத்த காலத்தில் தமிழில் உரைநடை அதிகமாக வளர்ந்தது. அக்காலத்தில் சில கதைகளும் வளர்ந்தன. அக்கதைகளை ஒட்டி நாடகங்களும் நாட்டில் உலவின, சில கதைகளை நாடகங்களாகவே நாட்டில் எழுதினர் சிலர். அவற்றுள் சிறந்தது 'இராமநாடகக் கீர்த்தனை' என்பது. இது இன்றளவும் வாழ்கின்றது. இராமாயணத்தை அப்படியே நாடகமாக்கிய நூல் இது. இதுபோன்றே சில வழி நடைப் பதங்களும், நொண்டிச் சிந்துகளும், காவடிச் சிந்துகளும் நாடகங்களுக்கு ஏற்ற பாடல்களாக அமைந்தன. இவைகளை அன்றிச் சென்ற நூற்றுண்டிலும் இந்த நூற்றுண்டிலும் சாதாரணக் கல்வியறிவில்லாத கிராமமக்கள் பலரும் கண்டு மகிழ்ந்து பொழுது போக்குவதற்கு எனப் பலப்பல நாடகங்கள் எழுதப்பெற்று நடிக்கப் பெற்றன. அவை பெரும்பாலும் புராண அடிப்படையில் அமைந்தனவே

நாடகங்களைச் சிறந்த இலக்கியமாகக் கொண்டுவர நினைத்த அறிஞர் சிலர். அவருள் சென்ற நூற்றுண்டு இறுதியில் வாழ்ந்தவர் சுந்தரம்பிள்ளை அவர்கள். அவர்கள் எழுதிய 'மனோன்மணியம்' இன்றளவும் தமிழ் நாட்டில் மிகச் சிறந்ததாகப் போற்றப்படுகிறது. அது செய்யுள் நடையில் இருப்பினும் படிக்கவும் நடிக்கவும் மக்களால் விரும்பி ஏற்றுக்கொள்ளப் பெறுகின்றது; நடிப்புக்குச் சில மாற்றங்களைச் செய்து கொள்கின்றனர்; அவ்வளவே. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்கள் கலாவதி, மான விஜயம், ரூபாவதி போன்ற நாடகங்களை எழுதினர்கள். அவர்தம் 'நாடக இயல்' என்ற நூல்

சிறந்து போற்றப்பட வேண்டிய ஒன்றாகும். இன்றும் வாழ்கின்ற பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள் ஐம்பதுக்கும் மேற்பட்ட பல நாடகங்களை எழுதியுள்ளார்கள். எனினும் அவையெல்லாம் காலம் கடந்து வாழவில்லை எனலாம். ஒரு சில நாட்டில் நடிக்கப் பெறுகின்றன.

தற்காலத்தில் வானொலியின் மூலமும் தமிழ் நாடகம் ஓரளவு நடைபெற்று வருகின்றது என்றாலும் அரசாங்கம் அத்துறையில் இன்னும் அதிகமாகக் கருத்திருத்த வேண்டும் என்று கூறுவேன். தமிழ் நாட்டுப் பண்பாட்டு அடிப்படையில் அமைந்த நாடகங்கள் அங்கே அதிகமாக இடம் பெறாத காரணத்தால் தமிழ் மக்கள் அவற்றை ஒதுக்குகிறார்களோ என எண்ணவேண்டியுள்ளது. தக்கவர்களைக் கொண்டு, நல்ல நாடகங்களை எழுதுவித்து, நல்ல நடிகர்களைக் கொண்டு அவற்றை நடிக்க ஏற்பாடு செய்தால் வானொலி வழி நாடகங்களை நன்கு வளர்க்க வாய்ப்பும் வசதியும் உள்ளன.

நாடகம், இலக்கியமாக அவ்வளவு நல்ல முறையில் தமிழில் இன்று வளரவில்லை. எங்கோ ஒரு சில புலவர்கள் சிறு சிறு நாடகங்களை எழுதுகிறார்கள் என்றாலும் சிறு கதை, நாவல்கள் போன்று நாடகம் வளரவில்லை என்பதை நாட்டில் இன்று வெளியாகும் நூல்களின் பட்டியல் நன்கு காட்டுகின்றது. பல அறிஞர்கள் இத்துறையில் கருத்திருத்த வேண்டுமெனக் கேட்கின்றேன்.

இவ்வாறு இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்—தொல்காப்பியனார் காலத்துக்கு முன்—தோன்றிய நாடகத் தமிழானது இடையிடையே நலம் கெட்டாலும் இன்று நிலை தளர்ந்திருந்தாலும்—மறையாது வாழ்ந்து வளர்ந்து வருகின்றது என்பது கண்கூடு. சில நல்ல முறையில் நடிக்கப்பெற்றும் சில பயிலப் பெற்றும் வருகின்றன. இன்னும் தமிழ்நாட்டு நாடக மேடையைப் போற்றுபவர் அற்று விடவில்லை. இன்று தமிழ் நாட்டில் உண்டாகியிருக்கும் நல்ல விழிப்பு இந்தக் கலையை மேன்மேலும் வளர்க்கும் என்ற நம்பிக்கையோடு அமைகின்றேன்.